கீதகோவிந்தம்

மொழி பெயர்ப்பு

பஜ 7180

முனைவர். பழனி அரங்கசாமி

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - தமிழ்நாடு - 613 010

கீத கோவிந்தம்

முனைவர் பழனி. அரங்கசாமி

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-385-7

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 342

திருவள்ளுவராண்டு 2040, ஐப்பசி - நவம்பர் - 2009

நூல்	:	கீதகோவிந்தம்
ஆசிரியர்	:	முனைவர் பழனி. அரங்கசாமி
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு - நவம்பர் 2009
பக்கம்	:	112 + 4 = 116
தாள்	:	டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டு	:	சாதாக்கட்டு
படிகள்	:	1200
விலை	:	உரூ. 70.00
ஒளியச்சு	:	முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், தெற்கு வீதி, தஞ்சாவூர்.
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

முன்னுரை

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறையின் சார்பில் ஆண்டுக்கு ஒரு நூல் வெளியிட வேண்டும் என்கிற திட்டத்தின்கீழ் *கீதகோவிந்தம்* எனும் வடமொழி நூலினைப் பெயர்ப்புக்காக எடுத்துக் கொள்ளுதற்கென்று பல்கலைக்கழக அனுமதியினைப் பெற்றேன். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இந்நூல் எட்வின் அர்னால்டு, பார்பரா ஸ்டோலர் மில்லர் போன்ற பன்மொழி அறிஞர்களால் ஆங்கிலத்தில் பெயர்க்கப் பெற்றுள்ளது. இவருள் பார்பரா அம்மையாரின் ஆங்கிலப் பெயர்ப்பினை அடியொற்றியே இந்நூலைத் தமிழில் பெயர்த்துள்ளேன். முப்பது பக்கங்கள் அடங்கிய ஓர் ஆராய்ச்சி முன்னுரையும் இத்துடன் எழுதிச் சேர்த்துள்ளேன்.

கீதகோவிந்தம் இசைத்துப் பாடுதற்கேற்ற ஒரு சிற்றிலக்கியமாக வடமொழியில் போற்றப்பெறுகிறது. மேற்கு வங்காளம், ஒரிசா, உத்தரப்பிரதேசம் மற்றும் கேரள மாநிலங்களில் ஆலய வழிபாட்டில் இந்நூலின் அஷ்டபதிகளை நடனத்துக்கேற்ற பாடலாக இசைத்துப் பாடுகின்றனர். கீதகோவிந்தக் காட்சிகளை ராஜஸ்தான் மாநிலத்தில் ஓவியமாகச் சித்திரித்துக் கண்காட்சிகளில் பார்வைக்கு வைக்கின்றனர். இப்படி நாடு தழுவிய ஒரு சிற்றிலக்கிய நூல் தமிழிலும் இருக்கலாமே எனும் ஆர்வத்தில் இம்முயற்சியில் ஈடுபட்டேன். ஆனால், இதனுள் வரும் தமிழ்ப் பெயர்ப்புக் கவிதை

களை வடமொழி அஷ்டபதிகளைப்போல இசைத்துப் பாடலாம் என்று உறுதியாகக் கூற இயலாது.

தேர்ந்தெடுத்த சொற்கூட்டினாலே மற்றும் வாக்கிய அமைப்புகளினாலே பெறப்படும் இசைப்போக்கினை மொழிபெயர்க்க இயலாது. பொருளை அடிப்படையாகக் கொண்ட பெயர்ப்புக் கலையில் சொற்களை ஆதாரமாகக் கொண்ட இசையினை மொழிபெயர்க்க இயலாது என்பது நியதி. அந்த நியதிக்கு உட்படுத்திக்கொண்டுதான் இந் நூலைப் பயில வேண்டும்.

இதனை அச்சிட்டு வெளியிடுதற்கு அனுமதி வழங்கிய துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றியும் வணக்கமும். அழகுற அச்சிட்டளித்த பதிப்புத்துறை இயக்குநர் திரு. வை. கண்ணபுரக்கண்ணன் அவர்களுக்கும் பணியாளர் களுக்கும் எனது வணக்கங்கள் உரியன.

தஞ்சாவூர் பழனி. அரங்கசாமி

16.08.2009

ஆராய்ச்சி முன்னுரை

ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் உள்ள உறவினை மானுடக் காதலாகக் காண்பது வைணவ மரபு. மகாவிஷ்ணு விடம் ஆராத காதல் கொண்டோர் தமது ஆழ்ந்த இறையன் பினை மானுடன் ஒருவன் மங்கையிடம் காணும் சுகத்திற்கு ஒப்பிட்டுக் காட்டுவர். ஏறத்தாழ இத்தகைய மானசீக இறை யுணர்வுக் காதல்தான் இஸ்லாத்தில் சூபிசத்தைத் தோற்று வித்தது.

வைணவரின் காதற் கடவுளாகிய கண்ணன் மகா விஷ்ணுவின் எட்டாவது அவதாரமாகக் கருதப்படுகிறான். அவன் பிருந்தாவனத்தில் வாழ்ந்த காலத்தில் அவனது குழலோசைக்கு மயங்கிய கோபியர்கள் குடும்பத்தினையும், குழந்தைகளையும், கணவரையும் துறந்துவிட்டு கண்ணனு டன் சுற்றி வந்ததாகப் புராணம் தெரிவிக்கிறது. ஆன்மீகக் கண்ணோட்டத்தில் இதற்கு விளக்கம் கொடுக்கிற பவுராணி கர்கள் கோபியர்கள் தமது உறைவிடத்தை விட்டு வெளியேறி கண்ணனை அவாவிய செயல் உலகத்தைத் துறந்த ஆன்மாக் கள் ஆண்டவனை அவாவி நிற்பனைக் காட்டும் என்பர்.

இத்தகு பிருந்தாவனக் கோபியருள் அயனகோர்சர் என்பாரின் மனைவியாக இருந்த ராதா என்பவரும் அடங்கு வார். இந்த ராதையிடம் கிருஷ்ணன் கொண்ட காதல்

பல்வேறு வைணவக் கவிஞர்களின் மையக் கருத்தாக விளங்கி வந்துள்ளது. அவருள்ளும் ஜெயதேவர் எழுதிய கீதகோவிந்தம் மிகவும் புகழ்பெற்ற இசை நாடக நூலாகும். வங்க மொழியில் சண்டிதாசரும், மைதிலி மொழியில் வித்யாபதியும், ராதாகிருஷ்ண லீலையைப் பற்றி எழுதியிருந்தாலும், வடமொழியில் எழுதப்பட்ட கீதகோவிந்தமே பெரிதும் போற்றப் பெறுகிறது.

ஜெயதேவர் என்னும் வடமொழி வாணர் இயற்றிய கீதகோவிந்தம் ஒரு வைணவ இலக்கியம். நாடகத்துக்கு இயைந்து வரும் இசைப்பாடல்களால் இயன்றது. கண்ணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட இந்நூல் வசந்த காலத்தில் கண்ணன் மீது இராதா கொண்டிருந்த ஆழ்ந்த காதல் உணர்வைப் புலப்படுத்துகிறது. ஆன்மீகக் கண்ணோட்டத்தில், இறைவன் மீது உயிர்கள் கொண்ட பேரன்பினை இந்நூல் காட்டுவதாகவும் கொள்ளலாம்.

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வங்க நாட்டில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வடமொழியில் எழுதப்பட்ட இக்காதற்பாடல் காலப்போக்கில் ஏறத்தாழ இந்திய நாடெங்கணும் பரவியது. இதன் விளைவாக இந்நூலின் தாக்கம் மொழி இன வேறுபாடின்றி, இசை, நடனம், நாடகம், ஓவியம் ஆகிய பழம்பெரும் கலைகள் அனைத்திலும் காணப்படுகிறது. பாரம்பரியம் மிக்க இந்திய நடனக் கலைகளாகிய பரதம், கதகளி, குச்சிப்புடி, மணிப்புரி போன்ற நாட்டிய வகைகளின் அரங்கேற்றத்திலும் கீத கோவிந்தப் பாடல்களைப் பயன்படுத்தி வருகின்றனர். குஜராத்தில் பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கோவில் கல்வெட்டுகளில் இந்நூலைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஒரியா மற்றும் மலையாள இலக்கியங்களிலும் இந்நூல் ஒரு பக்தி இலக்கியமாகக் கருதப்படுகிறது.

ஒரிசாவில் புவனேஸ்வர் நகரத்து ஜகந்நாதர் ஆலயத்தில் இரவு வழிபாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளாக கீத கோவிந்தப் பாடல்கள் இசைக்கப்பெறுகின்றன. இவற்றைப் பாடியும் ஆடியும் இறைவழிபாடு செய்யும் குலத்தினர் மகாரிஸ் (Maharis) என்று அழைக்கப்பெறுகின்றனர். வங்களாத்தில் பீர்பம் மாவட்டத்தில் கெந்துளி எனுமிடத்தில் ஆண்டுதோறும் நடக்கும் வசந்தோற்சவத்திலும் இந்நூற் பாடல்களைப் பாடுகின்றனர். இந்த ஊரில் தான் ஜெயதேவர் பிறந்தார் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

நேபாளத்தில் காம தேவனுக்கு விழா எடுக்கும்போது இப்பாடல்களைப் பாடுகின்றனர். தென்னிந்தியாவில் வடமொழி வாணரிடையே கர்னாடக சங்கீத பாணியில் கீத கோவிந்தப் பாடல்கள் இசைக்கப்படுகின்றன. கேரளக் கோயில்களில் 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதற் கொண்டு கீதகோவிந்தப் பாடல்கள் இறை வழிபாட்டின் போது இசைக்கப்படுகின்றன. கதகளி ஆட்டத்தில் இந் நூலின் அஷ்டபதிகளைக் கர்நாடக சங்கீதமாக இசைத்துப் பாடுகின்றனர். *அஷ்டபதி அட்டப்பிரகாரம்* எனும் தலைப்பில் மலையாள மொழியில் 1964இல் கே. ராகவன் பிள்ளை என்பார் எழுதிய பெயர்ப்பினை கேரள பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. நாட்டிய அரங்கேற்றம், வாய்ப்பாட்டு ஆகியவற்றோடு இப்பாடற் கருத்துகளை இராஜபுதன மாநிலத்தில் ஓவியங்களாகவும் தீட்டியுள்ளனர்.

நூலாசிரியரின் வாழ்வு

கீதகோவிந்தம் எனும் இசை நாடக நூலை எழுதிய ஜெயதேவரின் வாழ்க்கையைப் பற்றிய பாரம்பரியக் கதைகள் அனைத்தும் இவர் ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தவர் என்று கூறுகின்றன. பூரி நகரில் உள்ள இறைவன் ஜகந்நாதரிடம் இவர் தணியாத காதல் கொண்டவர். இவர் வடமொழி பயின்று சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தவர். வரன்முறைக்

கல்வியை விடுத்துச் சின்னாட்களில் துறவு மேற்கொண்டு இறைபணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். உலகின் எப்பொருளின் மீதும் எந்தவிதமான பற்றும் கொள்ளக்கூடாது என்று விரதம் பூண்டவர். நாடோடியைப் போலத் துறவு வாழ்க்கை நடத்தியபோது முதல்நாளிரவு படுத்து உறங்கிய மரத்தடியில் கூட மறுநாள் படுக்கமாட்டா ராம். அப்படியொரு பற்றில்லாத நிலையைப் பின்பற்றியவர்.

முதிர்ச்சியான ஒரு துறவு நிலையில் இப்படி வாழ்ந்த ஜெயதேவரை இன்னொரு பிராமணர் சந்தித்தார். பூரிநகரைச் சார்ந்தவர் அவர். இறைவன் ஜகந்நாதரின் கட்டளைப்படி கோயிற் பணிபுரியும் தனது மகள் பத்மாவதியை ஜெயதேவர் மணந்து கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்துகிறார். இப்படித்தான் ஜெயதேவரை அப்போது மணந்த பத்மாவதி யும் தன் கணவனுக்குப் பக்தியோடு பணி செய்தவள். அவரது கவிதை லயத்துக்கேற்ப அபிநயம் செய்து ஆடியவள். இப்படி பாடலும் ஆடலும் இணைந்து பிறந்ததே கீதகோவிந்தம்.

இத்தகு கவிதையினை எழுதிக் கொண்டிருக்கும் போதே ஒரு சமயம் விபரீதமான ஒரு கற்பனை ஜெயதேவரது உள்ளத்தில் எழுந்தது. ஊடலில் வெற்றி அடைந்தமைக்குச் சான்றாக பத்மாவதியின் பாதங்களைத் தன் தலையில் வைக்குமாறு கண்ணன் வேண்டிக்கொள்வதாக வருவதே அக்கற்பனை. இக்கருத்தினைப் பாடலாக எழுதுவதற்குக் கவிஞர் ஒரு கணம் தயங்கினார். எனவே பாடலை முற்றுமாக எழுதாமல் வெளியில் குளிக்கச் சென்றுவிட்டார். ஆயினும் கண்ணனே கவிஞரின் உருவில் வந்து பாடலை நிறைவு செய்ததோடன்றி வீட்டில் ஜெயதேவராகவே உணவையும் உண்டு மறைந்து விட்டார். இதனை அறியாத பத்மாவதி குளிக்கச் சென்ற தனது கணவர் ஜெயதேவர் வீடு திரும் பியதும் தான் முன்னதாக உணவு பரிமாறியது கணவன் உருவில் வந்த இறைவனுக்கே என்னும் செய்தியை உணர்ந்து

வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார் என்பது கதை. இவரைப் பற்றி வழங்கும் பற்பல கதைகளுள் பிறிதொன்றும் குறிப் பிடத்தக்கது.

அவர் முதியவராகிய நிலையில் அன்றாடம் அதி காலையில் அவர் குளிப்பதற்கேற்றவாறு கங்கை நதியும் தனது போக்கினை மாற்றிக் கொண்டு அவரது இல்லத்தின் அருகே ஓடியதாம். நிலம், நீர் போன்ற இயற்கைக் கூறு பாடுகளையும் தன்வயப் படுத்தும் அளவிற்கு அவரது கவிதை இசை நயமும் கருத்துப் பொலிவும் பெற்றிருந்தது என்று கருதலாம்.

கவிஞரது பிறந்த ஊர் பற்றி வெவ்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இந்நூலில் மூன்றாம் பகுதியின் பத்தாம் பாடலில் குறிப்பிடப்படும் கிந்து பில்வம் என்னும் ஊரே கவிஞரது பிறப்பிடம். இது பூரிக்கு அருகில் உள்ளது. வங்க மாநிலத்தில் பீர்பம் மாவட்டத்தில் இப்பெயரில் உள்ள ஊரில்தான் ஜெயதேவர் பிறந்தார் என்றும் கூறப்படுகிறது. மேற்கு வங்கத்தில் கெந்துளி என்பது ஒரு சிற்றூர். மகான் சைதன்யரின் வழி நின்று கண்ணனை வழிபடும் வைணவர் கள் நிறைந்த ஊர். இதுவே ஜெயதேவர் பிறந்த ஊர் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. கவிஞரது சொந்த ஊர் பற்றிய கருத்தில் வேறுபாடுகள் இருப்பினும், அவர் வாழ்ந்த காலம் பன்னி ரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பது அனைவருக்கும் ஒத்த செய்தியாகும்.

நூலும் காலமும்

கீதகோவிந்தம் என்னும் இந்த இசைநாடக நூலே யன்றி *சதுக்திகர்ணாமிர்தம்* எனும் நெடிய பாடல் தொகுப் பின் ஒரு பகுதியினையும் ஜெயதேவர் எழுதியதாகக் கூறுவர். இவர் எழுதிய நூல்களைப் பற்றிய பிற குறிப்புகள் இல்லை. எழுதியதாகக் கூறப்படுவனவும் பிராகிருதத்தில் எழுதியமை

யான் தற்போது கிடைத்தில. வடமொழியில் எழுதப்பட்ட *கீதகோவிந்தம்* என்னும் இத் தொகுப்பு நூல் கி.பி. 1179-க்கும் 1205-க்கும் இடையில் வங்காளத்தை ஆண்ட லெட்சுமண சேனன் காலத்தில் தொகுக்கப்பட்டதாகும். இத்தொகுப்பில் வரும் ஏனைய கவிஞர்களான உமாபதி தாரை, சரணை, கோவர்தன், தோயி போன்றோர் கீத கோவிந்தத்தின் தொடக் கத்திலேயே ஜெயதேவரால் குறிக்கப்படுகின்றனர். இவர் களை ஆதரித்ததாகக் கருதப்படும் லட்சுமணசேனன் பரம வைணவனாகத் தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டவன். இவனைத் தலைவனாகக் கொண்ட *பவனதூது* எனும் ஒரு சிறு காப்பிய நூலை தோயி எழுதியுள்ளார். வடமொழி வாணர்களை லட்சுமணசேனன் பெரிதும் ஆதரித்தவன். இவனது கல்வெட்டுகள் அனைத்தும் ஓம், ஓம், நமோ நாராயணா என்று தொடங்குவதே இதற்குச் சான்றாகும். ஆயினும் ஜெயதேவர் இம்மன்னனது அவையில் தான் கீதகோவிந்தத்தை இயற்றினார் என்று உறுதியாகத் தெரியவில்லை. தாமே இயற்றிய பிறகு அவனது அவையில் இக்கவிதை நூலை அவர் அரங்கேற்றம் செய்திருக்கலாம்.

தலைசிறந்த வேதாந்தியாக இருந்த ராமானுஜர் 12-ஆம் நூற்றாண்டில் பூரி நகருக்கு வந்து அப்பகுதியினை ஆண்ட அனந்த வர்ம சோடகங்கதேவன் (1078 - 1147) எனும் மன்னனை சிவாச்சாரியாரின் தொடர்பிலிருந்து துண்டித்து விட்டு வைணவத்துக்கு மாற்றினார் என்பது பாரம்பரியச் செய்தி. இக்கங்கதேவனே பூரியிலுள்ள ஜகந்நாதர் ஆலயத்தைக் கட்டத் தொடங்கியவன். இவனது பேரன் அனங்கபீம தேவன் காலத்தில்தான் அந்த ஆலயம் முழுவது மாகக் கட்டுவிக்கப் பெற்றது. கீதகோவிந்தத்தை இயற்றிய ஜெயதேவர் இந்திய நாடெங்கணும் பயணம் செய்தபோது பூரியில் ஜகந்நாத பக்தியில் ஆழ்ந்த பத்மாவதி என்னும் வைணவ நங்கையின் வயப்பட்டார். வைணவப் பற்றில் முழுதுமாகத் தான் ஈடுபட்டதைக் குறிப்பதற்கென்றே பத்மா வதியை ஜெயதேவர் மணந்தார் என்ற உலக வழக்காற்றுச்

செய்தியும் உண்டு. பத்மாவதி அழகுடையவள் என்பதோடு கற்பிற் சிறந்த நங்கையாகவும் திகழ்ந்தவள். இவளது ஆழ்ந்த இறைவழிபாட்டில் உளங்கனிந்த பூரி ஜகந்நாதர் இவளுக்குக் காட்சி கொடுத்ததாகக் கூறுவர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் பூரியில் ஜகந்நாதர் ஆலயத்தில் வழிபாட்டுச் சடங்குகளில் பயன்படுத்தப்படு கின்ற ஒரே இசைநூல் என்னும் அளவிற்கு பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் *கீதகோவிந்தம்* பிரபலமாகி விட்டது.

வைணவ சிரேஷ்டரான மகான் சைதன்யர் பதி னாறாம் நூற்றாண்டில் பூரிக்கு வந்து கீதகோவிந்த கானத்தை ஆலயத்தில் செவிமடுத்துப் பரவசம் அடைந்தார் என்று கிருஷ்ணதாசக் கவிராஜா எழுதிய *சைதன்ய சரிதாம்ருதம்* கூறுகிறது.

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் வடமொழியினை பிராகிருதம், அபப்பிரம்சா, சமஸ்கிருதம் என்னும் மூவகை யாகப் பிரித்துக் காண்பர். கிளைமொழிகளாகவே கருதத் தகும் இம்மூன்றிலும் அபப்பிரம்சாவின் இடைக்கால யாப் பமைதியைத் தழுவியே *கீதகோவிந்தம்* இயற்றப்பட்டுள்ள தாக அனுமானிக்கப்படுகிறது. ஆர். பிஸ்கெல், சுனிதகுமார் சாட்டர்ஜி போன்ற இந்திய இயல் அறிஞர்கள் கீதகோவிந்தம் முதலில் அபப்பிரம்சாவில் எழுதப்பட்டு அதன் பின்னரே சமஸ்கிருதத்தில் பெயர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருது கின்றனர். யாப்பு, நடையழகு, கட்டமைதி ஆகியவற்றில் ஒரு தனித்தன்மை இருந்தாலும், பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் வடமொழியில் நிலவிய இலக்கிய நடையின் சாயல் இந்நூலுள் இருப்பதை மறுப்பதற்கில்லை. சொல்லழகும், பொருளமைதியும் இணைந்து வரும் பற்பல செய்யுட்கள் இந்நூலுள் காணப்படுகின்றன. பன்னிரண்டு பிரிவுகளாக இந்நூல் இருப்பினும் இதனை இருபத்து நான்கு அஷ்டபதி

களாகப் பார்ப்பதுவே மரபு. எட்டு பாடல்கள் அடங்கிய பகுப்புக்கு அஷ்டபதி என்று பெயர். மூலநூலில் ஒவ்வொரு அஷ்டபதியிலும் தாளமும் ராகமும் வெவ்வேறானவை. நடனத்துக்கு ஏற்றபடி ராக தாளத்தோடு இந்த இசை நாடகத்தை எழுதிய ஜெயதேவர், இசையிலும் நடனத்திலும் வல்லவராக இருந்திருக்க வேண்டும்.

நூற்பொருளும் சொல்லழகும்

ஆழ்ந்த கலையுணர்வும், ஆன்மீகப்பற்றும் கலந்த ஒரு தெய்வீக இசை நாடகப் பாடலாகக் கருதத் தகுவதே கீத கோவிந்தம். பல்வேறு ராகங்களில் நயமுறப்பாடுதற்கும், அபிநயத்தால் விளக்குதற்கும் ஏற்றவாறு இந்நூல் எழுதப் பட்டு உள்ளதென போஜர் எழுதிய *சித்ர ராக காவியம்* குறிப் பிடுகிறது. உயர் தனிக் காவியப் புலவர்களாகிய காளிதாசர், பர்த்ருகரி போன்றோர் கற்றுணர்ந்த அறிஞருக்கே ஏற்ற காவி யங்களையும் நாடகங்களையும் செய்திருக்க ஜெயதேவர் மட்டுமே இலக்கியச் சுவையினையும், இறையுணர்வையும் இணைத்து எல்லோருக்கும் ஏற்ற இசைநாடகக் கவிதை யினை இயற்றியுள்ளார். எனவே, இந்நூல் ராதா-கிருஷ்ண பிரேமையினை சிருங்கார ரசம் நிறைந்த சிறு காவியத்தில் வெளிப்படுத்துகிறது எனலாம்.

வசந்த ருதுவில் கண்ணன் ராதையிடம் கொண்ட அளவற்ற பாசத்தைத் தமக்கே உரிய தனித்துவ முறையில் ஜெயதேவர் இசைநயம் மிகுந்த அழகிய கவிதைகளினால் சிறப்புறப்பாடுகிறார். இந்நூலின் யாப்பமைதி வடமொழி யில் பாரம்பரியமாகக் காணப்படுவனவற்றினின்றும் வேறு பட்டதாகும். ஆயினும் பாடலின் சொல்லமைதியும், இலக் கிய நடையும் கருத்தாழமும் காளிதாசனின் *குமார சம்பவம், மேகதூதம்* போன்ற தலைசிறந்த இலக்கியப் படைப்புகளை நினைவுபடுத்தும் முறையில் அமைந்துள்ளது என்பது பார்பரா மில்லரின் கருத்தாகும்.

கீத கோவிந்தத்தின் தனித்தன்மை பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். வடமொழியில் உள்ள மரபு ரீதியான எந்த இலக்கிய வகையினுள்ளும் அதனை அடக்க இயலவில்லை. ஆயினும் போஜர் குறிப்பிடும் சித்ரராகக் காவ்யம் எனும் பாடல் வகையினூடு இந்நூலின் பாடல்கள் ஒத்துப் போகின்றன என்று *சிருங்காரப் பிரகாசம்* எனும் நூலில் பேராசிரியர் வி. ராகவன் குறிப்பிடுகின்றார். அபிநயத்துக்கு ஏற்றவாறு ராகத்தை அமைத்து இவ்வாறு பாடப் பெற்ற இசை நாடக நூல்கள் இலக்கிய உலகில் மிகவும் குறைவு என்பதே இந்நூலின் தனித்தன்மையாகும். தாளவிருத்தமும், சந்த விருத்தமும் அட்சர விருத்தமும் அப்படி ஒரு அற்புதமான முறையில் இந்நூலுள் ஒருங்கிணைந்து காணப்படுகின்றன.

பாடல்கள் ஒவ்வொன்றும் நிகழிடத்தைப் புலப்படுத்தி அதனைப் பாடுவோரது உட்கிடக்கையினைக் கதை போலச் சொல்லும் சிறப்பு வாய்ந்தனவாகும். ஆயினும் இடையிடையே வரும் சிற்சில பாடல்கள் நேரடியாகக் கதை நிகழ்ச்சிக்குத் தொடர்பில்லாதன. இருப்பினும் அவை அழகிய இயற்கைக் காட்சிகளை நினைவுபடுத்தி நிகழ்விடத்தின் பின்னணியை சுவைபடச் சொல்லுகின்றன. திரைச்சீலையில் அழகான ஓவியமாக வரையக் கூடிய அளவிற்குக் காட்சிப் பின்னணியைத் தன்பாற் கொண்டுள்ள கீழ்க்காணும் பாடல்களைப் போன்றவை நூலுக்கு அணி செய்யும் தன்மை வாய்ந்தனவாகும்.

வெப்பம் மீதூர்ந்த மண்ணக மடியில்
எண்ணிலாக் காலம் நெளிந்து சுருண்டு
அந்தண் சந்தனக் குன்ற ணைக்கும் காற்று
குளிர்பனிச் சேற்றிலே குழைந்து கலந்திட
இமயத்து மாமலையை நோக்கி அங்கு வீசும்.

மாமரக் கிளையின் உச்சிகள் தோறும்
செவ்விதின் முகிழ்க்கும் அரும்புகள் கண்டு
மெல்லவே மேலெழும் குயிலின் கீதம்
களிப்புறு மகிழ்ச்சியைக் காட்டியே நிற்கும்.

எதுகை மோனையும் உணர்வுகளை எழுப்பும் படிமக் காட்சியும் சிற்சில பாடல்களில் மிகுதியும் காணப்படுகிறது. ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதிப் பகுதி ஜெயதேவர் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வதாக அமைந்துள்ளது இந்நூலின் தனி இயல்பாகும். கண்ணனின் அருளைத் துய்ப்ப தற்கு முருகியல் உணர்வினை அடித்தளமாக அமைத்துக் கொண்டுள்ள கவிஞர் இந்த அருள் வெள்ளத்தில் தானும் ஒரு பங்கு என்பார்போல ஒவ்வொரு கடைசிப் பாடலிலும் தன் பெயரையும் சேர்த்துக் கொள்ளுகிறார். ஜெயதேவர் என்னும் தன்னுடைய பெயரைக் கண்ணன் பெயரோடு ஜய ஜய ஜயதேவ ஹரே என்று கூறி இணைத்துக் கொள்வதை இக் கவிதை நூலில் தொடர்ந்து காண்கிறோம். ஒவ்வொரு பாடல் தொகுதியின் முடிவிலும் தன்னுடைய பெயரை இணைத்துப் பாடிக் கொள்வது இவரது இயல்பாகத் தோன்றுகிறது. பாடுவோன் தன் பெயரையும் இணைத்துப் பாடிக் கொள்வது அந்நாளைய இலக்கிய மரபாகவும் இருந்திருக்கலாம்.

இருபொருள்படும் சொற்களை ஓசைநயத்தோடு கையாண்டு பொருளை விளக்கிச் செல்லும் பாங்கினை இந் நூலில் காணலாம். இந் நூலாசிரியர் கண்ணனை மாதவன், மதுசூதனன், அரி போன்ற பெயர்களால் அழைக்கிறார். ஜெயதேவன் என்னும் தன்னுடைய பெயரையே கண்ணன் என்னும் பொருள்படும்படி யாகப் பல்வேறிடங்களில் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். நூலில் காணப்படும் சப்தாலங்காரச் சிறப்பிற்கேற்ப ஒலியும், சீரும், அசையும் சொற்றொடரும் சிறப்புற அமைந்துள்ளன. இந் நூலின் பல்வேறு பிரதிகளிலும் ஒவ்வொரு பாடலுக்குரிய ராகமும் குறிக்கப்பட்டுள்ளது. ஓலைச்சுவடிகளில் காணப்

படும் பழைய ராகங்களை ஒட்டியே ஒரிசா, வங்காளம் ஆகிய மாநிலங்களில் இப்பாடல்களைப் பாடுகின்றனர். சென்னை, மைசூர், குருவாயூர் போன்ற இடங்களில் பின்பற்றப்படும் ராகம் செம்மங்குடி சீனிவாச அய்யங்கார் அவருடைய பதிப்பில் மெட்டு அமைத்தபடியே பின்பற்றப்படுகிறது. இசை அமைப்புக்கென்றே செம்மங்குடி திருத்தம் செய்த கீத கோவிந்தப் பதிப்பு திருப்பூணித்துறை வடமொழிக் கல்லூரியினரால் 1962-இல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இப்பழைய பதிப்பில் உள்ள பதினொரு ராகங்களே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை.

சந்தம், தொடைநயம், முற்றுமோனை ஆகிய யாப்பிலக்கணக் கூறுகளைச் சொல்லாட்சியில் கையாண்டு தாளகதிக்கேற்ற ஓசையும் ஒலியுமான உயர்ந்த கவிதையினைப் படைத்துள்ளார் ஜெயதேவர். வடமொழி இலக்கியத்தில் அவரை ஒப்பாரும் மிக்காரும் இலர் என்றே கூறிவிடலாம். வடமொழி இலக்கியத் திறனாய்வாளராகக் கருதப்படும் ஆனந்தவர்த்தனர்கூட கவிதையில் காமச் சுவையினை உண்டுபண்ண விரும்பும் கவிஞனுக்கு எதுகையும் மோனையும் தடையாக இருக்கும் என்று கூறுவர். அந்தக் கருத்தும்கூட ஜெயதேவரின் கவிதையில் பொய்த்து விட்டது. ரஸம், மது, விலாசம் போன்ற சொற்களைப் பல்வேறு பொருள் தருமாறு பயன்படுத்தி தனது சொல்லாட்சியின் தனித்தன்மையை நிறுவியுள்ளார் ஜெயதேவர்.

யாப்பமைதியும், சீர்மையும் செறிவும், சொல்லழகும் பொருந்திய மொழி நடையினைப் பெற்றுள்ளமையால், பாடலும் கவிதையும் பேச்சு மொழியினின்றும் மேம்பட்டு நிற்கின்றன. ஜெயதேவரது பாடல்கள் இத்தகு இயல்புகளோடு சிற்றின்பச் சுவையும் கலந்து தெய்வீகக் காதலை வெளிப்படுத்துவனவாகும். கண்ணனுக்கும் ராதைக்கும் உள்ள பாசத்தை விளக்கும்போது கண்ணனை வழிபடுவோர்

விரும்பத்தகுமாறு பாடலின்கண் சிருங்கார ரகத்தை விளை விக்கின்றார். கீதகோவிந்தத்தின் தொடக்கத்திலேயே கவிஞனது குறிக்கோள் கீழ்க்காணுமாறு விளக்கப்படுகிறது.

மாலவன் சிந்தனை மனதுக்கு வலிமையெனில்
மயக்குறும் அவன் கலைகள் மீண்டுமுனைத்
தூண்டுமெனில்
இன்சுவை தோய் தரும் இசைப்பாடல் இவற்றில்
ஜயதேவன் கூறும் செஞ்சொல்லைக் கேளீர்!

முருகியல் உணர்ச்சிக்கும் ஆன்மீக அனுபவத்திற்கும் இடைப்பட்ட உறவினைக் கீழ்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

ஜெயதேவன் செஞ்சொல்லைச் செவி குளிரக்
கேட்டிடுமின்!
கருமை நீக்கிக் களிப்பினைத் தருவது கண்ணன்
கழலிணைகள்!
யதுவின் தலைவன் இதயம் மகிழ்ந்திட இதனைக்
கூறிடுவாள்.

நூல் நுவலும் பொருள்

கீதகோவிந்தம் என்னும் இசை நாடக நூலின் உட் பொருளை விளக்குகின்ற முறையில் இந்நூலின் முதற்பாடல் அமைந்துள்ளது.

மேகத்திரள் இன்று விண்ணை மறைக்குது
தமால மரங்களோ வனத்தை இருட்டுது
கனக்கும் இரவோ அவனைத் தெருட்டுது
ராதா! அவனை நடத்திச் சென்றிடு!

மாதவன் ராதை உள்ளுறு புணர்ச்சி
யமுனைக் கரையில் நிறைவுறுங்காறும்

அடர்செடி காடுகள் அனைத்தையும் கடந்து
நந்தன் ஆணையால் நகர்ந்தனர் இருவரும்!

இம்முதற் கவிதையில் நேரம், நிகழிடம், பாத்திரங்கள் அவர்களுக்கிடையிலான உறவுகள் பற்றிய செய்திகள் மேலோட்டமாகத் தெரிகின்றன. ஆழ்ந்து விளக்குதற்குரிய நிகழ்ச்சிகளோ குறியீடுகளாக இருப்பதனால், பல்வேறு விதமான விளக்கங்களுக்கு இடமளிக்கின்றன. இப்பாடலின் முதல் நான்கு வரிகளைக் கண்ணன் பேசியதாகக் கருதுவர். ராதை தனக்குள்ளாகவே பேசிக் கொண்டதாகவும் ஒரு கருத்து உண்டு. ஆயினும் கண்ணனின் வளர்ப்புத் தந்தையான நந்தகோபரே ராதையிடம் இதனைப் பேசியதாகக் கருதுவோரே அதிகம். எனின், கண்ணபிரானை அழைத்து வருமாறு ராதையிடம் கேட்டுக் கொள்ளும் நந்தகோபரது நிலைமை ஆன்மாவையும் பரம்பொருளையும் சேர்த்து வைக்கும் ஆச்சார்யனது நிலைக்கு ஒப்பானது என்று கருதலாம். அச்சத்தை ஊட்டுவதாகக் குறிப்பிடப்படும் இரவு கலியுகத்தைச் சுட்டுவதாகவும், ராதையும் கண்ணனும் பிரிவுத் துன்பத்திலிருந்து நீங்கி வெற்றிக்கு அறிகுறியாக இணையும் நல்லோரையில் கலியுகம் நீங்கிவிடும் என்பதாக விளக்கம் கூறுவதும் உண்டு.

கீதகோவிந்தத்தை ஆங்கிலத்தில் பெயர்த்த மோனிகா வர்மா இம்முதற்பாடல் பற்றிக் கீழ்வருமாறு விளக்கம் கொடுக்கிறார்.

நந்தகோபர் ஒரு நாள் தனது கால்நடைகளைக் காட்டுக்கு ஓட்டிச் சென்றார். சிறு குழந்தையாக இருந்த கண்ணனைச் சிறிது நேரம்கூட விட்டுப் பிரிய மனமின்றி கண்ணனையும் தன்னுடனேயே எடுத்துச் சென்றார். ஓய்வுக்காக மரத்தடியில் குழந்தையை உறங்கச்செய்துவிட்டுத் தனது பணியினைச் செய்து கொண்டிருந்தார். மானுட உருவில் குழந்தையாக இருந்த பாலகிருட்டினன் தன்னை முற்றுமாக

நந்தகோபர் உணருமாறு செய்யத் திட்டமிட்டான். தனது மாயையினால் விண்ணக முழுதும் மேகக் கூட்டத்தினால் கருமை படரச் செய்தார். சிறிது நேரத்தில் பலத்த புயல் எழுந்தது. மின்னல் பளிச்சிட்டது. இடியோசை பயங்கரமாக இருந்தது. மேய்ச்சல் நிலத்தில் அங்குமிங்கும் நின்று கொண்டிருந்த மாடு கன்றுகள் மிரண்டன. நந்தகோபர் ஓடிவந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டார். மழையும் 'சோ'வென்று பெய்யத் தொடங்கியது. நந்தகோபருக்கோ ஒன்றும் செய்ய இயலாத நிலை. கால்நடைகளைக் கட்டுப் படுத்துவதா அன்றி கழுத்தைப் பிடித்துக் கொண்டு அழும் கண்ணனைத் தேற்றுவதா? கண்களை மூடியபடி நந்தகோபர் இறைவனைத் தொழுது நின்றார். ஒரு கணம் தாமதித்துக் கண்விழித்துப் பார்க்கும்போது திடீரென்று ராதை அவரை நோக்கி வருவதைக் கண்டார். அந்தி மயங்கும் நேரத்தில் யாருக்கும் புரியாது எங்கிருந்தோ வரும் ராதையின் வருகை இறைவியின் வருகையாகவே தோன்றியது. கண்ணனை அவள் கையில் கொடுத்து வீட்டுக்கு எடுத்துச் செல்லுமாறு வேண்டிக் கொண்டார். அதன் உட்பொருள் இதுதான். ''தேவி! அவன் உனக்கே உரியவன். உனது இல்லத்துக்கு அழைத்துச் சென்று மகிழ்வுடன் இருக்கவும்.''

நூல் சிற்றின்பச்சுவை மலிந்ததா?

கீதகோவிந்தப் பாடல்கள் பல்வேறிடங்களில் மெய்யுறு புணர்ச்சியையும் அதனால் ஏற்படும் மகிழ்ச்சியையும் விரிவுபடப் பேசுகிறது. மேலோட்டமாகப் பார்க்குங் கால், அது விரசமாகத் தோன்றினும், அதனுடைய உள் நோக்கம் ஆன்மீகக் காதலைச் சுட்டிக் காட்டுவதே என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

பிருந்தாவனத்தில் கண்ணனின் குழலிசைக்கு மயங்கிய கோபியர் தங்களது தாய் தந்தையரையோ, உடன் பிறந்தவரையோ, சமூகச் சூழலையோ மனதிற் கொள்ளாமல், கண்ணனுடன் வந்து சேர்ந்து ரசக்கிரீடையில் ஈடுபடு

கிறார்கள். உலகியல் ஒழுக்கத்துக்கு இது எதிர்மாறானது. எனினும் இந்நிகழ்ச்சியை ஒரு குறியீடாக எடுத்துக்கொள்ள வேண்டும். கோபியராகிய ஜீவாத்மாக்கள் கண்ணனாகிய பரமாத்மாவுடன் இணைவதாகக் கருதினால் சிற்றின்ப உணர்வுக்கு இடமில்லை.

கண்ணன்-ராதையின் காதலை வெளிப்படுத்தும் பற்பல பாடற் பகுதிகள் காமச்சுவை மலிந்தும் விரசமாகவும் உள்ளன என்பது இந்நூலினைப் பற்றிய பொதுவான ஒரு குற்றச்சாட்டு. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த முருகியல் அறிஞரும், வடமொழி வாணரும் ஆகிய ஜகந்நாதரே *ரசங்காதரா* என்னும் தனது நூலில் இதனைக் கடுமையாக விமர்சிக்கிறார். சிற்றின்பச் சுவை மலிந்த காதற் பாட்டுகள் நிறைந்த நூலாகவே இதனைக் காணுகின்ற நிலைமை இன்னும் நீடிக்கிறது.

1968-ஆம் ஆண்டில் ஜெயகோவிந்தத்தை ஆங்கிலத்தில் பெயர்த்த மோனிகா வர்மா இதுபற்றிக் கூறும்போது 'வாழ்க்கையின் அனுபவம் இல்லாதோருக்கும் உண்மையினைக் கண்டறிய ஒண்ணாதோருக்கும் இந்நூல் உகந்தது அல்ல' என்கிறார். முற்றிலும் இந்நூல் சிற்றின்பச் சுவை மலிந்தது என்று கருதுவதும் தவறே என்பது அவரது கருத்தாகும். ஐம்புல வேடரின் வயப்பட்டு அயர்ந்தும் மயங்கியும் ஆட்படுகின்ற உலகியல் நிலைக்கும் அப்பாற்பட்டு உயிர்கள் அத்யாத்மயோக நிலையில் ஆண்டவனோடு இரண்டறக் கலக்க விரும்புகின்ற தன்மையினையே ராதை கண்ணனிடம் கொண்ட காதலாக விளக்கப்படுகிறது. இந்நூலை இப்படி ஆன்மீகக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதுவே பொருத்தமானதாகும். மேலோட்டமாகப் படித்து இந்நூலில் சிற்றின்பச் சுவை மலிந்துள்ளது என்று கூறுவதைவிட, பாடல் அழகும், சொற் பிரயோகமும், படிமக் காட்சியும் திறம்பட அமைந்த இந்நூலை ஒரு இசைநாடக நூலாகப் பார்ப்பதுவே பொருத்தமானதாகும்.

நூலின் கட்டமைப்பு

கீதகோவிந்தம் பன்னிரண்டு பெரும்பிரிவுகளை உள்ளடக்கியது. தோற்றுவாய்ப் பாடலும், பாதாவளி எனும் நிறைவுப் பாடலும் தவிர்த்து ஒவ்வொரு பிரிவிலும் எட்டுப் பாடல்கள் உள்ளன. இதனைக் கருத்திற்கொண்டுதான் கீத கோவிந்தம் பாடல்களைப் பொதுவாக அஷ்டபதி என்று கூறுவர். அஷ்டம் என்னும் வடசொல்லுக்கு எட்டு என்பது பொருள். தனித்தனிப் பாடல்களை ஜெயதேவர் பாதாவளி எனும் சொல்லால் குறிப்பிடுகிறார். இருபத்திநான்கு அஷ்ட பதித் தொகுப்புகளும் பல்வேறு ராக அமைப்பில் இயற்றப் பெற்றுள்ளன. இசை ஞானமும், வடமொழி அறிவும் கைவரப் பெற்ற அறிஞர் பெருமக்களே சிருங்காரச்சுவை மலிந்த இந்நூலின் சொற்சுவை, பொருட்சுவை உணர்ந்து ரசிக்க இயலும். மொழியில் உள்ள சொற்களைப் பெயர்க் கலாம். அதனூடு பின்னிப் பிணைந்துள்ள உணர்வுகளைப் பெயர்க்க இயலாது. எந்த மொழிபெயர்ப்பிலும் இவற்றை அப்படியே கொண்டுவர இயலாதெனினும் இந்நூலைப் பற்றிய இன்றியமையாச் செய்திகளைத் தெரிவுபடுத்துவதே இம்முன்னுரையின் நோக்கமாகும். எனினும் இயன்றவரை பெயர்ப்பு மொழியின் இணக்கத்துக்கு ஏற்ற சொற்சுவை தோற்றுமாறு இத்தமிழ்ப் பெயர்ப்பில் முயற்சி செய்யப் பெற்றுள்ளது.

கீதகோவிந்தத்தின் பன்னிரண்டு பெரும் பிரிவுகளி லும் குறிப்பிடப்பட்டுள்ள பாத்திரங்கள் கதையில் வருவது போன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார்கள். கண்ணன் ராதையின் மறைமுகமான சிற்றின்ப உறவினை வெளிப் படுத்துவதோடு கண்ணனின் பத்துவிதமான தெய்வீக அவதாரங்களையும் குறிப்பிட்டு ஜெயதேவர் வாழ்த்துவது ஓர் அரிய செய்தியாகும்.

காவியச் செறிவு வாய்ந்த *கீதகோவிந்தம்* என்னும் இவ் வடமொழி முதல்நூலின் பாடல்களை வாய்விட்டும்

இசைத்தும் பாடுதற்கேற்ப அமைத்துள்ளார் ஜெயதேவர். ராதா கல்யாண உற்சவங்களில் இந்நூல் ஒரு நாட்டிய நாடகமாக அரங்கேற்றப்படுகிறது. ஓசை நயமும், சிற்றின்பச் சுவை மலிந்த சொற்றொடரும் சிற்சில இடங்களில் அமைந் துள்ளன. வடநூலாரின் யாப்பிலக்கணத்தில் சிறப்பித்துப் பேசப்படும் அட்சரவிருத்தம், தாள விருத்தம் இம்முதல் நூலில் காணப்படும் சிறப்பியல்புகள்.

கண்ணனும் ராதையும்

இந்நூலின் பெரும்பகுதியில் பேசப்படுவதெல்லாம் ராதையின் பிரிவினால் கண்ணன் அடைகின்ற ஏமாற்றமும் இன்னலும்தான். வசந்தகாலம் வரும்போது புதர் மண்டிய பகுதியில் ராதையுடன் இணைகின்ற கண்ணனை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். இக்கவிதை நூலின் இறுதியில் கண்ணனின் தெய்வாம்சக் காட்சி ராதையின் தொடர்பினால் வெளிப்படுகின்றது. இந்த அரிய காட்சிக்கு ஒப்புமையாக பகவத்கீதை 11-ஆம் அத்தியாயத்தில் அர்ச்சுனனுக்குக் காட்சி கொடுக்கின்ற கண்ணனை எடுத்துக்காட்டலாம். மிக நீண்ட பிரிவுத் துன்பத்தைப் பழகிக்கொண்டுவிட்ட ராதையின் உள்ளம் சிற்றின்ப உணர்வினால் நிரம்பி சம்போக சிருங் காரத்தில் மகிழ்கின்றது. இந்த மகிழ்ச்சிக்குத் தன்னையும் வாசகரையும் உட்படுத்துகின்ற கவிஞரின் ஆன்மீகக் களிப் பினை ஆலயத்தில் சென்று தன்னை மறந்து இறையுணர்வில் மகிழ்கின்ற ஒரு பக்தனின் மகிழ்ச்சிக்கு ஒப்பிடலாம்.

ராதாவைப்பற்றிய எந்தக் குறிப்பும் மகாபாரதம், அரி வம்சம், விஷ்ணுபுராணம் பாகவதம் ஆகிய நூல்களில் இல்லை. பாகவதத்தில் கண்ணன் கோபியருடன் களித்து விளையாடினான் என்ற செய்தி இருப்பினும் ராதை எனும் பெயர் அந்நூலில் வரவில்லை. கோபியரைக் குறிப்பிடும் ஆராதிதா என்ற சொல்லைச் சுட்டிக்காட்டி அது ராதையே என்னும் கருத்து பொருந்துமாறில்லை என 2001ஆம்

ஆண்டில் வெளியிட்ட கிருஷ்ணனைப் பற்றிய தமது நூலில் பாவன் வர்மா கூறு கிறார். எப்படியாயினும் வடமொழியில் கி.பி.2.ஆம் நூற்றாண்டில் பிராகிருத மொழியில் சாதவாகன ஹாலாவினால் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் *கதாசப்தகதி* எனும் நூலுள் ராதிகா பற்றிய குறிப்பு வருகிறது. தேவி பாகவதத்தில் வரும் ராதா - கிருஷ்ண உறவு பற்றிய செய்தியினை *அபிதான சிந்தாமணி* கூறுகிறது.

தமிழிலக்கியத்தில் ஆழ்வார் பாடல்களும், ஆண்டாளின் திருப்பாவையும் கண்ணனது மனைவியாக நப்பின்னையைக் குறிப்பிடுகின்றன. அவள்மீது கண்ணன் அளவு கடந்த பற்றும் பாசமும் வைத்திருந்தான். இந்த நப்பின்னையை மனதிற்கொண்டே பிராகிருத மொழி இலக்கியங்கள் ராதை என்னும் நாயகியை உண்டு பண்ணி, அவளோடு கண்ணனுக்கு இருந்த உறவினை மிகைப்படுத்தியும், சுவைப்படுத்தியும் ரசலீலைக்கு ஆட்படுத்தியுள்ளன என்று பார்பரா ஸ்டோலர் மில்லர் சில மேற்கோள்களைச் சுட்டிக்காட்டிக் கூறுகிறார். சிலப்பதிகாரத்தில் வரும் குரவைக் கூத்தை வடமொழி இலக்கியங்கள் ரஸக் கிரீடையாக மாற்றியுள்ளன என்கிறார் அறிஞர் ராமச்சந்திர தீட்சிதர்.

அத்தமிழ்க் காப்பியத்தில் விரசம் ஏதுமின்றி மாயவனாகிய கண்ணன் நப்பின்னையோடும் வேறு பல ஆயர் மகளிரோடும் ஆடும் குரவைக் கூத்தினைப் பின்பற்றித்தான் பிரம்ம வைவர்த்த புராணத்தில் வரும் ரசமண்டல நிகழ்ச்சியும் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனும் தீட்சிதரின் கருத்தும் ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கது. ஆயின், தமிழ் மரபில் விரசம் இல்லாமல் வருகின்ற செய்தியினை பிராகிருத வடநூல் இலக்கியங்கள் பாலுணர்ச்சியோடு மிகைபடுத்தியுள்ளன என்றே கருதலாம். அதன் உச்சகட்டமாகத்தான் ஜெயதேவரின் *கீதகோவிந்தம்* எனும் இசை நாடகத்தில் ராதையிடம் கண்ணன் காட்டும் அன்பும் காதலும் பாலுணர்ச்சியை மிகைபடக் காட்டுகின்றன.

காலப் போக்கில் ராமனோடு சீதையையும், சங்கரனோடு உமையையும் இணைத்துப் பார்ப்பது போன்று கண்ணனோடு இராதையையும் ஒருங்கு வைத்துப் பேசுவதும், பாடுவதும் உலக வழக்க மாகிவிட்டது. ருக்மணி, சத்யபாமா ஆகியோரைக் கண்ணன் மணந்தாலும், அவனுடன் ராதையை இணைப்பதே நாடக மற்றும் உலக வழக்காகி விட்டது.

பிரிவின்கண் துன்புறுகின்ற காதலர்களுக்கிடையில் இணைப்புப் பாலமாக விளங்குபவள் தோழி. அவர்களின் நீடித்த உறவுக்கும் அவளே காரணமாகிறாள். இத்தோழியும், கவிஞரும், வாசகரும் இந்தத் தெய்வீகக் காதல் நாடகத்தில் ஒருவகையில் நீடித்த பங்கேற்று ஆன்மீக மகிழ்ச்சியைப் பெறுகின்றார்கள்.

கண்ணனைப் பற்றிய இலக்கியச் செய்திகள்

கண்ணனைப் பற்றிய செய்திகள் பன்னெடுங்காலமாகத் தமிழிலக்கியத்தில் காணக் கிடைக்கின்றன. தொல்காப்பியம் குறிப்பிடும் 'மாயோன்' கண்ணனைக் குறிப்பதாகக் கருதலாம். சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் கண்ணன் புகழ் சிறப்புறப் பேசப்படுகிறது. இருப்பினும் மகாபாரதம், அரிவம்சம், பாகவதம் போன்ற நூல்களில்தான் கண்ணனின் பெரும்புகழ் விரிந்து பரந்து போற்றப்படுகிறது.

இனப்பெருக்கக் கடவுளாகக் கருதப்படத்தக்க கண்ணனைப் பற்றிய புராணச் செய்திகள் தென்னிந்தியாவிலிருந்தே வடமொழிக்குச் சென்றிருக்கலாம் என ஏ.எல்.பாஷம் அனுமானிக்கிறார். வடமொழியிலுள்ள பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய பாகவதத்தின் பத்தாம் காண்டத்தில்தான் கண்ணனின் பிறப்பும் வளர்ப்பும் பிற செயல்களும் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

வியாச முனிவரின் பாரம்பரியத்தைச் சார்ந்த சுகதேவ கோஸ்சுவாமியால் *பாகவதபுராணம்* வடமொழியில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் எழுதப்பட்டது.

செவ்வைச்சூடுவார், நெல்லிநகர் வரதராச அய்யங்கார் ஆகிய இருவரும் 16-ஆம் நூற்றாண்டிலேயே பாகவதத்தை வட மொழியினின்றும் தமிழில் செய்யுள் வடிவில் பெயர்த்துள்ளனர். அரே கிருஷ்ண இயக்கத்தைத் தோற்றுவித்த பிரபுபாதர் பாகவத்தின் ஐந்து காண்டங்களின் பதினெட்டாயிரம் பாடல்களைப் பதினைந்து தொகுப்புகளாக ஆங்கிலத்தில் பெயர்த்து கலிபோர்னியாவில் அச்சிட்டு வெளி யிட்டுள்ளார்.

மகாபாரத காலத்தில் புராணிக வீரனாக மட்டுமே கருதப்பட்ட கண்ணன் காலப்போக்கில் கடவுளரின் நிலையில் வைத்துப் போற்றப்படத் தொடங்கியுள்ளான். செலுக்கஸ் நிகோடரின் குறிப்புகளை வைத்துப் பார்க்கும்போது கி.பி. 2-ஆம் நூற்றாண்டு தொடங்கி கிருஷ்ணன் விஷ்ணுவின் அவதாரமாகக் கருதப்பட்டுள்ளான்.

கண்ணன் ஒரு ஆயர்குலத் தலைவனாக, நாட்டுப்புறத்தில் வாழ்ந்தோனாக, மகாவிஷ்ணுவின் அவதாரமாக புகழப்படுகிறான். கண்ணனின் விந்தையான பிறப்பும், துவாரகையை ஆண்ட கொடுங்கோலனாகிய கம்சனிடமிருந்து அவன் காப்பாற்றப்பெற்றதும் ஆயர்பாடியில் அவன் வளர்க்கப்பட்டதும், அவனது இளமைக் காலக் குறும்புகளும் வியத்தகு செயல்களும் ஆயர் குலப் பெண்டிரிடம் உல்லாசமாக விளையாடியதும், அரக்கர்களை அழித்ததுவும், பஞ்சபாண்டவருக்காகப் பாரதப்போரில் பங்கு பெற்றதும், கண்ணனின் இறுதிக் காலமும் காப்பியங்களில் இவனைப் பற்றிய பொதுச்செய்திகளாகும்.

பாரதப்போரில் அருச்சுனனுக்குத் தேரோட்டியாக வந்து கண்ணன் அவனுக்குப் போதித்த அனுபவம் மிக்க உண்மைகளையே பகவத்கீதை என்னும் ஒப்பற்ற நூல் பேசு கிறது. கண்ணனை மகாவிஷ்ணுவின் மறுபிறப்பாகக் கருதுவ தாக விஷ்ணுவைப் பற்றிய் அனைத்துச் செய்திகளையும், பெயர்களையும் கண்ணனுக்கும் உரித்தாக்கிப் பேசுவது இலக்கிய மரபாகி விட்டது. பண்டைக்காலந் தொட்டே கண்ணனின் பெயரை ஆயிரம் தடவை திரும்பத் திரும்பச் சொல்லி வழிபாடு செய்வதும் நடைமுறையில் உள்ள பழக்க மாகும். கண்ணனின் பல்வேறு பெயர்களும், சொற்றொடர் களும் அவனது இயல்புகளையும், செயல்களையும் நினைவு படுத்துமாறு அமைந்திருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். ஜெயதேவரும் தமது நூலின் பல்வேறிடங்களில் மாதவன் என்றும் மதுவைத் தடிந்தவன் என்றும் பொருள் தருகின்ற மதுசூதனன், தசவீகரூபன் என்றும் கண்ணனை அழைப்பது நினைவு கூரத்தக்கது.

பகவான், பகவத் போன்ற சொற்களாலே மகா பாரதமும் அரிவம்சமும் கண்ணனைக் குறிப்பிடுகின்றன. வேறுபல புராணங்களிலும் இச்சொல்லினால் கண்ணன் குறிப்பிடப்பெறுகிறான். ஆயினும் கீதகோவிந்தத்தில் இச்சொற்கள் காணுமாறில்லை. தர்மம், கர்மம், பக்தி போன்ற சொற்களும் காணப்படவில்லை. ராதாகிருஷ்ணரது சிருங்கார சம்போகம் குறித்த நூலுள் இச்சொற்கள் தேவை யில்லை என்று ஜெயதேவர் கருதியிருக்கலாம்.

கண்ணனின் பிறபெயர்களும் விளக்கமும்

மாதவன்

மாது எனின் வசந்தகாலம். தேன் என்றும் பொருள் படும். மாது எனும் அரக்கனைத் தவ வலிமையால் தண்டித்த வன் என்றும் கூறுவர். பெரும் தவ வலிமையுடையவன்

என்று கூறலும் ஒக்கும். மகாபாரதத்தில் கண்ணன் இச்சொல்லால் குறிக்கப் பெறுகிறான். மாது எனும் அரக் கனைக் கொன்றதாக வரும் குறிப்பு நாட்டிய சாத்திரத்தில் காணப்படுகிறது.

வாசுதேவா

யதுகுலத்தில் வசுதேவருக்கும் தேவகிக்கும் பிறந்த மையால் கண்ணனை வாசுதேவன் எனல் இலக்கியமரபு.

அரி

ஹரி எனும் வடசொல்லின் திரிபு. கரிய நிறமுடை யான் என்பது பொருள்.

கேசவன்

கரிய நீண்ட முடியுடையவன் என்பது பொருள். பாகவத புராணத்தின்படி 'கேசின்' என்னும் குதிரைமுக அரக்கனைத் தடிந்தவன் என்னும் பொருள்பட கேசவன் என்னும் பெயராலும் கண்ணன் அழைக்கப்படுகிறான். விஷ்ணு புராணமும் அரிவம்சமும் இக்கதையினைக் குறிப்பிடுகின்றன.

தசவிதரூபன்

உலகினைக் காப்பதற்குத் திருமால் 10 ரூபங்களை எடுத்துள்ளமையால், அவனுக்கு இப்படியொரு பெயரும் உண்டு. மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், ராமன், பரசுராமன், கிருஷ்ணன், புத்தன், கல்கி ஆகிய வையே திருமாலின் பத்து அவதாரங்களாகும்.

முராரி

மூராவின் பகைவன். மூராவைக் கொன்றவன். மூரா என்பது ஒரு அசுரனின் பெயர்.

நராயணா

நரனுக்குச் சொந்தமானவன் என்பது பொருள். உலகைப் படைத்தவனாக ஆண்டவனைக் குறிக்கும் இடத்தில் எல்லாம் மகாபாரதத்தில் இச்சொல் காணப்படுகிறது. நாராயணன் என்பது இச்சொல்லினின்றும் மருவியது.

யதுநந்தனா

யது குலத்தினருக்கு மகிழ்ச்சி அளிக்க வந்தவன் என்பது பொருள்.

மீனாசரீரா

மச்சாவதாரம் என்று குறிப்பிடப்படுவது இதுவே. கடலில் வாழ்ந்த அரக்கன் ஒருவன் பிரம்மாவிடமிருந்து வேதங்களைத் திருடிச்சென்று விட்டான். திருமால் மீனாக உருக்கொண்டு அந்த அரக்கனைக் கொன்று மறை நூல்களை மீட்டு வந்ததாகக் *கீத கோவிந்தம்* கூறுகிறது.

கச்சபரூபா

இதுவே கூர்மாவதாரம் எனப்படுவது. கடவுளரும் அரக்கரும் கடலைக் கடையும்போது திருமால் ஆமையுருவில் மந்தார மலையைத் தன் உடம்பின்மீது தாங்கிக் கொண்டார் என்பது புராணக் குறிப்பு.

சூகரரூபா

வராக அவதாரத்தின் பிறிதோர் பெயர். பன்றி அவதாரத்தில் இருந்த இறைவன் கடலில் மூழ்க இருந்த பூமியினைத் தன் தந்தத்தினால் தாங்கிக் கொண்டார் என்பது புராணக் குறிப்பு.

நரகரிரூபா

சிங்க முகமும், மனித உடலும் கொண்ட நரசிம்ம அவதாரம். இறைவன்மீது ஆராத அன்பு கொண்ட பிரக லாதன் என்னும் தன் மகனையே தண்டிக்கத் துணிந்த இரண்ய கசிபு எனும் கொடிய மன்னனைத் திருமால் நரசிம்ம உருவில் ஒரு தூணிலிருந்து தோன்றித் தன் கூரிய நகங்களால் வகிர்ந்து கொல்லுகிறார்.

வாமனரூபா

இந்திரனைத் தன் வலிமையால் அடக்கிய பாலி எனும் அரசனிடம் திருமால் குள்ளமான பிராமண வடிவில் சென்று மூன்றடி மண் கேட்டுப் பின் அவனை அடக்கிக் கர்வபங்கம் செய்கிறார்.

பிருகுபதிரூபா

க்ஷத்திரியர்களின் கொட்டத்தைக் கோடரியால் அடக்கிய பரசுராம அவதாரம். பரசுராமன் பிருகு வம்சத் தாரின் தலைவன்.

ராமசரீரா - ராமாவதாரம்

கீதகோவிந்தம் இரண்டாம் அஷ்டபதியில் ராமனைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ராமனுக்கு ரகுபதி ரூபன் என்ற பெயரும் உண்டு. இலங்கையர்கோன் இராவணனை அவன் வென்று சீதையை மீட்டு வந்த கதையே இராமாயணம்.

ஹலாதரரூபா

கண்ணனின் மூத்த சகோதரன் பலராமன். திருமால் கண்ணனாக அவதாரம் எடுத்தான் என்றும் பலராமனாக உருவெடுத்தார் எனவும் கூறுவர். கண்ணனாகப் பிறப் பெடுத்ததே பரவலாகக் குறிப்பிடப்பட்டாலும் ஒருசில

இடங்களில் அதனைப் பலராம அவதாரமாகப் பேசுவதும் இலக்கிய மரபு.

புத்தசரீரா

மகாபாரதத்திலும், அரிவம்சத்திலும் புத்தராக அவதாரம் எடுத்தது பற்றிய குறிப்பு இல்லையெனினும், மத்சிய, அக்னி புராணங்களில் இந்த அவதாரம்பற்றிப் பேசப்படுகிறது. வேத மார்க்கத்தைப் புத்தர் கண்டித்தார் என்னும் குறிப்பு கீத கோவிந் தத்தில் வருகிறது.

கல்கிசரீரா

கையில் வாளேந்தி வெண்புரவி மீதேறி அநீதி யினைத் தடிவதே கல்கி அவதாரத்தின் குறிக்கோளாகும். கலி யுகத்தின் முடிவில் கல்கி அவதாரத்தின் செயற்பாடு நிகழும் என்பது நம்பிக்கை.

மேற்காணும் பெயர்களேயன்றி கண்ணனை கிருஷ் ணன், ஜெயதேவன், அம்சா, முராரி, பீதவசனா, வனமாலின், கோவிந்தா, கேசிமதனா, கம்சாரி, உபேந்திரா, ஜனார்த்தனா, நாராயணா, யதுநந்தனா எனும் பெயர்களாலும் அழைக் கிறார்.

இளமைக்காலத்திய கண்ணன் காளியா என்னும் பாம் பினை யமுனை நதியில் கொன்றதுவும், முலையருத்துவாள் போன்று கண்ணன் உயிரைப் பறிக்க வந்த பூதனை என்னும் அரக்கியினைக் கொன்றதுவும் கண்ணனைப் பற்றி கீத கோவிந்தத்தில் வரும் பிற புராணக் குறிப்புகளாகும்.

கண்ணனது ரஸக்கிரீடை

கண்ணன் துவாரகையின் மன்னனாகப் பேசப்பட்டா லும், இளமையில் அவன் வளர்ந்தது பிருந்தாவனம் எனு மிடத்தில்தான். இச்சிற்றூர் டில்லிக்குச் செல்லும் வழியில்

மதுரா நகருக்கு அண்மையில் உள்ளது. யமுனையென்னும் வற்றாத நதி பிருந்தாவனம் எனும் அந்த அழகிய ஊரின் மருங்கே ஓடுகிறது. இந்நகரில் யமுனைக் கரையில் சோலைகள் அடர்ந்த பகுதியில் கண்ணன் குழலூதிக் கொண்டு செல்கிறான். மாரவேளிடம் மலர்க்கணை இருந்தது போன்று கண்ணனிடம் இருந்த வேய்ங்குழல் கோபியரைக் கவர்ந்திழுக்கும் வாய்ப்பினை அளித்தது. குழலோசைக்கு மயங்கிய கோபியர்குழாம் அவன் பின்னே செல்கிறது. தண்மதியைச் சுற்றித் தாரகை இருப்பது போன்று கண்ணனைச் சுற்றி கோபியர் சூழ்ந்து நடனம் ஆடுகின்றனர். கடுமழையின் குளிரும், கோடையின் வெப்பமும் இல்லாத இலையுதிர் காலம். அக்காலத்தின் தண்ணிய நிலவொளியில் இந்த நடனம் நிகழ்கிறது. தனது மாயசக்தியால் கண்ணனும் பற்பல வேடமெடுத்து தனித்தனியே ஒவ்வொரு கன்னியும் மகிழும் வண்ணம் நடனம் ஆடுகிறான். இந்த ராஸக்கிரீடைதான் தனிப்பட்ட ஒரு ராதாவுடன் வசந்த காலத்தில் களித்தாடுதற்குரிய வாய்ப்பினை அளிக்கிறது.

ராதையைப் பற்றிய குறிப்புகள்

கண்ணனோடு இணைத்துப் பேசப்படும் ராதையைப் பற்றி இந்திய இலக்கியங்களில் பரவலான குறிப்புகள் இல்லை. புராணங்களிலும், காப்பியங்களிலும், நாடகங்களிலும் ராதையைப் பற்றிய குறிப்பு மேலோட்டமாகக் காணப்படுகிறது. ஜெயதேவரின் கீதகோவிந்தம் எனும் இசைநாடக நூலிலும், கண்ணனின் மனைவியாகவோ இளமைக் காலத்துத் தோழியாகவோ ராதை குறிப்பிடப்படவில்லை. தன்னைப் பற்றிய பெருமையோடும், இளமைக்கேயுரிய கர்வத்தோடும் தனித்திருக்கும் ஒரு பருவ மங்கையாகவே இந்நூலுள் அவள் பேசப்படுகிறாள். பலரும் அறியக் கோபியரோடு கலந்து விளையாடும் கண்ணன் அவர்களை விட்டுப் பிரிந்து ராதையிடம் தனித்தும் மறைமுகமாகவும் சந்தித்து,

புகழ்ந்து போற்றிக் களித்து மகிழ்வதை ஜெயதேவர் சிருங் கார ரசம் மிகுந்த அழகிய கவிதைகளில் விளக்குகிறார். அவர் களின் உறவு ஒருவர் மற்றொருவர்மீது கொள்ளும் வெறியில் ஒன்றாக இணைகிறது. பல்வேறு கோபியருடன் இணைந்து சிதறுண்டு போக இருந்த தெய்வீகக் காதல் பிருந்தாவனத்தில் ராதாவோடு மட்டும் கலந்து போகம் நுகர்ந்து வெற்றி அடைவதை இறைவன் மானுடத்துடன் கலந்து இணையும் ஒரு குறிப்பினைச் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

இச்சிறு காவியத்தின் தலைவி கண்ணனிடம் கொண்ட அன்பை இறைவனிடம் ஆண்டாளும், மீராவும் கொண்ட பேரானந்தத்துக்கும் காதலுக்கும் இணையாகக் குறிப்பிடலாம்.

பிறமொழிகளில் கீதகோவிந்தம்

இலக்கிய மரபில் கதை என்று கூறத்தகுவதாகிய ஏதும் கீதகோவிந்தத்தில் இல்லை என்றே கூறிவிடலாம். அதன் பொருளடக்கமே கதையெனக் கூறுவதாயினும் அச் செய்தி ஒன்றும் புதியது அல்ல. கண்ணனுக்கும் ஆய்ச்சியர் குலப் பெண்ணாகிய ராதைக்கும் உள்ள ஆழ்ந்த உறவு இந்திய இலக்கியங்களில் கதை யிலும், நாடகத்திலும், நாட்டுப்புறப் பாடல்களிலும், தனிப் பாடல்களிலும் பரவலாகப் பேசப் படுவதுதான். எனவே கீத கோவிந்தத்தின் புகழெலாம் அதனுடைய சொற்பொருளழகும் நடனத்துக்கேற்ற இசை யோட்டமுமே. நூலின் முதன்மொழியாகிய வடமொழியில் தான் இவ்விரண்டு இயல்புகளையும் கேட்டு ரசிக்க முடியும் என்றாலும், அயன்மொழியாளர் பலர் குறிப்பாக ஐரோப்பிய நாட்டினர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத் திலேயே ஆங்கிலம், லத்தீன், ஜெர்மன் ஆகிய மொழிகளில் இந்நூலைப் பெயர்த்துள்ள உண்மை இந்நூலின் பெருமைக் குச் சான்றாகும்.

சி. லாசென்	- லத்தீன்	- *1836*
எப்.எச்.வான். தால்பர்க்	- ஜெர்மன்	- *1873*
பிரடெரிக் ரிக்கர்ட்	- ஆங்கிலம்	- *1872*
வில்லியம் ஜோன்ஸ்	- ஆங்கிலம்	- *1872*
எட்வின் ஆர்னால்டு	- ஆங்கிலம்	- *1875*
ஜார்ஜ் கீட்	- ஆங்கிலம்	- *1940*
லக்ஷ்மி நரசிம்மசாஸ்திரி	- ஆங்கிலம்	- *1956*
டங்கன் கிரீன்லஸ்	- ஆங்கிலம்	- *1962*
மோனிகா வர்மா	- ஆங்கிலம்	- *1968*
பார்பரா ஸ்டோலர்மில்லர்	- ஆங்கிலம்	- *1977*
துர்காதாஸ் முகர்ஜி	- ஆங்கிலம்	- *1990*

இந்தியமொழிகளிலும் இந்நூல் பாடல் வடிவிலும், நடனத் துக்கேற்ற லயத்துடனும் பெயர்க்கப்பட்டுள்ளது.

கதகளி ஆட்டத்தில் பாடுதலுக்கேற்ற

மலையாள பெயர்ப்பு	- ராமவர்மா	- *1964*
ஒரிய மொழி	- காளிசரன் பட்நாயக்	- *1960*
தமிழாக்க சாரம்	- டி.ஆர். ராஜகோபாலன்	- *1984*

தமிழில் பெயர்த்ததாகக் கூறப்படும் சங்கு சுப்பிர மணியத்தின் பிரதி எமக்குக் கிடைக்கவில்லை. பாடும்போது அபிநயத்துக்கு ஏற்ற சில குறிப்புகளுடன் வாசுதேவ சாஸ்திரி பதிப்பித்துள்ள கீதகோவிந்தப் பிரதியினை தஞ்சை சரஸ்வதி மகால் 1950-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

பட்டியலில் காணப்படும் மொழி பெயர்ப்பாளர் அனைவரும் இந்த இசை நாடக நூலை முதல் மொழியில் பயின்ற பின்னரே தத்தம் மொழியில் பெயர்த்த தாகக் கூறமுடிய வில்லை. ஜெர்மன் மொழியில் இதனைப் பெயர்த்த வான் தால்பர்க் தமக்கு முதனூலாகக் கொண்டது வில்லியம் ஜோன்ஸ் செய்திருந்த ஆங்கிலப் பெயர்ப்பினைத்

தான். வடமொழி அறிந்தவராகக் கூறப் படும் ஜார்ஜ் கீட் கூட தனது ஆங்கிலப் பெயர்ப்பின் முன்னுரையில் ''வடமொழி ஆங்கில ஒலி இயைபும் ஓசை நயங்களும் ஒன்றுக் கொன்று வேறுபட்டவையாதலால், எனது ஆங்கிலப் பெயர்ப்பில் ஒலி இயைபினைப் பற்றிய எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ள வில்லை'' என்று கூறிவிடுகிறார்.

திருமதி. பார்பரா ஸ்டோலர் மில்லர் பெயர்த்துள்ள ஆங்கிலப் பெயர்ப்பே மிக நீண்ட ஆராய்ச்சி முன்னுரை யுடன் வெளிவந்துள்ளது. அமெரிக்காவின் கொலம்பியாப் பல்கலைக் கழகத்துப் பர்னார்டு கல்லூரியில் சமஸ்கிருதப் பேராசிரியராகப் பணிபுரிந்த இந்த அம்மையார் இந்நூலை ஆங்கிலத்தில் பெயர்ப்பதற்கு முன்னர் இந்தியாவுக்கு வந்து வங்காளம், ஒரிஸ்ஸா, ராஜஸ்தான், கேரள மாநிலங்களில் தங்கியிருந்து ஆங்காங்குள்ள வடமொழிவாணருடன் கலந்து பேசி, கீதகோவிந்தம் பாடப்படுவதனைத் தானே நேரில் கேட்டறிந்து அதன் பின்னரே தமது ஆங்கிலப் பெயர்ப்பினை ஒழுங்குசெய்து வெளியிட்டுள்ளார். வடமொழி, இசை, நாடகம் பற்றி முறையாக இந்தியாவில் தங்கிக் கற்றறிந்தவர். இவரும்கூட மூலநூலின் முறைவைப்பு, கட்டமைப்பு, கருத்தோட்டம் ஆகியவற்றைத்தான் குறைவறக் கொண்டுவர முடிந்தது. மூலநூலினுடைய ஒலியழகினையும் ஓசை நயத் தினையும் எந்த மொழிபெயர்ப்பிலும் கொண்டுவர இய லாது. மொழிப்பெயர்ப்பின்கண் இயல்பாகவே இருக்கும் சிற்சில தடைகளில் இவையும் குறிப்பிடத்தக்கனவாகும். பார்பரா மில்லர் உள்ளிட்ட அனைத்துப் பெயர்ப்பாளர்கட் கும் இப்பொதுவான மொழிபெயர்ப்புச் சிக்கலும், பிறவும் தெரியும் என்றாலும், அவர்களில் யாரும் பெயர்ப்புப் பணியை நிறுத்தவில்லை. நூலின்கண் ஏற்பட்ட ஆர்வமும் பற்றும் இதற்குக் காரணம் எனலாம்.

இலக்கிய மொழிபெயர்ப்பில் கருதத்தகுவதாகிய பிறி தோர் செய்தியும் ஒன்று உண்டு. தமக்கு முன்னமேயே

ஒருவரோ பலரோ ஒரு நூலைப் பெயர்த்திருந்தால் மீண்டும் அதே நூலை ஒருவர் ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்குரிய விளக்கத்தினை எந்தப் பெயர்ப்பாளரும் கொடுப்பதில்லை. முன்னருள்ள பெயர்ப்புகள் திறம்பட அமையவில்லை என்பதுவே காரணமா? எதுவாயினும், வடமொழியிலுள்ள கீதகோவிந்தத்தை இதுவரை ஆங்கிலத்தில் எண்மர் பெயர்த்துள்ளனர். எட்வின் அர்னால்டு போன்றோர் நூலைப்பற்றி கருத்துரையினையோ விளக்கத்தினையோகூடத் தெரிவிப்பதில்லை. மொழிபெயர் தேயத்தாரின் கருத்தினையும் இலக்கியத்தின் வழிக் காணப்படுகின்ற அவரது பழக்க வழக்கங்களையும், கலாச்சாரப் போக்கினையும் குறித்துத் தாம் ஏதும் கூறக்கூடாது என்கிற அடக்க உணர்வே இதற்குக் காரணமாக இருந்துள்ளது. மரபுக்கு மதிப்புக் கொடுக்கும் இந்தச் சான்றாண்மை காலப் போக்கில் மறைந்துபோய்விட்டது. இலக்கியத் திறனும் இலக்கிய உலகில் முழுமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பாடநூலாகிவிட்டது. ஒரு நூலினை மதிப்பிட்டு, பிற நூல்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதில் தவறொன்றுமில்லை என்ற உணர்வு மேலோங்கியுள்ளது. எனவேதான் கீதகோவிந்தத்தில் முன்னாளைய ஆங்கிலப் பெயர்ப்புகளில் முன்னுரையே இல்லாதிருக்க, பார்பரா மில்லர் மட்டும் நூலைப் பற்றிய மிக நீண்ட முன்னுரையும், ஆராய்ச்சிக் கருத்தும் கொடுத்துள்ளார். அதனை அடியொற்றியே இக்கட்டுரையும் எழுதப்படுகிறது. நூலின் இத்தமிழ் பெயர்ப்பும் பார்பரா மில்லரின் ஆங்கில நூலை அடியொற்றியே செய்யப்பட்டுள்ளது.

இந்திய மொழிகளில் கீதகோவிந்தம்

கீத கோவிந்தத்துக்குப் பற்பல வடமொழி வாணர்கள் வெவ்வேறு காலங்களில் பல்வேறு இந்திய மொழிகளில் உரை எழுதியுள்ளனர்.

(1) மானாங்கா - கி.பி. 1496

இவரது உரை விளக்கத்தில் அரிய பதங்களின் தொகுப்பும் பொருளும் தரப்பெற்றுள்ளது. ஆயினும் பாடலுக்குரிய ராகங்களும் மெட்டும் குறிக்கப்பெறவில்லை.

(2) நாராயணதாசர்

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ஒரிய மொழியில் எழுதப்பெற்றுள்ள இவ்வுரையில் குமார சம்பவம், காவ்யாதர்சம், காவ்ய பிரகாசம், சரஸ்வதி காந்தா பரணம் ஆகிய வடமொழி நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பெற்றுள்ளன.

(3) லட்சுமணசூரி - கி.பி. 1567

விஜயநகர அரசர் முதலாம் திருமலராஜாவின் காலத்தவர். இவரது உரை கீதகோவிந்தத்தை இலக்கியக் கண்ணோட்டத்தில் பார்க்கிறது.

(4) சங்கரமிஸ்ரா - கி.பி. 1600

இவரது கீதகோவிந்த உரை ரசமஞ்சரி எனும் தலைப்பில் வடமொழியில் எழுதப்பெற்றுள்ளது.

(5) கும்பகர்ணா - கி.பி. 1460

ராசஸ்தான் மாநிலத்தில் மேவார் அரசின் மன்னராக இருந்தவர். இவரது உரையில் ஒவ்வொரு பாடலுக்கும் இசையும் மெட்டும் அமைக்கப்பட்டதோடு ராகமும் தாளமும் குறிக்கப்பெற்றுள்ளது. சிருங்கார ரசப் பகுதி களுக்கு ஆழ்ந்த உரை விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

(6) பாகவத தாசா - கி.பி. 1580

கும்பகர்ணாவினது உரையினை அடியொற்றியே இவர் விளக்கம் கொடுத்துள்ளார். பக்தி, கவிநயம், உரை நயம் ஆகியனவற்றைச் சிறப்புற விளக்கியுள்ளார்.

(7) சைதன்யதாசா

பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வெளி யாகிய இவரது உரைவிளக்கம் கீதகோவிந்தத்தின் புகழும், கண்ணனின் பெருமையும் வங்க தேசத்தில் பரவுதற்குப் பெரிதும் காரணமாக இருந்தன.

தமிழில் கீதகோவிந்தம்

தமிழில் கீதகோவிந்தத்தைப் பெயர்த்த அன்பர் திருக் கண்ணபுரம் இராஜகோபாலன் அவர்களின் பிரதியினைப் பேராசிரியர் மது.ச. விமலாநந்தம் அனுப்பியிருந்தார். எனது தமிழ்ப் பெயர்ப்பு நிறைவுறுகின்றவரை அத்தமிழ்ப் பெயர்ப் பினை யான் பார்க்கவுமில்லை, படிக்கவுமில்லை. எனது பெயர்ப்புப் பணி நிறைவுற்றபின்னரே அம்மொழிபெயர்ப் பினைப் படித்தும் என்னுடையதோடு ஒப்பிட்டும் பார்த் தேன். கருத்தோட்டத்தில் மாறுபாடு இருக்க முடியாது. சொல்லோட்டத்திலும், இலக்கிய நடையிலும் இரண்டு பெயர்ப்புகளுக்கும் இடையில் எத்துணை வேறுபாடு உள் ளது என்பதை இரண்டு நூற்களையும் ஒத்திட்டுப் பார்ப்போர் நன்கு புரிந்துகொள்ள முடியும். சான்றாக முதலாம் அஷ்டபதி யில் உள்ள ஒரு பாடலைக் காண்போம். திருமால் கௌதம புத்தனாக அவதாரம் எடுத்தது பற்றிக் கூறும் அப்பாடல் முறையே தமிழாக்கச் சாரத்திலும் எனது பெயர்ப்பிலும் வருமாறு.

1. பழித்தனை மாமறை தொல்விதிபற்பல அன்பினிலே
   பாற்றினை வேள்விதனக் காமுயர் இன்னல்
   எலாம்! கேசவ

வந்தவன் மாதவன் புத்தனென
வாழிய வாழிய நீ!

2. அவிர்பலி மிருகவதை ஆதரிக்கும் வேதமதைக்
கசிந்துருகும் அன்பினால் கண்டித்துப் போக்கினாய்!
ஒளிநிறைந்த புத்தனாய் ஓங்கிவளர் கண்ணா நீ
உலகத்து நாயகனே உயர்வெற்றி கொண்டிடுவாய்!

திருவாளர் ராஜகோபாலன் அவர்கள் அஷ்டபதியின் தலைப்புகளில் ஒன்றுக்கு மேற்பட்ட இராகங்களின் பெயர்களைக் குறித்துள்ளார். அவர் எடுத்துக்கொண்ட வடமொழிப் பிரதிகளில் இருந்தவற்றை அப்படியே குறித்துள்ளார் என்பதன்றி அவரது தமிழ்ப் பெயர்ப்புக்கும் அந்த இராகங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று யான் கலந்து பேசிய இசை வல்லுநர்களிடமிருந்து தெரிந்து கொண்டேன். மேலும் அவரது பெயர்ப்பில் காணப்படும் பற்பல ராகங்கள் இப்போது வழக்கிலும் இல்லை. என்னுடைய பெயர்ப்பில் இசைத்துப் பாடுதற்கேற்ற எந்த இராகத்தைப் பற்றியோ, தாளத்தைப் பற்றியோ யான் கவலையுறவில்லை. உரைநடையாக இல்லாமல், ஓசை நயம் மிக்க கவிதையாக எழுத முயன்றுள்ளேன்.

அயல்நாட்டினரும் விரும்பிப் பயிலும் வண்ணம் பன்முறை பல்வேறு காலங்களில் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டுள்ள கீதகோவிந்தம் என்னும் இந்த இசை நாடக நூலினைப் பற்றித் தமிழ்நாட்டில் இலக்கியம் பயின்றாரும், கற்றறிந்தோரும் அறிந்து கொள்ளும்வண்ணம் ஒரு எளிய பெயர்ப்பினைச் செய்வோம் என்ற எண்ணமே எனக்கு மேலோங்கியிருந்தது. இப்பெயர்ப்பு எந்த அளவு எளிமையாகவும், இலக்கிய நடையோடும் யாக்கப்பட்டுள்ளது என்பதை அறிஞர் பெருமக்களே கூறவேண்டும். குறிப்பிடத்தக்க மாற்றங்களும், திருத்தங்களும் செய்ய வேண்டுமெனக் கருதினால்

இந்நூலைப் பயிலும் அறிஞர் அவற்றை எமக்குத் தெரிவித்திட வேண்டுகிறேன்.

குற்றங்களைத்து குறை கடிந்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்

என்று ஆன்றோர் கூறியதை ஈண்டு நினைவுபடுத்த விரும்புகிறேன். இத்திட்டத்தை எனது பணியாக முன்வைத்தபோது மனமுவந்து ஏற்றுக் கொண்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்த தமிழ்ப் பல்கலைக் கழக முன்னை.துணைவேந்தர் முனைவர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கட்கு நெஞ்சார்ந்த நன்றி.

நுண்ணாய்வுக்குப் பின்னரும் பல்லாண்டுகளாகக் கோப்புகளோடு முடங்கிக் கிடந்த இந்தப் பெயர்ப்பு நூலினை அச்சிட அனுமதி வழங்கிய துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கட்கு எனது அகங்கனிந்த மகிழ்ச்சியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

-பழனி. அரங்கசாமி

இணைப்பு -1

கண்ணனைப் பற்றிய அண்மைக்காலத்திய கருத்துரை

வேதவியாசர் காலத்துக்குப் பின்னர் கண்ணனைப்பற்றிய செய்திகள் மிகைப்பட்டும், திரிந்தும், சிதைவுபட்டும், சிற்றின் பத்துக்கு உட்படுத்தியும் சிருங்கார லீலைகட்கு ஆட்படுத்தியும் இற்றை நாட்களில் கண்ணனை ஒரு கசனோவா என்னும் டான்ஜுவான் என்றும் கருதத்தக்க நிலையில் கீழிறங்கி விட்டன. உலகப் பிரச்சினைக்ளுக்கெல்லாம் தீர்வுகாணத்தக்க ஒரு கீதாச் சாரியனாகக் கருதப்பட வேண்டிய கண்ணன் இவ்வாறு காலப் போக்கில் பிழைபடக் கணிக்கப்பட்டுவிட்டான். மனிதகுலத் துக்கே குருவாகக் கருதப்பட வேண்டிய கண்ணன் ஏதோ ஒரு சிறுதெய்வ வழிபாட்டுக்குரியவனாக்கப்பட்டு விட்டான். காலப் போக்கில் கண்ணனைப் பற்றிய வரலாற்றுக்கு ஏற்பட்ட மாற் றங்கள் திரிபுகளோடு பல காலங்களில் பல்வேறு மொழிகளில் இருந்த அரசவைக் கவிஞரின் இலக்கியப் படைப்புகளும் ஹரிவம்சம், விஷ்ணுபுராணம், பாகவதம், ஆகியவையும் ராதாவைக் கண்ணனோடு இணைத்த கீதகோவிந்தம் போன்ற நூல்களுமே இதற்குரிய காரணங்கள் ஆகும்.

இற்றைய உலகச் சூழலில் கீதையின் கண்ணன் ஆன்மீக உலகத்திற்கு உரியவனாக ஒதுக்கப்பட்டுவிட்டான். கோகுலத்தில்

பிறந்து பிருந்தாவனத்தில் ராஸக்கிரீடை புரிந்த கண்ணனை மட்டுமே நினைப்பதன்றி உலோகயதவாதம் புரிவோரின் தாக்கு தலுக்கும் கண்ணபிரானை ஆட்படுத்தி விட்டார்கள்.

கண்ணன் பிறப்பும், குழந்தைப் பருவமும், பாகவதத்தின் பத்தாவது கண்டத்திலும், அவனது அரசியல் ஆளுமை அந்நூலின் உத்யோக பருவத்திலும், கீதாச்சாரியனாக வந்து தலைமையேற் றமை பீஷ்ம பருவத்திலும் கூறப்படுகிறது. கண்ணனது ராஸக் கிரீடையை வெறும் சிற்றின்பக் குறிப்பாகக் காணுவது பாகவத புராணத்தின் அடிப்படையினையே மறுப்பதாகும். இலக்கிய மற்றும் புராணக் குறிப்புகளை ஒட்டிய பிறிதோர் உண்மை யினையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஏ.டி.புசால்கர் (Stories in the Epics and Puranas of India) கருத்துப்படி ராஸக்கிரீடையின் போது கண்ணனுக்கு வயது 11. ஏ.சி. பக்தி வேதாந்தரோ (Krishna: The Supreme Personality of Godhead Vol.I) அப்போது கண்ணனுக்கு 8 வயது என்று கணிக்கிறார். இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளும் போது ராஸக்கிரீடையினைப் பற்றிய சிற்றின்பக் கண்ணோட்டம் மறைந்து போகிறது.

கீத கோவிந்தம்

கவிஞன் வாழ்த்தொடு கண்ணன் மகிழ்வு

மேகத்திரள் இன்று விண்ணை மறைக்குது
தமாலத்திரட்சியோ வனத்தை இருட்டுது
கனக்கும் இரவோ அவனைத் தெருட்டுது
ராதா! அவனை நடத்திச் சென்றிடு!

மாதவன் ராதை உள்ளுறு புணர்ச்சி
யமுனைக்கரையில் நிறைவுறுங்காறும்
அடர்செடி காடுகள் அனைத்தையும் கடந்து
நந்தன் ஆணையால் நகர்ந்தனர் இருவரும்!

நாடோடிக் கவியரசன் ஜயதேவன் தான்
பத்மாவதி பதங்கள் பற்றிப் பண்கள் பாடிடுவோன்
சொற்சுவை தோய்தரு கலைமகள் தன்னை
இதயம் மயங்கி ஏற்றுக் கொண்டவன்
திருமகள் இதயம் திருடிய கண்ணனின்
களியுறு மயக்கக் கதைகளின் மீதே
இசைப்பாடல் இதனை இயற்றித் தந்துளான்.

உமாபதி தாரையிடம் சொற் சுருக்கமில்லை
ஒலியழகு மட்டுமே சரணைக்குப் பெருமை

ஜயதேவன் ஒருவனே சொல்லழகு வார்ப்பவன்!
இசைபொழி கவிதையில் தோயியே இணையிலான்!
களிமயக்கக் கவிதையிலும் புனிதப் பேருண்மையிலும்
கோவர்த்தன் கவிதையினை விஞ்சுவார் எவருமிலர்.

மாலவன் சிந்தனை மனதுக்கு வலிமையெனில்
மயக்குறும் அவன் கலைகள் மீட்டுமுனைத்
தூண்டுமெனில்
இன்சுவை தோய்தரு இசைப்பாடல் இவற்றில்
ஜயதேவன் கூறும் செஞ்சொல்லைக் கேளீர்!

ஊழியினிற் சிதைவுபடும் ஆழியிலும் கூடக்
கலங்காதுசெல்லும் கப்பல் போல் மறைகள் காப்பாய்
மச்சமாய்ப் பிறப்பெடுக்கும் மாயவனாம் நீயே
உலகத்து நாயகனே உயர் வெற்றி கொண்டிடுவாய்!

பிறை நிலவில் தொக்கி நிற்கும் தூசியினைப்போல்
உலகமே நிற்குது உந்தன் கோட்டினில்;
உருவமாய் வராகத்தை உவந்தேற்ற கண்ணா
உலகத்து நாயகனே உயர்வெற்றி கொண்டிடுவாய்!

வெண் பதுமக் கைகளது வளைநகங்கள் கொண்டு
பொன்னுடை போர்த்த இரண்யனை வகிர்ந்தாய்;
நரசிம்மத் தோற்றத்தை நயந்தேற்ற கண்ணா
உலகத்து நாயகனே உயர்வெற்றி கொண்டிடுவாய்!

மாபலியைக் கடிந்திடக் குறளையாய் உலகளந்தாய்!
உன்பதுமப் பாதநீர் உயிரினத்தைத் தூய்மை செய்யும்;
குறளையாய் உருவெடுத்த கோபியர்தம் கண்ணா
உலகத்து நாயகனே உயர்வெற்றி கொண்டிடுவாய்!

மறவர் தம் குருதியால் மண்ணகத் தீமை கடிவாய்
பிறப்பெனும் தளையினைப்பின்னடையச் செய்வாய்;
பரசுராம் ஆகிய பரம்பொருளே கண்ணா! நீ
உலகத்து நாயகனே உயர் வெற்றி கொண்டிடுவாய்!

திசைகளைப் புரந்திடும் கடவுளரின் ஆணையால்
அரக்கர் கோன் தலைகடிந்து விண்ணிலே வீசினாய்!
ரவிகுலராமனாய் உருவெடுத்த கண்ணா நீ
உலகத்து நாயகனே உயர்வெற்றி கொண்டிடுவாய்!

ஒளிர்மேனி போர்த்தியது மேக வண்ணத்து உயர்துகில்
நின் படைக்கு அஞ்சியே நீள் யமுனை நதி நடுங்கும்
பலராமப் பெயரெடுத்த பரம்பொருளாம் கண்ணா நீ
உலகத்து நாயகனே உயர்வெற்றி கொண்டிடுவாய்!

எரிவிண்மீன் ஒப்பதோர் வாளினை ஓங்கிக்
கயவர் தம் கும்பலைக் கடிந்து நீ துண்டித்தாய்;
பழிவாங்கும் கல்கியெனப் பரம்பொருளே கண்ணா நீ
உலகத்து நாயகனே உயர்வெற்றி கொண்டிடுவாய்!

உலகியல் வாழ்வின் உயர்வினைப் பேசும்
ஜெயதேவன் இறைவணக்கம் நிறைவுறக் கேண்மின்;
ஐயிரு பிறப்பினை அடைவுறும் கண்ணா நீ
உலகத்து நாயகனே உயர்வெற்றி கொண்டிடுவாய்!

சதுர்வேதம் புரக்கின்றாய்!
மண்ணுலகைக் காக்கின்றாய்!
உலகிதனைப் படைத்துள்ளாய்!
தீநரனைக் கடிகின்றாய்!
பாலியினைத் தெருட்டுகின்றாய்!
அரக்கர் குலம் அழிக்கின்றாய்!
மேழியினைச் சுமக்கின்றாய்!

மெல்லிரக்கம் பரப்புகின்றாய்!
ஈரைந்து பிறப்பை எடுத்துள்ளாய் நீயே
கைகூப்பி உன்னை வணங்குவன் கண்ணா!

சீதேவி மார்பகத்தில் மஞ்சமாய்க் கிடப்பாய்!
இருசெவி வளையம் விரும்பியே அணிந்து
காட்டுப்பூ மாலைதனைக் கழுத்தில் அணிவாய்!
வெற்றியாம் அரிகரனே வெற்றி கொள்வாய்!

இம்மைத்தளை நீ உடைத்தெறி போழ்தில்
ஓங்கி உயர் ஞாயிற்று ஒளிவட்டம் உனைச்சுற்றி!
ஞானியர் உளக்கயத்தில் படிகின்ற அன்னமொத்த
வெற்றியாம் அரிகரனே வெற்றி கொள்வாய்!

நச்சரவுக் கலியினை நீ நலிவுறச் செய்கின்றாய்!
ஆதவன் ஒளிப்படலம் தாமரையை முகிழ்ப்பது போல்
யதுகுலக் கேளிரை நீ எந்நாளும் களிப்பிக்கின்றாய்
வெற்றியாம் அரிகரனே வெற்றி கொள்வாய்!

கொடிய பெருங்கருடனை வாகனமாக் கொண்டு
மாது முரா நரகெனும் அவுணரை நசித்து
ஏனைய கடவுளருக்கு எத்தீங்கும் புரியாத
வெற்றியாம் அரிகரனே வெற்றி கொள்வாய்!

அனைத்துணரும் அழகிய தாமரைக் கண்கள் நோக்கால்
இம்மைத் தளை நீக்கி எம்மை ஆட்கொண்டிடுவாய்!
மூவேறு உலகு தொறும் முறையாக உயிர்புரக்கும்
வெற்றியாம் அரிகரனே வெற்றி கொள்வாய்!

சனகன் பெற்ற அன்னம் உன்னை அழகு செய்கின்றாள்!
அரக்கர்குலத் தூடண்னை அடக்கியே ஆளுகின்றாய்!

ஐயிருதலை அரக்கர்கோனைப் போரில் வதம் புரிகின்ற
வெற்றியாம் அரிகரனே வெற்றி கொள்வாய்!

கார்மேகப் பேரெழிலே நுந்தன் எழிலாகும்!
மலைமத்தால் கடல் கடைந்து அமுதம் காண்பாய்!
அல்பறவைக் கண்ணாலே மதிமுகத்தாள் சீதேவி
அழகுநுகரும்
வெற்றியாம் அரிகரனே வெற்றி கொள்வாய்!

இறையினை வணங்கிடும் இந்தக் கவிதன்னை
நல்வழியின் பாட்டென நான் நவிலும் செயலைக்
கவிஞன் செயதேவன் களிப்பொடு செய்கிறேன்
வெற்றியாம் அரிகரனே வெற்றி கொள்வாய்!

சீதேவி மார்பகம் மிசைபட முயங்கி
அருந்தேவி அணைப்பிலவன் ஓய்வுறு பொழுதில்
மதுவைத் தடிந்தவன் செஞ்சாந்து நெஞ்சு
களிமயக்கச் செம்மையால் கறைதனைக் காட்டிற்று!
கலவி மயக்கமோ குறுவியரைக் கொட்டிற்று!
அனையவன்நெஞ்சம் உன்னையும் களிப்பிக்கும்.

வசந்தம் வருகாலைப் பூவிதழ் இராதா
காற்றில் அலைவுறு பூங்கொடியொப்பக்
கண்ணனைத் தேடிக் கானில் அலைந்தாள்.
அவளது விரகம் அதிகரிப்பான் போல்
காமக்கடவுளும் வேதனை பெருக்கினான்.

கனிவுறு பாடல் மெல்லிதின் இசைத்த
அவளது தோழியர் அதனையே செய்தனர்.

சாந்துவளர் மலைக் காற்றால் மென்லவங்கக்
கொடியசையக்
குயிலோசை ரீங்காரம் காட்டுக் குடிசையினைச் சூழ வரும்!
எழில் சொட்டும் ஏந்திழையர் கைபிடித்து நடமாட
வளமுறு வசந்தம் அதில் சுற்றிடுவான் அரிகரனும்
தனித்திருக்கும் காதலரோ தாங்கொணாத் துன்புறுவர்.

கணவனைப் பிரிந்தார் வேதனையில் வெதும்ப
மதுகரக் கூட்டமோ மலர்த்தொகுதி சூழ்ந்து வரும்!
எழில் சொட்டும் ஏந்திழையர் கைபிடித்து நடமாட
வளமுறு வசந்தம் அதில் சுற்றிடுவான் அரிகரனும்
தனித்திருக்கும் காதலரோ தாங்கொணாத் துன்புறுவர்.

மான்மத மணமே தமால மரக்கிளை தோறும்;
காதலின் நகமென உளங்கிழி மலரிதழ்!
எழில் சொட்டும் ஏந்திழையர் கைபிடித்து நடமாட
வளமுறு வசந்தம் அதில் சுற்றிடுவான் அரிகரனும்
தனித்திருக்கும் காதலரோ தாங்கொணாத் துன்புறுவர்

செம்மலர்ச் சூலகம் காதலின் செங்கோல்!
பாடல மலர்களோ அம்புறை கூடுகள்!
எழில் சொட்டும் ஏந்திழையர் கைபிடித்து நடமாட
வளமுறு வசந்தமதில் சுற்றிடுவான் அரிகரனும்
தனித்திருக்கும் காதலரோ தாங்கொணாத் துன்புறுவர்.

நாண் துறந்த நங்கைபோல் மொக்குள் அலர்ந்தது!
விண்ணுறு தாழையோ விரகியர் தாபம் குலைத்திடுது!
எழில் சொட்டும் ஏந்திழையர் கைபிடித்து நடமாட
வளமுறு வசந்தமதில் சுற்றிடுவான் அரிகரனும்
தனித்திருக்கும் காதலரோ தாங்கொணாத் துன்புறுவர்.

மயங்கிய பூங்கொடி மணம் பிணையுது
மாலையின் மணத்தோடு!
இளையோர் பிணைப்பால் ஏங்குது ஈங்கே
ஞானியர் இதயங்களே!
சொட்டும் களையின் எழிலார் கைபிடித்தீங்கே நடமாட
அன்புறு வசந்தம் அணைவுற ஆங்கே வருவான்
அரிகரனும்
தனித்திருக்கும் காதலர் துன்பம் தாங்க
ஒண்ணா திப்போது!

வளர்கொடி அணைப்பில் தளருது அசையுது
அழகிய மாங்கொம்பு!
நெளிந்து வளையும் யமுனை நீரில்
பிருந்தாவனமே நனைகிறது!
சொட்டும் களையின் எழிலார் கைபிடித் தீங்கே
நடமாட
அன்புறு வசந்தம் அணைவுற ஆங்கே வருவான்
அரிகரனும்
தனித்திருக்கும் காதலர் துன்பம் தாங்க
ஒண்ணா திப்போது!

ஜயதேவன் பாடலிது அரிகரனை நினைவூட்டும்
வசந்தத்தில் மலர்வனமே மன்மதனை நினைவூட்டும்!
சொட்டும் களையொடு எழிலார் கைபிடித் தீங்கே நடமாட
அன்புறு வசந்தம் அணைவுற ஆங்கே வருவான்
அரிகரனும்
தனித்திருக்கும் காதலர் துன்பம் தாங்க ஒண்ணாதிப் போது!

அலர்ந்த மல்லிகை அரவணைத்த பின்னர்
மணம்தூங்கு மகரந்தம் தன்மீது சுமந்துகொண்டு
மூடிய மலர்க்கூட்டம் முகிழ்வித்த மென்காற்று

காதல் மணத்தினையும் கைக்கொண்டு உலவிநிதம்
இதயத்தை நெகிழ்த்திடவே ஈங்கேயும் வந்துளது.

மொட்டுகளை உடைத்துத் தேன்குடிக்கும் வண்டின் ஒலி
மாங்கிளையில் மகிழ்ச்சிகொள் குயிற்கூட்டம் குலைவித்துத்
தனிப்பயணம் செய்வோரின் தாபத்தை அதிகரிக்கும்.
இருப்பினும் தியானத்தில் அவரெலாம் திரும்பி
காதலரின் களிமயக்க இன்பமதைக் கருத்தாலே
பெற்றுவந்து இந்நாளில் பிழைத்தீங்கு வாழ்கின்றார்.

மூராவைத் தடிந்தானை முன்னிறுத்திக் காட்டி
மகளிர் அழகார் மார்புறத் தழுவியோன்
கவர்ச்சிக் களிப்பில் மெத்த மகிழ்ந்து
ராதா நினைவைத் திருப்பிட வேண்டி
அவளது நண்பனாய்க் கீதம் இசைக்கிறேன்.

சாந்துகமழ் மேனிதிகழ் காட்டுமலர் மாலை கருமஞ்சள் பட்டு!
காதொளிரும் குண்டலமோ முறுவல்முகம் அழகு செயும்!
ஏந்திழையார் தாம் செலுத்தும் எழில் மருட்சிப் பார்வையினால்
கலங்கி நிற்கும் அரிகரனோ களிப்பினிலே ஆழ்கின்றான்.

விம்முறு கொங்கையாள் வேகமொடு அணைத்து
அரியின் செவிமகிழ்க் கீதம் இசைத்தாள்!
ஏந்திழையர் செலுத்துகின்ற எழில் மருட்சிப் பார்வையினால்
கலங்கி நிற்கும் அரிகரனோ களிப்பினில் ஆழ்கின்றான்.

அவன்காதல் நோக்காலே அலமந்த ஓர் நங்கை
மது தடிந்த மலர்முகத்தான் மறைமுகத்தை உன்னினாள்;

ஏந்திழையார் தாம் செலுத்தும் எழில்மருட்சிப்
பார்வையினால்
கலங்கி நிற்கும் அரிகரனோ களிப்பினிலே ஆழ்கின்றான்!

துடியிடையாள் ஒருதோகை பணிந்து சொலும்போது
ஒளிரும் அவன் கன்னமதில் தன் உதட்டைப் பதித்தாள்!
ஏந்திழையார் தாம் செலுத்தும் எழில்மருட்சிப்
பார்வையினால்
கலங்கிநிற்கும் அரிகரனோ களிப்பினிலே ஆழ்கிறான்.

அவனது லீலை விழைந்த அழகி யமுனைக் கரையினிலே
பட்டுடையானைப் பற்றியிழுத்தாள் பல்நீர்ச்செடி நோக்கி!
ஏந்திழையாரின் எழில்மிகு பார்வை மருட்சியினாலே
கலங்கிநிற்கும் அரிகரனோ மிகக்களிப்பினில்
ஆழ்கின்றான்.

அரியே புகழும் இவளோ இந்தக் காதலில் தேர்ந்தவளாம்
வளைகுலுங்கக் கைதட்டிக் குழலே நிகர்ப்ப
ஒலிக்கின்றாள்.
ஏந்திழையாளின் எழில்மிகு பார்வை மருட்சியினாலே
கலங்கிநிற்கும் அரிகரனோ நிதம்களிப்பில் ஆழ்கின்றான்.

முறுவல்தருவாளை உற்றுப்பார்த்து மோகனக்காரியைக்
கண்ணாற் சிமிட்டி
மெல்லிதழாளை மேனி அணைத்து மேகமேனியாளை
வருடிக்கொடுத்து
ஏந்திழையாளின் எழில்மிகு பார்வை மருட்சியினாலே
மயங்கிநிற்கும் அரிகரனோ நிதம்களிப்பில் ஆழ்கின்றான்.

பிருந்தாவனத்தில் கண்ணன் லீலைகள் வியத்தகு
புதிராகும்.

கனிவுறப்போற்றும் ஜயதேவனாலே கண்ணன் பெருமை
பொங்கட்டும்.

ஏந்திழையாளின் எழில்மிகு பார்வை மருட்சியினாலே
மயங்கி நிற்கும் அரிகரனோ நிதம் களிப்பில் ஆழ்கின்றான்.

நலமே பாரில் தழைத்திட ஓங்கி
அனைத்துப் பொருளும் விரைந்து பெருகுங்கால்,
இனிய கண்ணனின் வலிய உறுப்புகள்
சால்புறச் செய்யும் சரச லீலைகளை!
அடைக்கலம் புகவரு இடைக்குல மடந்தையர்
அந்தளிர் மேனியில் அவன்தனைச் சுற்றிடுவர்.
வாலிபக் கண்ணன் வசந்த ருதுவில் லீலைகள்
புரிகின்றான்.
மானுட வாழ்வில் சிற்றின்பத்தை மயங்கிக் களிக்கின்றான்!

வெப்பம் மீதூர்ந்த மண்ணக மடியில்
எண்ணிலாக் காலம் சுருண்டு நெளிந்து போய்
அந்தண் சந்தனக் குன்றணையும் காற்று
குளிர்பனிச் சேற்றிலே குழைந்து கலந்திட
இமயத்து மாமலையை நோக்கி அங்கு வீசும்.
மாமரக் கிளையின் உச்சிகள் தோறும்
செவ்விதின் முகிழ்க்கும் அரும்புகள் கண்டு
மெல்லவே மேலெழும் குயிலின் கீதம்
களிப்புறு மகிழ்ச்சியைக் காட்டியே நிற்கும்.

இரண்டாம் பாகம்

கவலையற்ற கண்ணன்

காண்டொறும் மகளிரைக் காதல் செய்வானாய்
அரிகரன் கானில் அலையுறும் போழ்தில்
ராதை தன் பிடிப்பினைத் தளர்த்தியதன்றி
காழ்ப்பின் உச்சியில் கடிதில் அகன்றாள்.
முயன்று ஒதுங்கி யாங்கணும் செல்லினும்
செழித்துக் கொழித்த செடிகொடி மீதுலவு
சிள்ளெனும் வண்டொலி சிந்தை கலக்கிடும்.
தோழியிடம் அவளிந்தத் துன்பத்தை ஓதிடுவாள்.

மயக்குறு குழலிசை அமுதம் அவனது
உதடுகள் பொழிந்திடுது!
அலைவுறு கண்கள் அசையும் முகத்தில்
குண்டலம் ஒளிவிடுது!
ஏய்த்து நகைத்து எழிலொடு கவர்ந்த
அரியின் நினைவில் இதயம் அலமருது!

நிலவொளிவீசும் மயிலின் இறகுகள் தலையில் அணி
செய்திடும்.

கார்நிற மேனியில் தவழும் அங்கியை வானவில்
வண்ணமிடும்.

ஏய்த்து நகைத்து எழிலொடு கவர்ந்த
அரியின் நினைவில் இதயம் அலமருது!

சிற்றிடைக் கோபியர் இடுகிற முத்தம் அவன்
இச்சை தணிக்கிறது!
செந்துவர் வாயான் சிந்தும் புன்னகை ஒளியென
மின்னிடுது!
ஏய்த்து நகைத்து எழிலொடு கவர்ந்த
அரியின் நினைவில் இதயம் அலமருது!

அணைக்கத் துடித்திட அவனது கரங்கள்
ஆயிர மகளிரை வளைத்திடுது!
அடியொடு முடியும் தளரா நெஞ்சம் இருளைக்
கீண்டி ஒளியினை வீசிடுது!
ஏய்த்து நகைத்து எழிலொடு கவர்ந்த
அரியின் நினைவில் இதயம் அலமருது!

நெற்றி மீதிடு சாந்துப்பொட்டால் நிலவின்
ஒளியும் மங்கிடுது!
இதயக் கதவுகள் உரசும்போது விம்மிடும்
கொங்கை சிராய்ப்புறுது!
ஏய்த்து நகைத்து எழிலொடு கவர்ந்த
அரியின் நினைவில் இதயம் அலமருது!

கடலரவொத்த காதணிமணியால் கன்னம் ஒளிதருது!
மஞ்சளுடையான் பின்னே வருவது கடவுளர்
ஆவிகள் ஞானியரே!
ஏய்த்து நகைத்து எழிலொடு கவர்ந்த
அரியின் நினைவில் இதயம் அலமருது!

பூமரத்தடியில் கரத்தைப்பற்றி இருளின் அச்சம்
போக்கிடுவான்!
இதயத்தின் ஆழம் தன்னை நோக்கி
இதயம் களித்திடுவான்.
ஏய்த்து நகைத்து எழிலொடு கவர்ந்த
அரியின் நினைவில் இதயம் அலமருதே!

மாகவி ஜயதேவன்பா மதுவைத் தடிந்தோன் அழகிய
முகத்தை
மனத்திற் கொணர்கிறது!
அரியின் பாதம் ஆழ்ந்து நினைக்கும் ஆற்றல்
மிக்கோர்க் கேற்றதுவே!
ஏய்த்து நகைத்து எழிலொடு கவர்ந்த
அரியின் நினைவில் இதயம் அலமருதே!

இழிதரு செயல்கள் அவன் செய்த போதும்
எந்தன் உள்ளம் ஏற்கிறதே!
எத்துணைக் கோபம் எதனையுமேற்க மறுக்கிறதே!
சிந்தையிற் களிப்பினைச் சிறப்புறப் பெற்று
அவன்றன் பிழைகளை மறுக்கிறதே!
தளரா அன்புடன் தழுவிடக் கருதி
இளைய மகளிரைக் களவினிற் புணர
கண்ணனே என்னைக் கரந்து ஒதுக்கினும்
அழிபடும் எந்தன் ஆர்வ நெஞ்சமோ
கண்ணனை மீண்டும் காண விரும்புது!
செய்வது யாதென அறிகிலேன் யானே!

கரந்திரவில் கண்ணன் உறை
கானகக் குடிலை யானடைந்தேன்;
படபடக்கும் கண்களினால் தேடுகின்ற போதில்
பாலுணர்வால் நகைத்திடுவான்!

கேசியை வதைப்போன் கேளிக்கையாடக்
கொணர்வாய் தோழி நீ!
அவனது சபலம் காதலாய் மாறிடத்
தவமே கிடக்கின்றேன்.

நேரில் நாணும் என்னைப் பார்த்துப்
புகழ்ந்துரை கூறிடுவான்!
புன்னகை சிந்துமென் இடுப்புப் பட்டுடை
இழுத்து விட்டிடுவான்!
கேசியை வதைப்போன் கேளிக்கை யாடக்
கொணர்வாய் தோழி நீ!
அவனது சபலம் காதலாய் மாறிடத்
தவமே கிடக்கின்றேன்.

தாவர அணையில் தமியேன் வீழத் தவ்விடுவானென்
கொங்கைகள் மீது!
முத்தமிட்டவனை அணைத்திடு காலை
ஒட்டியே எந்தன் உமிழ்நீர் குடிப்பான்!
கேசியை வதைப்போன் கேளிக்கையாடக்
கொணர்வாய் தோழி நீ!
அவனது சபலம் காதலாய் மாறிடத்
தவமே கிடக்கின்றேன்.

அவனிரு கன்னம் துடிக்குங்கால்
என்னிரு கண்கள் அயர்ந்து குழையும்.
குறுவியர் என்னை நனைத்திடு போழ்தில்
கள்வெறி கொண்டு மயக்கிடுவான்!
கேசியை வதைப்போன் கேளிக்கையாடக்
கொணர்வாய் தோழி நீ!
அவனது சபலம் காதலாய் மாறிடத்
தவமே கிடக்கின்றேன்.

குயிலெனக் குழைந்து கவ்வுங்கால், காமக்
கலையினைப் பயிலுவன் அவனே!
அவிழுமென் கூந்தலில் கசங்கிய மலர்கள்; அவனது
நகக்குறி என்னிரு மார்பில்!
கேசியை வதைப்போன் கேளிக்கையாடக்
கொணர்வாய் தோழி நீ!
அவனது சபலம் காதலாய் மாறிடத்
தவமே கிடக்கின்றேன்.

மீதுறும் அவனது கலவிக் களிப்பை
என்னிரு சிலம்புகள் எதிரொலிக்கும்!
முடிபற்றி எனையவன் முத்தமிடுங்கால்
எந்தன் இடுப்பணி இற்றுக்கழன்றிடும்.
கேசியை வதைப்போன் கேளிக்கையாடக்
கொணர்வாய் தோழி நீ!
அவனது சபலம் காதலாய் மாறிடத்
தவமே கிடக்கின்றேன்.

மோனக் களிப்பு யானுணர் காலை
அவனது மலர்க்கண் அகலநோக்கிடும்!
துவளும் கொடியென யான்வீழ் காலை
மாதவன் மேலும் மயங்கி நோக்குவன்.
கேசியை வதைப்போன் கேளிக்கையாடக்
கொணர்வாய் தோழி நீ!
அவனது சபலம் காதலாய் மாறிடத் தவமே
கிடக்கின்றேன்.

மாதவன் மயங்கு ராதை காதலை
மாகவி தேவன் பாடுகிறேன்
ஆயர் மகளிரின் காதற் கதைகள்
அவனால் உலகில் பரவட்டும்.

கேசியை வதைப்போன் கேளிக்கையாடக்
கொணர்வாய் தோழி நீ!
அவனது சபலம் காதலாய் மாறிடத்
தவமே கிடக்கின்றேன்.

ராதையின் கூற்று

அவன் கரம் தவழும் அழகிய பூங்குயில்
வெட்கமுடன் காண்தக வீழ்ந்து கிடக்கிறது.
காதல் குறுவியர் கன்னம் நனைக்கிறது.
களைத்திடு முகமோ குறுநகை பூக்கிறது!
கோபியர் கூட்டம் தன்னுடன் கூடி
களித்திடும் அவனை நோக்கும் என்னைக்
கண்ணன் நன்றாய்க் கண்டுகொண்டபின்
களிப்பின் எல்லையைக் காண்கின்றேன் யான்!

பொய்கைக் கரைத்தோட்டம் புகுந்து வருகாற்று
பசுங்கிளை அசோக மொட்டுகள் முகிழ்த்து
செந்நிறப் பூக்களாய்ச் செறிந்திட வைத்து
நெருப்பின் விசிறியாய் எரித்துக் கொல்லும்;
மலைபோல் பூத்திடு மாம்பூ மணத்தில்
சிள்ளெனும் ஒளிவிடு தேனீக் கூட்டம்
சிந்தையை நோகச் செய்யுது தோழி!

மூன்றாம் பாகம்

கவலையுற்ற கண்ணன்

கம்சனின் வைரி கார்மேக வண்ணனின்
இதயம் ராதையின் மையலால் தளைபட
நினைவெலாம் உயிர்நலன் பற்றியே நின்றிட
ஆயர் மகளிரை விட்டகன்றான் கண்ணன்.

ராதையைத் தேடியும் கண்டிலன் ஆகவே
களைப்புறு சிந்தையைக் கணைகள் துளைத்தன.
யமுனைக் கரையின் சோலையில் அமர்ந்து
துன்புறு மாதவன் தொல்லையில் ஆழ்ந்தான்.

ஏந்திழையார் நடுவில் என்னையவள் கண்டாள்
வெட்கிய என்னை விட்டகன்று சென்றாள்!
அவளைத் தடுத்திடும் ஆற்றல் எனக்கில்லை.
அழிவுறும் யான் புரிந்த அன்றாடக் களியாட்டம்
கன்னியவள் புறம்போகக் காரணமாய் ஆயிற்று.

இத்துணைக்காலம் புறக்கணித்த என்னையவள்
என்னவெலாம் சொல்லி எதையெல்லாம் செய்வாளோ?
மாடுமனை மக்கள் சுற்ற வாழ்க்கையினாற் பயனில்லை.

அழிவுறும் யான் புரிந்த அன்றாடக் களியாட்டம்
கன்னியவள் புறம்போகக் காரணமாய் ஆயிற்று.

செந்நிறத் தாமரைமேல் சுற்றிவரும் சிள்வண்டாய்
எரிதவழ் அவள் முகத்தில் வளைந்திடும் புருவ எழில்
நினைவிலே தங்கிட நித்தமும் யான் ஏங்குகின்றேன்.
அழிவுறும் யான் புரிந்த அன்றாடக் களியாட்டம்
கன்னியவள் புறம்போகக் காரணமாய் ஆயிற்று.

இதயத்தே உறக்கமிலை என்றாலும்கூட
அவளது காதலால் அகமகிழும்போது
காடுதனில் ஏனவளைத் தேடிச் செல வேண்டும்?
அழிவுறும் யான் புரிந்த அன்றாடக் களியாட்டம்
கன்னியவள் புறம்போகக் காரணமாய் ஆயிற்று!

கவலைதோய் ராதாவே! காழ்ப்புணர்ச்சி உனைக்கொல்லும்!
எங்குளாய் என்பதுவே எனக்கொன்றும் தெரியாமல்
எப்படி என் பிழைதன்னை நீ பொறுக்க வேண்டுவன் யான்?
அழிவுறும் யான் புரிந்த அன்றாடக் களியாட்டம்
கன்னியவள் புறம்போகக் காரணமாய் ஆயிற்று.

தோன்றியும் மறைந்தும் தொடர்ந்தென்னைச் சுற்றுகிறாய்!
அற்றைநாள் உடல் வளைந்து ஆரத்தழுவிய நீ
இற்றைநாள் அச்சுகத்தை ஏனோ மறுக்கின்றாய்?
அழிவுறும் யான் புரிந்த அன்றாடக் களியாட்டம்
கன்னியவள் புறம்போகக் காரணமாய் ஆயிற்று.

என்னைப் பொறுத்திடவே இப்போது வேண்டுகிறேன்!
இழைத்த பிழை தன்னை இனியும் நான் செய்துவிடேன்!
எழில் கொஞ்சும் ராதாவே! எரிகிறேன் காதலால்! காட்சி தருவாய்!

அழிவுறும் யான் புரிந்த அன்றாடக் களியாட்டம்
கன்னியவள் புறம்போகக் காரணமாய் ஆயிற்று.

ஜயதேவன் உணர்வுமிக அரிநிலையைப் படம்பிடித்தான்;
அக்கவிஞன் உறைவிடமே அழகுபதி கிந்துபில்வம்.
கடல் குளித்து விண்ணிலெழும் ஒளிமதியை ஒத்ததுவாம்.
அழிவுறும் யான்புரிந்த அன்றாடக் களியாட்டம்
கன்னியவள் புறம்போகக் காரணமாய் ஆயிற்று.

என் மார்பு சூட்டுவதோ தாமரையின் மலர்த்தண்டு
படைநடுங்கும் பாம்புகளின் பாங்கான வரிசையில்லை.
கண்டத்தின் உள்ளிடத்தில் கடுவிடத்தைக் கொண்டிலேன்
நீல்நிறத்து அல்லியிதழ் நேரிதாய்ச் சுற்றிநிற்கும்!
காதல் வயப்பட்டிருக்கும் என் உடலில் நீறல்ல!
தண்ணிய நறுஞ்சாந்தின் மென்பொடியே பரவி நிற்கும்.
ஆகையினால் மாரனே! சிவனாக எனையெண்ணிச்
சீற்றமுடன் பாய்ந்து ஏன் சிதைவிக்கின்றாய்?

மாம்பூ மலர்க்கணையை மாரனாய் எய்யாதே!
வில்லினை நாண்பூட்டி வேகமாய்க் குறியாதே!
எது யாங்கள் செய்திடுனும் வெற்றியெலாம் உனதே!
ஏலாத எனைவீழ்த்தல் தரமான வெற்றியல்ல!
மருளுகின்ற மான்விழியள் ராதாதன் பார்வையினால்
உருகும் என்இதயத்தை உடைத்தெறிந்து போய்விட்டாள்.
காதல்வயமானஎனை இயலாதுகைதூக்க யாராலுமிப்போ!

புருவமெனும் வில்மறைக்கும் பார்வையெனும் அம்புகளோ
மெல்லிய என் உடலை மெலிவித்துத் தொல்லைதரும்.
காரிருள் ஒத்த உன் நீள்சடைப் பின்னலோ
முறைதிறம்பி நெறிபிறழ்ந்து முற்றுமாய்க் கொன்றுவிடும்.
கொடியிடைராதாவே! நின் சுவைமிகுந்த பவள இதழ்
மோனக் கிறக்கத்தை மூட்டிவிடும் தன்மையது.

ஆனாலும் எப்படியுன் வட்டஇதழ் மார்பகங்கள்
என்னைக் கலக்கி நிதம் என்வாழ்வை நிலைகுலைக்கும்?

தண்ணிய என்கரம் பட்டால் தளிர்மேனி சிலிப்பாள்;
உவகையுடன் அவள் விழிகள் உயிர்ப்புடனே மிரளும்!
நற்றாமரை வாயில் நறுமணமே வீசும்
பேசிடும் சொற்களோ பின்பொருள் பலதரும்!
பவள இதழ்ப் பளிங்குதட்டில் பாய்வதுவோ அமிழ்தம்!
காணும் பொருள்களிவைக் காண இயலாவிடினும்
என் உள்ளம் அவளூடு மயங்கிக் கிடக்கிறது
எப்படிப்பின் அவள் பிரிவு என்னைத் துளைக்கிறது?

வளைந்திடும் அவள் புருவம் அவளது வில்லாகும்
துளைத்திடும் அவள் பார்வை கூரிய அம்பாகும்.
அவளது காது மடல் முறுக்கிய நாணாகும்.
காதல் மிகுதேவியின் காப்புமனை தனிலே
படைகளின் கருவிக்குப் பாதுகாவல் தேவையோ!
உலகமே அவள் வயம் கட்டுண்டு கிடக்கிறது.

நான்காம் பாகம்

மெல்லிதயக் கண்ணன்

கனிவுறு காதல் பாரமாய் அழுத்திட
யமுனை நதிக்கரையில் நாணல் புதல் அருகில்
மாதவன் தனியனாய் மனஞ்சோர்ந்து காத்திருந்தான்.
ராதையின் தோழியே அவனிடம் பேசினாள்.

விண்ணகத்துச் சந்திரனும் கிண்ணத்துச் சந்தனமும்
வெறுத்தே ஒதுக்குகின்றாள் சோர்வினால் அலமந்து!
சந்தன மரக் காடுறையும் கொடிய வெந்நாகத்தின்
கடுவிடத்தை நுகர்ந்தாள்போல் களைத்துக் கிடக்கின்றாள்.
மாரவேள் கணைக்கு அஞ்சிப் பிரிவினால் அலமந்து
மயங்கிக் கிடக்கின்றாள் ஆயினும் மாதவா!
மானசீகத்தால் உன்தன்னை மருவியே மகிழ்கின்றாள்.

கனன்றெரி காதல் நெருப்பினின்றுன்னை
புரந்தர எண்ணுகின்ற பூங்கொடியாள் இவளோ
பூந்தாமரை இதழைப் பொன்மார்பில் போர்த்தியே
அணைத்திடும் உந்தனை அழகுறக் காக்கிறாள்.
மாரவேள் கணைக்கு அஞ்சிப் பிரிவினால் அலமந்து
மயங்கிக் கிடக்கின்றாள் ஆயினும் மாதவா!
மானசீகத்தால் உன்தன்னை மருவியே மகிழ்கின்றாள்.

காமுறு கலையும் கவினுறப் பயன்பட
விழைகிறாள் அம்பின் வியன்மலர்ப்படுக்கை!
உந்தன் அணைப்பில் உளமது மகிழ்ந்திட
மலரணைப் படுக்கையில் மாதவம் புரிகிறாள்.
மாரவேள் கணைக்கு அஞ்சிப் பிரிவினால் அலமந்து
மயங்கிக் கிடக்கிறாள் ஆயினும் மாதவா!
மானசீகத்தால் உன்தன்னை மருவியே மகிழ்கின்றாள்!

ராகுவின் பற்கள் கடித்திடும் போதில்
அழகுறு மதியோ அமுதினைச் சொட்டுதல் போல்
முழுநிறைத் தாமரை முகத்தினை உயர்த்தியே
கலங்கி மயங்கிடக் கண்ணீர் சொட்டுவாள்!
மாரவேள் கணைக்கு அஞ்சிப் பிரிவினால் அலமந்து
மயங்கிக் கிடக்கிறாள் ஆயினும் மாதவா!
மானசீகத்தால் உன்தன்னை மருவியே மகிழ்கின்றாள்!

மான்மதச் சாந்தினால் யாரும் அறியாமலே
காமனாய் உன்தன்னைக் கருத்தொன்றி வரைகிறாள்.
அலைகடல் விலங்கின்மேல் ஆரோகணித்துமே
மாம்பூ மலர்க்கணையால் உனைத்தினம் தொழுகிறாள்.
மாரவேள் கணைக்கு அஞ்சிப் பிரிவினால் அலமந்து
மயங்கிக் கிடக்கிறாள் ஆயினும் மாதவா!
மானசீகத்தால் உன்தன்னை மருவியே மகிழ்கின்றாள்.

அன்பினாற் பிணிப்புண்ட ஆரணங்கு கூவுகின்றாள்
மாதவா உந்தன் மலரடியில் வீழ்கின்றேன்!
உன்முகம் மறைந்திடில் ஒளிமதி சுட்டிடும்
என்றிவை சொல்லி அவள் இன்னமும் அழுகின்றாள்!
மாரவேள் கணைக்கு அஞ்சிப் பிரிவினால் அலமந்து
மயங்கிக் கிடக்கிறாள் ஆயினும் மாதவா!
மானசீகத்தால் உன்தன்னை மருவியே மகிழ்கின்றாள்.

சேய்மையில் காணுமுன் உருவத்தைச் சேர்ந்திட
உன்னையே எண்ணி நிதம் உயர்தவம் புரிகிறாள்!
கழிவிரக்கம் மீதூரக் கதறுவாள், நடுங்குவாள்.
அழுங்குவாள், சிரிப்பாள், அலமந்து மயங்கிடுவாள்
மாரவேள் கணைக்கு அஞ்சிப் பிரிவினால் அலமந்து
மயங்கிக் கிடக்கின்றாள் ஆயினும் மாதவா!
மானசீகத்தால் உன்தன்னை மருவியே மகிழ்கின்றாள்.

மனம்கொளும் கவிதையாம் ஜயதேவன் பாடலை
நடமிடுசிந்தனை உன்உள்ளம் கொண்டிருந்தால்
அரிகரன் விலகிய ராதாவின் துயரத்தை
அவளது தோழி உரைத்திடல் கேண்மினோ!
மாரவேள் கணைக்கு அஞ்சிப் பிரிவினால் அலமந்து
மயங்கிக் கிடக்கின்றாள் ஆயினும் மாதவா!
மானசீகத்தால் உன்தன்னை மருவியே மகிழ்கின்றாள்.

தானுறையும் இல்லத்தைக் கானகமாய்க் கருதுகிறாள்.
பழகிவரு தோழிதரும் அழகு மலர் மாலைதன்னைக்
கண்ணி வலையென எண்ணிக் கன்னியவள் கவல்கிறாள்.
கானக நெருப்பெனக் கனன்றெரியும் காதலினை
உயிர்த்திடும் பெருமூச்சு விசிறியாய்த் தூண்டிடும்.
பிரிவினால் அலமரும் பேதையிவள் தானும்
மானுருவம் கொண்டாற்போல் மயங்கிக் கிடக்கிறாள்.
விளைகின்ற மதன்வேட்கை வேட்டைப் புலியெனவே
பாய்ந்து செயற்பட்டுப் பாவையைக் கொன்றிடுது!

தளர்ந்துகக் கிடக்கும் தையலாள் கொங்கையில்
பரந்து படிந்துள அலங்கலும் பாரமாம்!
கண்ணனே உன் பிரிவால் கலங்குவள் ராதா!

மெல்லிய மேனியில் குழைந்திடும் சந்தனம்
கொடிய வெந் நஞ்செனக் கூறுவாள் அவளும்!
கண்ணனே உன் பிரிவால் கலங்குவள் ராதா!

விடுகின்ற பெருமூச்சோ வீசிடும் பெருங்காற்றாய்க்
காதல் நெருப்பை கனன்றெரியச் செய்கிறது.
கண்ணனே உன் பிரிவால் கலங்குவள் ராதா!

தண்டுடைந்த தாமரையின் பனித்துளி சிதறுவபோல்
அவளது மலர்விழிகள் கண்ணீரைச் சிந்திடும்!
கண்ணனே உன் பிரிவால் கலங்குவள் ராதா!

தையல் காண்பதோ தளிரணை எனினும்
தீயின் படுக்கையாய்க் கற்பனை செய்குவள்!
கண்ணனே உன் பிரிவால் கலங்குவள் ராதா!

மாலை விண்ணின் தேய் பிறை போன்றே
கன்னக் கதுப்பினில் கரத்தினை வைத்துளாள்!
கண்ணனே உன் பிரிவால் கலங்குவள் ராதா!

அவளையே வெறுத்தலால் அழிந்திடுவாள் போல
ஹரி ஹரி என்று அரற்றுவாள் அவளும்!
கண்ணனே உன் பிரிவால் கலங்குவள் ராதா!

ஜெயதேவன் கவிதையால் கண்ணன் இணையடி
வழிபடு செய்வோர் நாளும் மகிழ்வர்.
கண்ணனே உன் பிரிவால் கலங்குவள் ராதா!

துன்பத்தால் துவண்டிடுவாள், மூச்சுவிடத் திணறிடுவாள்
அழுங்குவாள் உயிர்ப்பாள் அதிர்ச்சி அடைந்திடுவாள்

ஆழ்ந்து உயிர்த்திடுவாள், அலமருவாள் சுழன்றிடுவாள்
மேலெழுவாள், கீழ்விழுவாள் மீண்டும் மயங்கிடுவாள்!

பாசமெனும் தீ இங்ஙன் பற்றியெரியுங்கால்
உன்னழகு ஒன்றேதான் அவளுயிரைக் காத்திடலாம்.
பரிவு நீ கொண்டே, பாசமிகும் கண்ணா!
கைகொடுக்கவில்லையேல், காலன் வயப்பட்டிடுவாள்.

மாசற்ற அவள் தன்னின் மறுமை மருத்துவனே!
காமவலைப்பட்ட இக்கன்னியது நோயை
உள்ளூறும் அமுதத்தால் அணைத்துக் குணப்படுத்து.
தொல்லைபடு ராதாவின் துயரம் துடைத்திடுக!
இல்லையெனில் நீ கொடியை! இடியேற்றின் மிக்கோனாய்!

காமம் மிகவளர்ந்து கனன்றெரிந்தபோது
மீதூறும் நோயால் மெலிந்திடக் கிடந்து
சந்தனம் தண்கயம் சால்புறு மதியுமெண்ணி
இதயம் கனக்குங்கால் மூச்சுத் திணறுகிறாள்.
சோர்வுறும் அந்நிலையில் உன்னையே உன்னுங்கால்
உன்மார்பில் தவழ்வது போல் தன்னையே எண்ணுங்கால்
புத்துயிரை மீண்டும் அவள் பொலிவுடனே பெறுகின்றாள்.
வாடிடும் மங்கைக்கு வாழ்க்கை கிடைக்கிறது.

உன்காதல் புறக்கணிப்பில் உயிரையே இழந்துவிட்டாள்.
இவள்தனைப் பாராது கண்களை மூடினால் கவன்றிடுவள் அக்கணம்.
மாமரக் கிளையெலாம் அலர்வதைக் கண்டும் இவள்
உந்தன் புறக்கணிப்பில் எங்ஙன் உயிர்வாழ்வாள்!

ஐந்தாம் பாகம்

காதலுக்கு ஏங்கும் கண்ணன்

ராதையிடம் சென்று நயமுற நவின்றிடு!
அவளிடம் என் மொழி அன்புறக் கூறி
இணக்கப்படுத்தி நீ இட்டுவா அவளை!
கண்ணனின் ஆணையை ஏற்ற தோழியும்
ராதையிடம் கூறிட நகர்ந்தாள் அவளிடம்!

மணமுறு சந்தன மலைக்காற்று வீசுது
தாப உணர்ச்சியைத் தந்திடும்வண்ணம்!
பொன்னிறப் பூக்களாங்கே பொகுட்டினை முகிழ்க்குங்கால்
பிரிந்த இரு காதலரின் இதயம் பிளந்து விடும்.
காட்டுமலர் சூட்டியுள்ள கண்ணன் உன்பிரிவால்
கலங்கி நிற்றலை அறிவாய் நீ தோழி!

தண்ணிய விண்மதி அவனையே சாடி
சுட்டும் எரித்தும் சுந்தரனை அச்சுறுத்தும்!
காதலின் கணைகள் வீழ்கின்ற போதெலாம்
ஏக்கமே உருவாய் இளைக்கிறான் அவனும்!
காட்டுமலர் சூட்டியுள்ள கண்ணன் உன்பிரிவால்
கலங்கி நிற்றலை அறிவாய் நீ தோழி!

கண்ணன் தன் காதினைப் பொத்திடும் வண்ணம்
மொய்திரள் வண்டுகள் காதலை முரலும்.
உந்தன் பராமுகத்தால் உளம் நொந்து போகிறான்!
பிரிவுதரு வேதனையால் இரவெலாம் நைகிறான்.
காட்டுமலர் சூட்டியுள்ள கண்ணன் உன்பிரிவால்
கலங்கி நிற்றலை அறிவாய் நீ தோழி!

வளமனை வாழ்வினைப் புறத்தே ஒதுக்கி
அடர்ந்த வனந்தனில் தொடர்ந்து வாழ்கிறான்!
தன்னிலை மறந்து உன்பெயர் கூறித்
தரையில் வீழ்ந்து தளர்ந்து புலம்புவான்.
காட்டுமலர் சூட்டியுள்ள கண்ணன் உன்பிரிவால்
கலங்கி நிற்றலை அறிவாய் நீ தோழி!

கண்ணனின் தனிமையைச் செயதேவன் இசைக்கிறேன்!
அவனது பாசம் உன்னை ஆழ்ந்து மிகத்தூண்டினால்
அரியென்னும் அவன் உன்னை அன்போடு நெருங்குவான்.
காட்டுமலர் சூட்டியுள்ள கண்ணன் உன் பிரிவால்
கலங்கி நிற்றலை அறிவாய் நீ தோழி!

காதலின் சுவையை நீ முற்றும் உணர்த்திய
புனிதப் புல்லின் குறுஞ்செடி அருகில்
மாதவன் இன்னும் காத்திருக் கின்றான்.
மாயத்தை மந்திரத்தை மனதுக்குள் சொல்வான்போல்
உந்தனை எண்ணியே உறங்காது கிடக்கிறான்.
பொங்கினரு கொங்கையினைப் பொருந்த
அணைப்பதனால்
சொட்டிடும் அமுதச் சுவைக் கேங்கிக் கிடக்கிறான்.

ஆழ்ந்த உந்தன் காதலின் ஆழத்தைக் காண்டற்கே
காமக்களிப்பின் மயக்கம் தளும்பக் கரந்தே சென்றுள்ளான்.

பருத்த இடைகள் பயன்பெற வேண்டும்! பாவை ராதாவே!
உந்தன் இனிய தலைவனை நாடி நீயும் ஓடிடுக.
தென்றல் வீசிடு யமுனைக் கரையின் திரண்ட
வனந்தன்னில்
காட்டு மலரின் மாலை சூட்டிடக் கண்ணன் காத்துள்ளான்.

இனிய உனைத் தன்னருகே இழுத்து அணைத்திடவே
கனிவுறு குழலில் உந்தன் பெயரைக் கனிந்து பாடுகிறான்.
மெல்லிய உந்தன் மேனியிற்பட்ட பூவின் தாதுகளே
மேடைக் காற்றில் மிதந்து வருங்கால்
மெத்த மகிழ்கின்றான்.
தென்றல் வீசிடு யமுனைக் கரையின் திரண்ட
வனந்தன்னில்
காட்டு மலரின் மாலை சூட்டிடக் கண்ணன் காத்துள்ளான்.

பச்சை இலைகள் அசைந்தாலும், பறவைத்தூவிகள்
வீழ்ந்தாலும்
நீயே வருகிறாய் என்றே எண்ணி நித்தம் மகிழ்கின்றான்.
காதல் பொலிவொடு பாயல்தன்னைக் கனிவுடன்
அமைக்கின்றான்.
பற்றிய கவலையொடு உந்தன் வரவைப் பார்த்தே
ஏங்குகிறான்.
தென்றல் வீசும் யமுனைக் கரையின் திரண்ட
வனந்தன்னில்
காட்டு மலரின் மாலைசூட்டிடக் கண்ணன் காத்துளான்.

காதல் ரகசியம் காட்டிக் கொடுத்துக் கலகலவென்கின்ற
ஒலியை எழுப்பும் காலின் சிலம்பை ஒதுக்கி வைத்திடுக.
செழித்து மண்டிய புதரை நோக்கிச் செல்லுக தோழி நீ!
இரவில் கரந்து நீயுமாங்கே எளிதாய்ச் சென்றிடலாம்!

தென்றல் வீசும் யமுனைக் கரையின்
திரண்டவனந்தன்னில்
காட்டு மலரின் மாலைசூட்டிடக் கண்ணன் காத்துளான்.

செக்கர் மேகம் தன்னில் பறக்கும் கொக்கின் வரிசைபோல்
கண்ணன் மார்பில் நீயே போட்ட மாலை மிளிருது!
மின்னலாய் மேவிக் கலவியில் அவனைக்
கட்டுப்படுத்திடுவாய்!
தென்றல் வீசும் யமுனைக் கரையின் திரண்ட
வனந்தன்னில்
காட்டு மலரின் மாலைசூட்டிடக் கண்ணன் காத்துளான்.

இறுக்கம் தளர்த்தி இடையின் துகிலை எளிதாய் நீக்கிடுக!
மென்துகில் தொங்குமுன் மெல்லிடையவனது மேவிய
சொர்க்கமாகும்.
மலர்ப்படுக்கையில் நீதருசுகமே நிலைத்த பரிசாகும்.
தென்றல் வீசும் யமுனைக் கரையின் திரண்ட
வனந்தன்னில்
காட்டு மலரின் மாலை சூட்டிடக் கண்ணன் காத்துளான்.

கனிவுறு காதல் அரியின் விருப்பை மகிழ்ந்தே ஏற்றிடுக!
கூறிய சொல்லும் பழுதுபடாமல் குலவி மகிழ்ந்திடுக.
பொழுது புலருமுன் அவனைச்சேர்ந்து ஏக்கம் தவிர்த்திடுக.
தென்றல் வீசும் யமுனைக் கரையின் திரண்ட
வனந்தன்னில்
காட்டு மலரின் மாலைசூட்டிடக் கண்ணன் காத்துளான்.

ஜெயதேவ கீதம் கண்ணன் புகழை மயக்குறுத்துங்கால்
நண்ணுக நீயும் உனது காதலை நயப்போன் மீதேதான்.
ஏந்திழை உன்பால் இன்றே என்றும் இதயம் களிக்கின்றாள்.

தென்றல் வீசும் யமுனைக் கரையில் திரண்ட
வனந்தன்னில்
காட்டு மலரின் மாலை சூட்டிடக் கண்ணன் காத்துள்ளான்.

ஏக்கப்பெருமூச்சில் இதயத்தைக் கொட்டுகின்றான்
எத்திசையும் உனைத்தேடி ஏங்கித் தவிக்கின்றான்.
வாய்விட்டு வருத்தமுறச் செடிகொடியில் தேடுகின்றான்.
காதற் படுக்கையினைக் கண்டு கண்டு ஏங்குகிறான்.
வெற்றுக் குழப்பத்தால் வெறித்தெங்கோ நோக்குகின்றான்.
ஆரணங்கே ராதாவே! ஆராத காதலினால்
மனம் நொந்து வாடுகின்றான் மங்கை நீ பாராயோ!

சுடுகதிர்ச்சூரியன் மறைந்திடு வேளை
உந்தன் கோபம் குறைந்து தணிந்திடுக!
கவன்றிடும் கண்ணனின் காதல் வெறியோ
இரவினைக் கண்டதும் எரியுது கொழுந்தாய்!
தனிமைக் குயில்களின் தாபக் குரல்களோ
எந்தன் உளத்தை எதிரொலி செய்யும்!
''தாமதம் பயனிலை, அறிவிலிப் பெண்ணே-
காதலர் கூடும் காலம் இதுவே''!

கள்வெறி கொள்ளும் காதல் மயக்கில்
இரவிலே கூடும் இருபெரும் காதலர்
அருகிலே இணைத்து முத்தமும் ஈந்து
நகக்குறி படர நவ்வியாய்ப் புரள்வர்.
இருவராய் அவர்கள் இரவில் மகிழ்ந்ததை
அறிந்திடும் சிலரதை அலராய்ப் பரப்பலும்
இருவர்தம் உணர்வும் வெட்கிச்சிவந்து
உண்மையாம் அதனை உறுதி செய்தது.

மருண்ட உன் பார்வையை
இருண்டிடும் தனி வழியில்
ஏக்கமுடன் காண்பதையும்
போதாகிய காதல் பொங்கிடும் வேளையில்
மெல்லவே நீ நடந்து
மரங்கள்தொறும் நின்று
மறைமுகமாய்ப் பார்ப்பதையும்
கண்ணனே காணுகின்றான்!
ராதா! உன் வருகையினை
நலமுறப் போற்றிடுவான்.

ஆறாம் பாகம்

அயர்ந்த கண்ணன்

உணர்வுகள் மீதூர இயங்கவும் உளமின்றி
கொடிவளர் சோலையில் ஒதுங்கிய ராதை நிலை
துணையிலாக் காதலால் துவண்டிடும் கண்ணன்முன்
அவளது தோழியே அறைவது கேண்மின்!

தனிமையில் அவளுனை யாங்கணும் காணுகிறாள்!
பிற தையலார் உதட்டில் தேன்சுவை மாந்தும்
உனைஎங்கும் காணுவள் ஒதுங்கிநின்று ஏங்குவாள்!
தனிமையில் அலமரும் தையலாம் ராதையவள்!.

உனைக் காணும் ஆவலொடு விரைகின்ற ராதை
தானாக ஓடிவரும் தணியாத வேகமொடு
தடுக்கியும் விரைந்தும் தானாக வீழ்வாள்.
தனிமையில் அலமரும் தையலாம் ராதையவள்!

உந்தனது காதல் உறுதியின் சின்னமாய்க்
குழைந்திடும் தாமரைத் தண்டுகள் கொண்டு
கைக்கடகம் செய்துமவள் கருத்தொன்றி வாழ்ந்திடுவாள்.
தனிமையில் அலமரும் தையலாம் ராதையவள்!

பூண் தொடி போலும் புனைவன பார்த்து
தன்னுளே கற்பனைத் தானே புகன்றிடுவாள்!
நானே கண்ணன்-மதுவின் நமனே!
தனிமையில் அலமரும் தையலாம் ராதையவள்!

எனைப் பேணிக் காக்கும் நலமுறு நம்பியாம்
கண்ணன் ஏன் இன்னும் கனிந்து வரவில்லை!
என்றுமே தோழியை இடைவிடாது கேட்பள்!
தனிமையில் அலமரும் தையலாம் ராதையவள்.

கார்மேனி தன்னையிரு கரத்தினால் அணைத்திடுவள்
மேகத்திரள் மேனியினை மீதூர முத்திடுவள்.
கண்ணன் இதோ வந்துளான் என்று களிகூர்ந்து
தனிமையில் அலமரும் தையலாம் ராதையவள்!

காதலிக்கக் கன்னியவள் காத்திருக்கும் போது
கண்ணீரைச் சிந்திநிதம் கலங்கியே நின்றிடுவாள்.
அயர்ந்திடும் நீ இங்கே! அடக்கம் துறந்திட்ட அவளோ
தனிமையில் அலமரும் தையலாம் ராதையவள்!

ஜயதேவன் இசைக்கின்ற காதல் கீதம்
ஊரகத்தே உறைந்திடு உணர்வுடையார்மீது
களிப்பையும் நிறைவையும் கனிவுறத் தந்திடும்.
கண்ணா உன் நினைவால் கன்னியவள் அலமருவாள்!

மீதூர்ந்த ஆர்வமோ மேனி சிலிர்க்க வைக்கும்
குளறிவரு சொற்களைப் பெருமூச்சு உள்ளிழுக்கும்;
அளவிறந்த அச்சமோ குரலை நடுக்கிடும்;
பித்தமாய்க் காதலே பெரும்பேயாய்ப் பிடித்தாட்ட
ஆராத காதல் நினைந்தாரத்தழுவி உந்தன்
சிற்றின்பச் சிந்தனையில் மூழ்குவாள் இராதை!

இலையும் இறகும் வீழ்கின்றபோது
அணிமணி தன்னை மேனியில் புனைந்து
வந்திடுவாய் என்றெண்ணி வருகையினைப் பார்த்து
துயரமே உருவாய்ச் சோர்ந்துபோய் அமர்ந்துளாள்!
சீரிய சிந்தனை நாடகம் தன்னில்
உந்தன் உருவம் பற்பல எண்ணி
அழகுறு மஞ்சம் அணிபெற வைத்துளாள்.
நீ இல்லையாயின் இன்றிரவில்
நலிந்த இந்நங்கை வாழ்வது அரிது!

ஏழாம் பாகம்

மாயக்கண்ணன்

சபலமுறு நங்கையர் சார்ந்து செல் பாதையை
பளிச்சென வெளிப்படுத்தும் பால்நிலாக் கிரணங்கள்
பிருந்தாவனக் காடெங்கும் பிறங்கொளி பரப்பிடும்.
குணதிசை புறப்படும் கோள் உரு வெண்ணிலா
விண் மங்கை நெற்றியில் சந்தனத் திலகமாம்.

விண்மீது வெண்ணிலா விரைகின்ற போதினில்
செயலற்று மாதவன் சிந்தை நோகின்றான்.
இனைவுற்று விம்மிடும் ராதையின் அழகோ
தனிமையில் அவள்படும் தாபத்தைக் காட்டிடும்.

வாக்குறுதி தானளித்து வாவென்று சொன்ன கண்ணன்
காடுவிட்டுத் தான் அகன்று கட்டளையை மீறிவிட்டான்!
என்னருமைத் தோழி என்னை ஏமாற்றி விட்டமையான்,
எவரைநான் நம்பியினி அவரையே தஞ்சமென்பேன்?

கண்ணனைப் பின்தொடர்ந்து கானகத்தின் உட்சென்றேன்.
காதற்கணை தொடுத்து என் இதயம் பிளந்துவிட்டான்
என்னருமைத் தோழி என்னை ஏமாற்றி விட்டமையான்,
எவரை நான் நம்பியினி அவரையே தஞ்சமென்பேன்?

வெற்றுடம்பால் வாழ்வதினும்வீழ்ந்துபடல் நன்றாகும்
தகிக்கும் நெருப்பாய்த் தனிமை எனைக் கொல்லுவதேன்?
என்னருமைத் தோழி என்னை ஏமாற்றிவிட்டமையான்,
எவரை நான் நம்பியினி அவரையே தஞ்சமென்பேன்?

வசந்தத்தின் பிரிவுகளோ என்பிரிவைக் கொடுமைசெய
யாரோ ஒரு மடந்தைக் கண்ணனிடம் களிப்புறுவாள்;
என்னருமைத் தோழி என்னை ஏமாற்றி விட்டமையான்
எவரை நான் நம்பியினி அவரையே தஞ்சமென்பேன்?

கண்ணனின் பிரிவினால் கனன்றெரியும் தீப்பிழம்பும்
பொன்கலனும் நல்வளையும் போந்து எனைத்
துன்புறுத்தும்
என்னருமைத் தோழி என்னை ஏமாற்றி விட்டமையான்
எவரை நான் நம்பியினி அவரையே தஞ்சமென்பேன்?

மான்மதச் சாந்தனைய மாறவேள் கணையுமொப்ப
மேனியிற்படு கான்மலர்மாலை மெல்லிதயம்
தாங்கொணாது!
என்னருமைத் தோழி என்னை ஏமாற்றி விட்டமையான்
எவரை நான் நம்பியினி அவரையே தஞ்சமென்பேன்?

மண்டிய கான்புதர் மறைவில் யானும் மயக்கொடு
காத்திருப்பேன்
மதுவைத்தடிந்தவன் மனதினில் என்னை மறுவறக்
கருதிலனே!
என்னருமைத் தோழி என்னை ஏமாற்றி விட்டமையான்
எவரை நான் நம்பியினி அவரையே தஞ்சமென்பேன்?

நண்ணிய தேவன் பண்புறுகீதம் கண்ணன்
அடியிணைக்கே!

எண்ணியே இதனை மனதில் இறுத்துக ஏந்திழை
காதலைப்போல்!
என்னருமைத் தோழி என்னை ஏமாற்றி விட்டமையான்
எவரை நான் நம்பியினி அவரையே தஞ்சமென்பேன்?

விழைகின்ற மங்கையினை வழி மறித்தானோ?
மாயமெனும் சூதில் தோழர் சிக்க வைத்தாரோ?
அடவியோரம் புதரின்பக்கம் அருகில் வருகவெனச்
சொன்னவார்த்தை அவன் மறந்து ஆங்குமீங்குமே
கவலைதோய் மனத்துடனே வழிதடுமாறி
இடம் மறந்து எனை மறந்து அலைந்துதிரிவனோ?

மாதவனைக் கொணராமல் தோழி தனிவழியே
நாவுலர்ந்து மனமயங்கி தலைகவிழ்ந்துமே
வருவதனைக் கண்டுமுகம் வாடியபெண் ராதை
''யாரே ஒருத்திவந்து கண்ணனையே கவர்ந்திட்டாள்''
என்னுமிந்த ஐயத்தைத் தன்னுளே சுமந்துமே
கனத்தவோர் இதயத்தைக் காட்டினாள் தோழியிடம்!

பகட்டுடை அணியொடு பாவையவள் இன்று
காதல்செய் போரினைக் கடிதே நடத்தினாள்.
வாடிச் சிதைந்திட்ட வண்ணமலர்ப் பூக்களெலாம்
கலைந்திட்ட கூந்தலில் அலைப்புண்டு கிடந்தன.
இன்பவெறி ஊட்டவல்ல யாரோ இளநங்கை
மாதுவின் எதிரியை மயக்கிக் களித்திட்டாள்.

கண்ணன் அணைத்திடும் கன்னியவள் இன்று
உணர்ச்சியால் மீதூர்ந்து உவகையில் திளைக்கிறாள்;
திரட்சியொடு திண்மையதாம் அவள் கொங்கை மீதே
கண்டசரம் மேல்விழுந்து கலங்கித் தவிக்கிறது.

இன்பவெறி ஊட்டவல்ல யாரோ இளநங்கை
மாதுவின் எதிரியை மயக்கிக் களித்திட்டாள்.

சுருண்ட கரும் நெடுங்குஞ்சி சுழன்று நெளிந்தின்று
ஒளிசிந்தும் நிலா முகத்தைத் தைவந்து மகிழ்கிறது!
இனிய அவன் உதட்டின் இன்னமுதைப் பருகி
எழில் மங்கை சோர்ந்தாலும் இதயம் களிக்கின்றாள்.
இன்பவெறி ஊட்டவல்ல யாரோ இளநங்கை
மாதுவின் எதிரியை மயக்கிக் களித்திட்டாள்.

அதிர்ந்து துடிக்கின்ற அவளிரு குண்டலங்கள்
கன்னக் கதுப்புகளில் உருண்டோடி மீண்டு வரும்.
அவள் இடை நெளிந்துமிக அவசத்தைப் பெற்றிடுங்கால்
துடியிடையில் மேகலையும் மெல்லொலி எழுப்பும்.
இன்பவெறி ஊட்டவல்ல யாரோ இளநங்கை
மாதுவின் எதிரியை மயக்கிக் களித்திட்டாள்.

காதலன் அவளைக் கனிவுடன் காணுங்கால்
நாணம் நெளிந்திட நங்கை நகைக்கின்றாள்.
ஒரேவழி வெளிப்படும் உதட்டின் மெல்லொலி
உணர்ந்திடும் அவள்சுவை ஒருங்கே காட்டிடும்.
இன்பவெறி ஊட்டவல்ல யாரோ இளநங்கை
மாதுவின் எதிரியை மயக்கிக் களித்திட்டாள்.

உள்ளம் கிளர்ந்தெழ மேனி குலுங்கிட
உடம்பு நெளிந்திட உவகையாய்ப் பெறுகிறான்.
வெளிப்படும் அவளுடை ஒவ்வொரு உயிர்ப்பிலும்
வேள்மதன் அலகையாய் விரிந்து மறைகிறான்.
இன்பவெறி ஊட்டவல்ல யாரோ இளநங்கை
மாதுவின் எதிரியை மயக்கிக் களித்திட்டாள்.

கூடிடும் போதில் இவள் வனப்புடை மேனியில்
குறுவியர் பொடித்துக் கொட்டிடும் ஆங்கே!
களிமயக்கப் போரில் அவன் மார்பின்மீது
வலுவிழந்த மெல்லுடம்பாள் வளைந்து கிடக்கின்றாள்.
இன்பவெறி ஊட்டவல்ல யாரோ இளநங்கை
மாதுவின் எதிரியை மயக்கிக் களித்திட்டாள்.

ஜெயதேவன் கவிதையில் கண்ணன் மகிழ்ந்து
கால இருள் தன்னைக் கரைந்திடச் செய்யட்டும்.
இன்பவெறி ஊட்டவல்ல யாரோ இளநங்கை
மாதுவின் எதிரியை மயக்கிக் களித்திட்டாள்.

மூராவைத் தடிந்தவனின் முகத்தாமரை ஒப்ப
தனித்திருக்கும் வான்மதியும் ஏக்கத்தால் தேய்கிறது!
என்நிலையும் அதுவென்றே இதயம் பொறுக்கின்றேன்;
ஆயினும் பிரேமையின் அன்புறு நண்பனாம்
அழகிய மதியோவென் இதயத்தைக் கொன்றிடுது.

நங்கையின் உணர்ச்சியை நகைமுகம் காட்டிடும்
இழுத்து முத்தம் ஈந்திடவே இணைஉதடு துடிக்கிறது.
மான்மதச் சாந்து கொண்டே மாதவன் எழுதுகின்றான்.
மானினது உருவத்தைச் சந்திரன் மீமிசை
யமுனைக்கு அப்புறமாய் இருண்ட வனந்தன்னிலே
மூராவைத் தடிந்தவனோ வெற்றியுடன் காதல்செய்வான்.

மென்முகத்தின் மீதுளது கார்மேகக் கூந்தல்
சுருள்கருங் குஞ்சியில் சூடுவன் மலர்க்கொத்தை!
மதன்ஆட்சி புரிகின்ற மறுவறும் கானகத்தில்
மின்கீற்று மின்னலொளித் தோன்றி மறைகிறது.
யமுனைக்கு அப்புறமாய்இருண்ட வனந்தன்னிலே
மூராவைத் தடிந்தவனோ வெற்றியுடன் காதல்கொள்வான்.

துள்ளியோடும் மானின் கத்தூரி மணக்கிறது!
வீங்கியெழும் கொங்கைமேல் விரைந்து அதனைப்
பூசுகிறான்.
கூரிய நகத்தினால் அதன்மீது கோடுகளை வரைகின்றான்.
முத்துநகை எடுத்து முகபடாமாய்ப் போடுகிறான்.
யமுனைக்கு அப்புறமாய் இருண்ட வனந்தனிலே
மூராவைத் தடிந்தவனோ வெற்றியுடன் காதல் கொள்வான்.

தாமரை இதழ் அனைய தளிர்க்கரங்கள் அவளதுவே!
கருநீல வளையல்தமை அவற்றுக்கு அணிகின்றான்.
தண்டெனவே வளர்ந்திருக்கும் தளிர்க்கரங்களைச் சுற்றி
முரலுகின்ற வண்டினத்தின் மூவேறு வண்ணமென!
யமுனைக்கு அப்புறமாய் இருண்ட வனந்தனிலே
மூராவைத் தடிந்தவனோ வெற்றியுடன் காதல்கொள்வான்.

பாவையவள் பெற்றிருக்கும் பரந்தகன்ற தொடைகள்
வேள்தங்கிக் கொலுவிருக்கப் பொன்இலங்கு ஆதனமாம்.
அதனைக் கைகொண்ட ஆளுகையின் சின்னமென
தன் கரத்தால் அணிவித்தான் தரமான மேகலையை!
யமுனைக்கு அப்புறமாய் இருண்ட வனந்தனிலே
மூராவைத் தடிந்தவனோ வெற்றியுடன் காதல்கொள்வான்.

அலைமகளைத் தன்னுடனே அணைத்திருப்பான் போல
இதயத்தில் ஏற்றிருக்கும் எழில்மங்கை பாதத்தில்
செம்பஞ்சுக் குழம்பு தன்னைச் சீர்பெறவே பூசுகின்றான்.
இளந்தண்டில் முத்தெனவே இலங்கிவரும் அழகதுவே!
யமுனைக்கு அப்புறமாய் இருண்ட வனந்தனிலே
மூராவைத் தடிந்தவனோ வெற்றியுடன் காதல்கொள்வான்.
பலராமனின் மூத்தோன் சபலத்துக்கு ஆட்பட்டு
யாரோ ஓர் அழகிதன் இதயம் மகிழ்விப்பான்;

கூர்வருத்தம் குடிகொண்டிவ் வெற்றிடத்தே யானும்
விதந்தும் மருகியும் விளைவதென்ன தோழி!
யமுனைக்கு அப்புறமாய் இருண்ட வனந்தனிலே
மூராவைத் தடிந்தவனோ வெற்றியுடன் காதல்கொள்வான்.

மாதவன் பெருமையை மறைக்காது கவிவெறியில்
கவிகுலக்கோ ஜயதேவன் களிப்புற இயம்புகின்றேன்;
மதுவைத் தடிந்தோனின் மலரடியின் கீழே
கருநிறக் கலியினது காரிருள் மறைகிறது.
யமுனைக்கு அப்புறமாய் இருண்ட வனந்தனிலே
மூராவைத் தடிந்தவனோ வெற்றியுடன் காதல்கொள்வான்.

இரக்கமிலாக் கொடுமையன் இனியீங்கு வாரானோ!
நீ வருந்தி ஆவதென்ன என்னருமைத் தோழி!
பல்பெண்டிர் தாம்விழையும் பண்புடையான் அவனே!
பலபடவே நீ வருந்திப் பயனென்ன தோழி!
இருப்பினும் அவனன்பு என்னையும் ஈர்க்கிறது!
எதிர்நோக்கி ஏங்குகின்ற இன்னலைத் தவிர்க்கிறது.

'இரவிலே மலரும் நீல்வண்ண அல்லிபோல்
கண்களைச் சிமிட்டிக் கவர்ந்திடுவான் கண்ணன்.
பசிய அல்லித்தண்டுகளின் பாயலொன்றும் அவனை
பைந்நெருப்பாய் ஈங்குவந்து தண்டிப்பதில்லை.
காட்டுப்பூ மாலைதன்னைச் சூடிவரும்கண்ணன்
புறம் நீவிப் போந்திடுவான் என்னருமைத் தோழி!

அலர்ந்த ஓர் தாமரையாய் அவன் திருவாய் அசையும்!
காதலின் அம்புகள் கன்னியைத் துளைக்காது!
காட்டுப்பூ மாலை தன்னைச் சூடி வரும் கண்ணன்
புறம் நீவிப் போந்திடுவான் என்னருமைத் தோழி!

அவனது பாதமும் அருள்நிறை கரங்களும்
தோட்டத்துச் செடி மலரின் தூய ஒளிகாலும்!
அழகு நிகர் முழுநிலவின் தண்ணொளியே கூட
ஆரணங்கை நடுங்கவைத்து வேடிக்கை பார்ப்பதில்லை.
காட்டுப்பூ மாலைதன்னைச் சூடிவரும் கண்ணன்
புறம் நீவிப் போந்திடுவான் என்னருமைத் தோழி!

இடிக்கின்ற மழைபொழியும் இருள்மேகந் தனையொப்ப
கார்நிறத்து வண்ணனின் கடுங்கோபம் அதிகரிக்கும்;
பூங்கொடி அணையாளைப் புறக்கணித்துப் போனாலும்
அவள் இதயம் துணுக்குற்று அலமருவதில்லை.
காட்டுப்பூ மாலைதன்னைச் சூடிவரும் கண்ணன்
புறம்நீவிப் போந்திடுவான்என்னருமைத் தோழி!

அனைத்துயிரை அணைத்திடும் அவன்தன் இளமை!
இரங்கலோ தொல்லையோ அவள் அடைவதில்லை!
காட்டுப்பூ மாலை தன்னை சூடிவரும் கண்ணன்
புறம் நீவிப் போந்திடுவான் என்னருமைத் தோழி!

ஜெயதேவன் இசைத்திடும் செஞ்சொல்லின் வழியே
அன்புறும் உன்இதயம் அவனதே ஆகட்டும்.
காட்டுப்பூ மாலை தன்னை சூடிவரும் கண்ணன்
புறம் நீவிப் போந்திடுவான் என்னருமைத் தோழி!

தூயஒளி காலுமவன் தோய்கின்ற துகிலோ
கருநிறத்துப் பின்னணியில் ஒளிர்கின்ற பொன்னாம்!
பணிப்பெண்கள் கூற்றான பராமுகப் பேச்சுகளோ
ஏந்திழையாள் தனக்கேதும் ஏக்கத்தைத் தருவதில்லை.
காட்டுப் பூமாலை தன்னைச் சூடிவரும் கண்ணன்
புறம் நீவிப் போந்திடுவான் என்னருமைத் தோழி!

சந்தனக் காட்டிடைச் சார்ந்துவரும் காற்றே!
தேன்போலும் காதலைத் தென்றலாய் நீ வீசி
சிக்கலை நீக்கிவிட்டுச் சிந்தையைக் குளிப்பாட்டு!
ஈருலகின் முழுமூச்சாய் இயங்கிவரும் காற்றே!
கண்ணனை ஒருகணம் காட்டிவிட்டால் பின்னர் எந்தன்
உயிரையே ஈந்துவிட ஒப்புதலைத் தருகின்றேன்!

விண்தங்கிப் பொழிகின்ற தண்ணிலவும் நஞ்சாம்
எங்கணும் வீசிடும் தண்காற்றும் எரிதழலே!
பொற்புடைய நட்பாரும் பொல்லாங்கு புரிந்திடுவர்!
கண்ணனும் எந்தனைக் கவலையுறச் செய்கின்றான்.
ஆயினும் கடுமையாய் அவனிருக்கும் போதிலும்
அவனையே ஏற்றிட என்மனம் அவாவுது!
அல்லி மலரனைய கண்களுடைக் கன்னியரும்
மாளாத பாசமதில் மாட்டித் தவிக்கின்றார்.

எழில் சாந்தக் காற்றே! என்னைப் பணி கொண்டிடுவாய்!
உன்கணையால் மாறவேள்! என் உயிரைப் பறித்திடுக!
என் இல்லைப் புகலிடமாய் இனி எங்கு கொள்ளேன்.
எமனுக்கு இளையாய்! யமுனையெனும் பேராய்!
என்பாலே நீ எதற்கு ஈவிரக்கம் காட்டுகின்றாய்?
அலைமோதும் உன்னிடத்தே அடைக்கலம் தந்திடுக!
எரிகின்ற என்னுடலின் வெந்தழலைத் தணித்திடுக.

எட்டாம் பாகம்

வெட்கமுறும் கண்ணன்

மதன் கணையால் மறுகி நின்ற மங்கையிவளோ
இரவெலாம் தனிமை தந்த இன்னலுக்குப் பின்னர்
மங்கை முன் தலைகவிழ்ந்து மன்னிப்புக் கேட்டானை
வருத்தம் மீதூரப் பழிகூறி ஒதுக்கி நின்றாள்.

இரவெல்லாம் உறக்கமின்றி நீ போட்ட களியாட்டம்
சிவந்தவிழி காட்டிடநீ சோர்ந்துபோய் நிற்கின்றாய்!
மறுபடியும் விழிப்படைந்த மாறாத காதலினை
உந்தன் இருவிழிகள் ஓரத்தில் காட்டி நிற்கும்.
மாதவா! கேசவா! பொய்தவிர்த்துப் புறம் செல்க!
கவலையைப் போக்கிடுமக் கன்னியின் பின் செல்க!

அவளது கண்களின் அஞ்சனக் கறுப்பு
நீயிட்ட முத்தத்தால் நீளுதட்டில் நெளிகிறது!
உதயத்தில் காணுங்கால் கண்ணா உன் உதடுகளோ
உன் உடம்பின் வண்ணத்தை ஊரறியக் காட்டிவிடும்!
மாதவா! கேசவா! பொய்தவிர்த்துப்புறம் செல்க!

நேற்றிரவே நிகழ்ந்திட்ட கலவிப்போர் தன்னிலே
ஆழப் பதித்திட்ட அவள்தன் நகக்குறியோ

நீலமணி இதழில் பொன்னெழுத்தை ஒப்ப
நீ பெற்ற வெற்றியினை நின்றுடலில் பறைசாற்றும்.
மாதவா, கேசவா! பொய்தவிர்த்துப் புறம் செல்க!
கவலையைப் போக்கிடுமக் கன்னியின் பின் செல்க!

சேவடித் தாமரையின் செம்பஞ்சுக் குழம்போ
பரந்த உன்மார்பெங்கும் பரவிக்கிடப்பது!
மேனியில் முளைத்திட்ட மீதுயர் காதல் மரம்
இலையாய் பூவாய் எங்கணும் படர்ந்துள்ளது.
மாதவா! கேசவா! பொய்தவிர்த்துப் புறம் செல்க!
கவலையைப் போக்கிடுமக் கன்னியின் பின் செல்க!

கன்னியவள் பற்குறியை உன் அதரம் காட்டும்!
என்னிதயம் தன்னிலது இருஞ்சுமையாய்க் கனக்கும்!
உன்னுடலே என்னுடலாய் உன்னுகிற பாங்கு
ஏன் இருந்து இங்கென்னை இழைக்கிறதோ தொல்லை!
மாதவா! கேசவா! பொய் தவிர்த்துப் புறம் செல்க!
கவலையைப் போக்கிடுமக் கன்னியின் பின் செல்க!

கருநிறத்துக் கண்ணா உன் மேனிக் கறுப்பைவிட
இதயக் கறுப்பன்றோ என்னை மிக வாட்டுவது!
காதல் விரகத்தால் கைம்மிகு நற் கன்னியை நீ
போதெல்லாம் ஏமாற்றிப் புலம்ப விடுவாயோ!
மாதவா! கேசவா! பொய் தவிர்த்துப் புறம் செல்க!
கவலையைப் போக்கிடுமக் கன்னியின் பின் செல்க!

இருங்கானில் திரிந்து நீ இளகுமனக் கன்னியரைக்
காதலால் கொன்றிடிலோ நான்கவலை ஏன்படணும்?
பூதனையைக் கொன்று அன்று சாதனை புரிந்த நீ
மகளிரைக் கொல்லுகின்ற மார்க்கத்தை விட்டிலையோ!
மாதவா! கேசவா! பொய் தவிர்த்துப் புறம் செல்க!
கவலையைப் போக்கிடுமக் கன்னியின் பின் செல்க!

உணர்ச்சி வயத்தாலே உன்மத்தமாகி விட்ட
இளமங்கை இன்னலதைச் செயதேவன் பாடுகின்றேன்!
விண்ணும் விழைந்திடும் அமிர்தநற் பாடலை
வியன்பெரு ஞானியர் விரும்பியே கேண்மின்!

செம்பஞ்சு மலரடியில்
தெரிகின்ற சிவப்பு
உண்ணின்று எரிகின்ற
தாபத்தின் வெளிப்பாடோ!
என் இதயம் தன்னிலுறை
ஏகாந்தக் கள்வா! நின் தோற்றம்
காதலை உடைத்துக் கலக்குறு செயலோ
வேதனையைக் காட்டிலும் வெட்கத்தை விளைக்கிறது.

ஒன்பதாம் பாகம்

தளர்ந்திடும் கண்ணன்

மீதூறும் உணர்ச்சியால் உடைபட்டு நின்ற
காதலின் அலைக்கழிப்பைக் கன்னியவள் தாணுணர்ந்தாள்.
ஆத்திரப் பேச்சுக்கு அரிகரன் சொன்னபதில்
இதயத்தில் தேங்கி நின்று ஏக்கத்தைக் கிளறிவிடத்
துன்புறுவாள் முன் சென்று தோழியவள் பேசுகின்றாள்.

தேன்மணம் சுமந்து திரிதரும்வசந்தம்
காற்றாக வரும்போது கண்ணனும் வருகின்றான்!
இவ்வுலகில் என்னைவிட என்னருந்தோழியே!
இனிமையும் மகிழ்வும் எங்குளது சொல்வாய்?
நொந்தவுன் உள்ளத்தைக் கண்ணனிடம் காட்டாதே!
சினமுடைய ராதாவே! செருக்குடையான் அவனும்!

மதர்த்துத் திரண்டவுன் மார்பகங்கள்
தெங்கினும் சுவைப்பதாம் மங்கை நல்லாய்!
அச்சுவை மணத்தினை அழித்திடல் பொருத்தமோ!
நொந்தவுன் உள்ளத்தைக் கண்ணனிடம் காட்டாதே!
சினமுடைய ராதாவே! செருக்குடையான் அவனும்!

கவிதையின் இறுதியெனக் கரமிரண்டும் கூப்பிச்
சொன்னதையே எத்துணைச் சொல்லுவேன் தோழி!
கண்ணனின் அன்பினைக் கண்டனம் செய்திடேல்!
நொந்தவுன் உள்ளத்தைக் கண்ணனிடம் காட்டாதே!
சினமுடைய ராதாவே! செருக்குடையான் அவனும்!

துக்கம் சுமந்திடத் துயரம் மிகுந்திட நீ
கண்ணீர்விட் டேனழுதாய் கன்னிப்பெண்ணே!
தோழியர் நகைத்திடத் துன்புற்று நிற்காதே.
நொந்தவுன் உள்ளத்தைக் கண்ணனிடம் காட்டாதே!
சினமுடைய ராதாவே! செருக்குடையான் அவனும்!

ஈரம் சுமந்த தாமரை மலர்களே
எழிலார் கண்ணனின் இனியதன் படுக்கையாம்!
பயனுறக் கண்களால் பார்த்துமகிழ் தோழி!
நொந்தவுன் உள்ளத்தைக் கண்ணனிடம் காட்டாதே!
சினமுடைய ராதாவே! செருக்குடையான் அவனும்!

ஏக்கம்தனை முழுதும் இதயத்தில் தாங்கிநீ
அவன்பெயரை உச்சரித்து அலமருவது ஏனோ!
உன்னைப் புறக்கணித்து அவன்படும் தொல்லைகேள்!
நொந்தவுன் உள்ளத்தைக் கண்ணனிடம் காட்டாதே!
சினமுடைய ராதாவே! செருக்குடையான் அவனும்!

அரியே உன்முன்னர் ஆவலுடன் வந்திடட்டும்!
முன்வந்து நின்று சுவை இன்மொழி கூறிடட்டும்!
தனிமையில் நீ கிடந்து தவித்துள்ளம் புலம்புவதேன்!
நொந்தவுன் உள்ளத்தைக் கண்ணனிடம் காட்டாதே!
சினமுடைய ராதாவே! செருக்குடையான் அவனும்!

இனிய இசைப்பாடல் ஜெயதேவன் பாடுவது!
அரிகரன் கதைதன்னை ஆர்வமுடன் கேட்போரை

மனதுக்கு மகிழ்வூட்டி அவ்விசை களிப்பிக்கும்.
நொந்தவுன் உள்ளத்தைக் கண்ணனிடம் காட்டாதே!
சினமுடைய ராதாவே! செருக்குடையான் அவனும்!

இனிமையாய் அவனிருப்பின் கொடுமையள் நீயே!
இணக்கமாய் அவனென்றால் கடுமையள் நீயே!
அன்புருவாய் அவனென்றால் வெறுப்பவள் நீயே!
எதிர்நோக்கி அவனிருந்தால், ஏகிடுவாய் நீயே!
நேசிப்பது அவனென்றால், போய்விடுவாய் நீயே!
நறுமணச்சாந்தினை நஞ்சே போலவும்
குளிர்நிலாக் கிரணத்தைக் கொடுநெருப்பாகவும்
தண்ணீர்க் கட்டியைத் தணலே போலவும்
களிப்புறு மகிழ்வை நரகமே போன்றும்
பிறழ்ந்தும் முரணியும் பிழைபட நோக்குவாய்!

பத்தாம் பாகம்

தழுவக் குழையும் நான்கு கரங்கள்

கோபத்தின் கடுமையெலாம் குறைந்திடக் கண்டு
இரவு வரு முன்னர் அவன் இராதாவை நெருங்கினான்.
முடிவிலாது உயிர்த்திடும் முகத்தளர்ச்சி கண்டான்.
முன்னிரவில் அவனை யவள் நாணமுடன் நோக்கினாள்.
காதல் மொழி தன்னைக் கண்ணனும் குளறினான்.

முழுமதியே எதிரொளிக்கும் முத்தன்ன உன் பற்கள்
அச்சமெனும் இருளை சிதைத்துக் கலைக்கிறது!
சகோரப் புள்ளொத்த சால்புடையெம் கண்களை
உந்தன் மதிமுகம் தன்பாலே ஈர்க்கிறது!
துடிக்கும் அதரத்தில் அமுதச்சுவை பருக!
காதலே! ராதாவே! வீண் கர்வம் விட்டொழிக!
உன்னருங்காதல் என் உள்ளத்தைச் சுடுகிறது!
மரைமலர் வாயமுதின் மதுரசம் கொணர்க!

சீர்மிகு ராதையே! சினம் என்மேல் கொண்டாலோ
உந்தன் நகங்களால் ஊறுதனைச் செய்திடுக!

கரங்களால் பிணித்தென்னை எயிற்றினால் கவ்விடுக!
எல்லையற்ற களிப்பு தர எதனையும் செய்திடுக!
காதலே! ராதாவே! வீண் கர்வம் விட்டொழிக!
உன்னருங்காதல் என் உள்ளத்தைச் சுடுகிறது!
மரைமலர் வாயமுதின் மதுரசம் கொணர்க!

அன்பே உயிரே நீயெந்தன் அணிமணியே!
வாழ்க்கைக் கடலின் ஒளிவிடும் உயர்முத்தே!
எந்நாளும் இணங்கி நீ என்னோடு இருந்திடவே
என் உள்ளம் உன்னை இறைஞ்சியே வேண்டுது!
காதலே! ராதாவே! வீண் கர்வம் விட்டொழிக!
உன்னருங்காதல் என் உள்ளத்தைச் சுடுகிறது!
மரைமலர் வாயமுதின் மதுரசம் கொணர்க!

கருநீல மலரொத்த கண்சிவந்தால் ராதாவே!
செவ்வல்லி மலரைப்போல் செந்நிறமாய் மாறிவிடும்.
உன்காதல் அம்புகளோ உணர்ச்சியைத் தூண்டுங்கால்
கார் நிறத்து என் உடலம் கருஞ்சிவப்பாய் மாறிவிடும்.
காதலே! ராதாவே! வீண் கர்வம் விட்டொழிக!
உன்னருங்காதல் என் உள்ளத்தைச் சுடுகிறது!
மரைமலர் வாயமுதின் மதுரசம் கொணர்க!

பொங்கி வருகொங்கையிலே புலம்புகின்ற முத்து
உந்தன் இதயத்தை என்பால் இழுக்காதோ!
பிடியிடை பேணும் பிறங்கொளி மணிக்கலன்
வலிய உன் அன்பினை வாய்விட்டுச் சொல்லாதோ!
காதலே! ராதாவே! வீண் கர்வம் விட்டொழிக!
உன்னருங்காதல் என் உள்ளத்தைச் சுடுகிறது!
மரைமலர் வாயமுதின் மதுரசம் கொணர்க!

மெல்லிய நின் மலர்ப்பாதம் நல்லிதயம் களிப்பிக்கும்.
என் அன்பின் ஏக்கத்தை உன் அன்பே நிறைவு செயும்.
இன்குரல் ராதையே! இயம்புக நீயே!
செம்பஞ்சுக் குழம்பை உன் சீறடியில் பூசிடுவேன்!
காதலே! ராதாவே! வீண் கர்வம் விட்டொழிக!
உன்னருங்காதல் என் உள்ளத்தைச் சுடுகிறது!
மரைமலர் வாயமுதின் மதுரசம் கொணர்க!

உன்பாதம் என் தலையில் உயர்த்தியே வைத்திடுக.
நஞ்சனைய காதலை அது நசித்திடும் மென்மலர்!
என்னுளே எரித்திடும் காதல் நெருப்பினை
அணைத்திடும் அரிய உன் பாத மலரிணை!
காதலே! ராதாவே! வீண் கர்வம் விட்டொழிக!
உன்னருங்காதல் என் உள்ளத்தைச் சுடுகிறது!
மரைமலர் வாயமுதின் மதுரசம் கொணர்க!

கனிவுறும் இனிமையொடு நயமுறும் காதலை
மூராவைத் தடிந்தவன் ராதையிடம் பேசினான்.
பத்மாவதி மகிழ் பதமுறச் செயதேவன்
களிமகிழ் வெற்றியினைக் கவிதையில் பாடுகிறான்
காதலே! ராதாவே! வீண் கர்வம் விட்டொழிக!
உன்னருங்காதல் என் உள்ளத்தைச் சுடுகிறது!
மரைமலர் வாயமுதின் மதுரசம் கொணர்க!

அலைத்திடும் ராதையே! ஐயுறவு கொள்ளற்க!
மனங்கவர் உந்தன் மதர்த்த கொங்கையும்
இடுப்புமென் இதயம் நிறைகொண் டுளதால்
இனியெந்த நங்கையும் என்னுளே இல்லை!
உருவிலியின் ஆவியே உட்புகுந்தென்னை
தொகையாக எதிர்நின்று தொல்லையைத் தருகின்றது.

மதர்த்த உன்மார்பகம் மருவி அணைப்புழி
வினைப்பயன் கடமையெனச் சடங்குமே நிறைவுறும்.

அன்புறு பேதாய்! அடியனைத் தண்டிப்பாய்!
கூரிய எயிற்றால் குறியென்மேல் இட்டிடுக.
கொடியன்ன கரங்களால் கொஞ்சித் தழுவிடுக.
விம்மிடும் கொங்கையால் விழைந்தென்னை
அணைத்திடுக.
சினந்திடும் தேவியே! சிந்தை கலக்கிடேல்!
காமனின் கூரிய கணைகளும் அம்புகளும்
உயிர்தனைக் குடிக்கவே ஊடுருவிப்பாய்கிறது.

வாய்மொழி நீபுகலாமல் வதைக்கின்றாய் ராதா!
காதல் உணர்வொடு கவிபல இசைத்திடு.
கயற்கண்ணால் என் தாபம் கடிதினில் கொன்றிடு.
வனப் புடை நங்கைநீ கைவிடேல்!
அன்புறு பேதாய்! ஆர்வமுடன் இங்குள்ளேன்.

இலையுதிர்காலப் பவளச் சிவப்பென
பாவையுன் உதடுகள் பளிச்சிடுகின்றன.
கன்னக் கதுப்பினது மென்மைத் தோற்றம்
தேனுறு மலரின் நிறந்தனை ஒக்கும்.
ஆழ்கயத் தாமரை ஒளிவிட்டாங்கு
ராதை! உன் கண்கள் களையினைச் சொட்டும்.
உந்தன் நாசியோ எள்ளின் பூவாம்.
உன்னது பற்களோ மல்லிகை வெள்ளை.
மதன்கணை யெனத்தகு மலர்க்கரம் ஈங்கு
உன் முகம் போற்றியே உலகினை வென்றிடும்.

மதுவினை உண்டபோல் மயங்கிடும் உன் கண்கள்
மதாலசை நங்கையை மனதிலே கொணரும்.
பால்நிலா வென்னப் பளிச்சிடும் உன்முகம்

இந்துமதியெனும் சுந்தரியை நினைவூட்டும்.
உயிர்ப் பொருள் மெச்சிடும் உந்தன் நடையிலோ
மனோரமா எனும் மங்கையே வருவாள்.
வாழையின் தண்டென வனப்புடைத் தொடைகள்
ரம்பையின் அழகினைச் சிந்தையில் நிரப்பிடும்.
பாவையர் போற்றிடும் உன்னுடைப் புணர்ச்சி
கலாவதி செய்கின்ற கடவுளின் பூசையாகும்.
நளினமாய் நெளியும் நங்கையுன் புருவங்கள்
சித்திரலேகை தன் சிமிட்டிடும் நய னமொக்கும்.
துவண்டிடும் ராதையே! தொடர்ந்து நீ நடந்தால்
அரம்பையர் நாணிடும் அழகுடன் மிளிர்கிறாய்.

பதினொன்றாம் பாகம்

களிப்புறு கண்ணன்

இராதையை இறைஞ்சி வேண்டிக்கொண்ட பின்
பகட்டுடை அணிந்த கேசவன் தொடர்ந்து
நறுமலர்ப் படுக்கையை நாடி நடந்தான்.
துருவிடும் கண்களை மறைத்திடும் இரவு
எழுந்ததும் ராதை இன்னணி பூண்டாள்.
தொடர்ந்து நீ செல்லெனத் தூண்டினாள் தோழி!

புகழ்ந்துரை பேசிப் போற்றினான் உன்னை!
அடியிணை வீழ்ந்து வணங்கினான் உன்னை!
ஓடைக் குளிரின் உயர்ந்த புல் அமளியில்
இரவில் மகிழ்ந்திட ஏங்குவான் கண்ணன்!
மதுவைத் தடிந்தவன் நன்றியைக் கொன்றிடான்
ராதையே நீயும் பின் தொடர்ந்து சென்றிடு!

மதர்த்திடும் கொங்கையொடு சிற்றிடை சுமந்து
சிலம்பகம் புலம்பச் செல்லுக நீயே!
தயங்கிடும் நடையினைப் புலம்புது சிலம்பு!
கானில் வாழ் அன்னமாய்க் கடுகியே விரைக.
மதுவைத் தடிந்தவன் நன்றியைக் கொன்றிடான்!
ராதையே நீயும் பின் தொடர்ந்து சென்றிடு!

மெல்லிதய மங்கையரின் மேனிசிலிர்த்திடும்
தேனீயின் சிற்றொலியைத் தேவிநீ கேட்டிடுக!
பாணனைப் போல் கூவுகின்ற பைங்குயிலின் கூட்டம்
காதலின் கட்டளையைக் கவிதையாய்ப் பொழிகிறது.
மதுவைத் தடிந்தவன் நன்றியைக் கொன்றிடான்
ராதையே நீயும் பின் தொடர்ந்து சென்றிடு!

முகிழ்த்துக் கிளைத்திடும் முந்திரிக் கொடியெலாம்
காற்றிலே ஆடுவது கையசைப்ப போல்வதாம்!
கூரிய தொடையாளைக் கூப்பிடும் சைகையது;
ஆதலால் நில்லாது, விரைந்து நீ நடந்திடு.
மதுவைத் தடிந்தவன் நன்றியைக் கொன்றிடான்
ராதையே நீயும் பின் தொடர்ந்து சென்றிடு!

அரியினை மருவிடும் அணையாப் பெருவிருப்பம்
காதலெனும் பேரலையாய் உன்னுளே மோதும்.
பருத்த உன் கொங்கையில் தோற்றுவது என்னவோ?
பளிங்கு நீர்த்துகளா, பால்முத்து மாலையா?
மதுவைத் தடிந்தவன் நன்றியைக் கொன்றிடான்;
ராதையே நீயும் பின்தொடர்ந்து சென்றிடு!

பால் உணர்வுப் போருக்குப் பைந்தொடியே! ராதாவே
அணிபல பூண்டுநீ ஆயத்தமாவதை அறிவர்நின் தோழியர்!
குலுங்கிடும் இடையணி குமுறிடும் வார்முரசம்.
கூச்சமின்றி அவனுடன் கூடிக் களித்திடுக.
மதுவைத் தடிந்தவன் நன்றியைக் கொன்றிடான்
ராதையே நீயும் பின் தொடர்ந்து சென்றிடு!

அவனொடு மருவி அகமகிழ் வேளையில்
உன்கை நகங்களே காதலின் அம்புகள்;
குலுங்கும் வளைகரம் அவனை அணைத்திட!
அரியினை எழுப்புக! அன்பினைப் பெறுக!

மதுவைத் தடிந்தவன் நன்றியைக் கொன்றிடான்
ராதையே நீயும் பின் தொடர்ந்து சென்றிடு!

ஜெயதேவன் பண்ணழகில் அட்டிகையும் ஒளிமழுங்கும்;
அழகுஒரு போட்டியெனில் அதுமுடிவு சொல்லிவிடும்.
அரிகரனை வழுத்தும் அன்புசார் நாவில்
அத்தகு பண்ணிசை மென்மையைக் கொடுத்திடும்.

என்னையவள் நோக்கிக் காதலைக் கதைப்பாள்;
ஆரத்தழுவி விட்டு அங்கமெலாம் பூரிப்பாள்.
என்னையவள் பார்த்தாலும் இன்பம் அடைந்திடுவாள்!
என்றுமே கண்ணன் ஏக்கமுறக் கூறினான்.
உன்னை எதிர்நோக்கும் உன்னுடைய காதலர்
நடுங்குவார், நகைப்பார், வீழ்ந்திடுவார்;
இருள்சூழ் செடிமறைவில் ஏங்கிடுவார் இவ்வாறே!

காரிருள் தன் கண்ணில் கருமையைப் பூசியது.
காதணியாய்க் குவிந்தன தமாலமரப் பூக்கள்.
தாமரையின் மெல் இதழ்கள் தலைமுடியில் குவிந்தன.
மார்பகத்தில் பச்சிலைகள் மான்மதத்தால் கோடிட்ட!
எங்குமிருள் தன்னுடைய கருநிறத்துப் போர்வையினை
புதர்தோறும் போர்த்திப் புறம்போன பின்னர்
தம்முடைய காதலரைத் தழுவிடவே அங்கு செலும்!
ஆரணங்கு பலரையும் அரவணைத்துக் கொண்டுவிடும்.

வெளிர்செம்மைக் காவி உடல்
கற்புறு நங்கையர்தம் காதலரைக் காண்புழியோ
ஒளிசிந்தவோடி நல்இருளைக் கிழிப்பதுபோல்
தமால மரத்துத் தண்ணிய செழும் இலைகளொத்து
அடர்ந்த கருமையினை அன்றிரவு பரப்பிடுது!
காதலெனும் பொன் தரத்தைக்
காண ஒரு உரைகல்லென!

கழுத்திலே புரளும் ஒளிர்மணி மாலையும்
பொன்னாலாய இடையணி கடகம்
கைவளை அனைத்தும் கங்குலை விலக்கிட
புதரின் அருகிலே போந்த கண்ணனை
கண்டதும் நாணியே ராதையும் நின்றாள்.
தோழியோ அவளைத் தூண்டினாள் நெருங்கிட.

வேறு

பசியபுல் தலையிலே பைந்தொடி களித்திடு!
நகைபூத்த உன்முகம் அவன்காதல் விழைகிறது.
மாதவன் உலகில் மயங்கிக் கிடந்திடு!

செவ்விதழ்ப் படுக்கையில் சேர்ந்து களித்திடு.
கருத்துருண்டகொங்கைகளில் பால்முத்துப்புரளுது!
மாதவன் உலகில் மயங்கிக் கிடந்திடு!

மலர்க்குவியல் தன்னிலே மங்கைநீ களித்திடு.
பசிய உன் மேனியும் பாங்காய் மலருது!
மாதவன் உலகில் மயங்கிக் கிடந்திடு!

தண்சாந்தின் நறுங்காற்றில் தணந்து கலந்திடு!
மயக்குறும் உன்கீதம் மோனத்தைக் கலைக்கிறது.
மாதவன் உலகில் மயங்கிக் கிடந்திடு!

கன்னல் சுவைத்திடும் தேனீ ஒலியில் திளைத்திடு!
காதல் உணர்வில் உந்தன் உணர்வும் பொங்கிடுது!
மாதவன் உலகில் நீயும் ஆங்கே மயங்கித் திளைத்திடுக!

கூடிடும் குயிலோசை நாடிக் களித்திடு!
முற்றிய மாதுளையின் முழுவரிசைப் பல்உடையாய்!
மாதவன் உலகில் மயங்கிக் கிடந்திடு!

முந்திரிக் கொடியின் முகிழ்ப்பிலே களித்திடு!
மயக்கிடும் உன்இடைகள் ஏங்கித் தவிக்குது!
மாதவன் உலகில் மயங்கிக் கிடந்திடு!

பைந்தொடியுன் காதலினைப் பத்மாவதிக்கே ஈந்திடு நீயும்!
கவியரசன் ஜெயதேவன் கானம் இசைக்குங்கால்-
மூராவைத் தடிந்த நீ முற்றுமெனை வாழ்த்திடுக!
மாதவன் உலகில் மயங்கிக் கிடந்திடு.

நெடும்போது உன்னையவன் நினைவு
கொண்டிருந்தமையால்
அலுப்படைந்து போனாலும் ஆர்வமோ குறைந்திலது!
கனி அதரத் தேனமுதைக் காதலித்து நிற்கின்றான்.
உன் உடலால் அவன் உருவை அணிசெய்து நின்றிடுவாய்!
உன்பத்ம பாதத்தை உருவேற்றி வணங்குகின்றாள்.
மின்னியே ஒளிருகின்ற உன்பார்வைக் கடிமையவள்!

சிலம்பொலி குலுங்கிடுமிச் சிற்றிடை நல்லாள்
அவன்தன் இருக்கையை அணுகியபோது
அச்சமும் விஞ்சிட அருளும் ததும்பிட
கோவிந்தனில் நிலைத்த அவள் கூரிய கண்களே!

வேறு

விண்ணகத்தில் வெளிப்பட்ட வெள்ளைநிலா கண்டு
தண்ணிய கடல் அலைகள் தவிப்புண்டு பொங்கியபோல்
அழகிய ராதைமுகம் அவன் கண்டபோது
உள்ளத்தே புதைந்திருந்த உணர்வுகள் பொங்கின.
தன்னுடைய உணர்வுகள் பெருகித் ததும்பி
அரிகரன் ஆன்மாவில் நிலைப்பது கண்டாள்.
உள்ளூறு மகிழ்ச்சியும் முகத்தில் தெரிந்தது.
கண்ணனே இவ்வண்ணம் காதல் வயப்பட்டான்.

நீண்டு பெருகிடும் நீல்நிற யமுனையின்
கடுஞ்சுழல் விளைத்திடு வெள்ளிய நுரையேபோல்
மேனியில் ஒளிர்ந்திடும் மென்முத்து மாலையை
நெடியதன் விரல்களால் நீவிக்கொணடிருந்தான்.
தன்னுடைய உணா்வுகள் பெருகித் ததும்பி
அரகரன் ஆன்மாவில் நிலைப்பது கண்டான்.
உள்ளூறு மகிழ்ச்சியும் முகத்தில் தெரிந்தது.
கண்ணனே இவ்வண்ணம் காதல் வயப்பட்டான்.

கரியநெடுந் தோற்றக் கார்மேக வண்ணன்
மென்பட்டுத்துகிலாலே மேனிதனைப் போர்த்திருந்தான்.
தண்கயத் தாமரையின் தண்டுகள் மீதினில்
பூந்துகள் மஞ்சளாய்ப் போர்த்தியது போல!
தன்னுடைய உணா்வுகள் பெருகித்ததும்பி
அரிகரன் ஆன்மாவில் நிலைப்பது கண்டாள்.
உள்ளூறு மகிழ்ச்சியும் முகத்தில் தெரிந்தது.
கண்ணனே இவ்வண்ணம் காதல் வயப்பட்டான்.

கவர்ந்திடும் அழகிய கண்ணனின் முகத்தில்
ஆரணங்கின் பார்வையோ ஆவலைப் பெருக்கிடும்.
செம்மலரிடையில் கருஞ்சிறுபுட்கள் காதல்செய் போழ்தில்
இலையுதிர் கானத்துத் தாமரைக்கயங்கள்
நிறைவனபோன்று-
தன்னுடை உணா்வுகள் பெருகித்ததும்பி
அரிகரன் ஆன்மாவில் நிலைப்பது கண்டாள்.
உள்ளூறு மகிழ்ச்சியும் முகத்தில் தெரிந்தது.
கண்ணனே இவ்வண்ணம் காதல் வயப்பட்டான்.

மலர்முகம் தன்னைத் தைவரும் குண்டலம்
பளிச்சிடும் பகலவன் ஒளிதனைப் பற்றிடும்;
புன்னகை பூத்திடும் செந்நிற உதடுகள்

காமச்சுவையினைக் கடிதினில் கூட்டிடும்.
தன்னுடை உணர்வுகள் பெருகித் ததும்பி
அரிகரன் ஆன்மாவில் நிலைப்பது கண்டாள்.
உள்ளூறு மகிழ்ச்சியும் முகத்தில் தெரிந்தது.
கண்ணனே இவ்வண்ணம் காதல் வயப்பட்டான்.

மேகத் திரளிடை ஒளிர்நிலாத் திட்டுபோல்
கருநிறக் குஞ்சியில் வெண்மலர் விளங்கிடும்.
திலகமாய் நெற்றியில் தீட்டிய சாந்தம்
இரவினில் எழுப்பிடும் ஒளிர்நிலவு போல்வதாம்.
தன்னுடை உணர்வுகள் பெருகித் ததும்பி
அரிகரன் ஆன்மாவில் நிலைப்பது கண்டாள்.
உள்ளூறு மகிழ்ச்சியும் முகத்தில் தெரிந்தது.
கண்ணனே இவ்வண்ணம் காதல் வயப்பட்டான்.

சிற்றின்பக் களிப்பில் சேர்ந்தின்பம் கூட்டுவபோல்
அவனுடை உடல்மயிர் வியர்பொடித்து நிற்கும்.
விம்மிடும் அவனுடை வியத்தகு மேனி
அணிந்திடு கலன்களால் அழகுறத் தோற்றும்;
தன்னுடை உணர்வுகள் பெருகித் ததும்பி
அரிகரன் ஆன்மாவில் நிலைப்பது கண்டாள்
உள்ளூறு மகிழ்ச்சியும் முகத்தில் தெரிந்தது.
கண்ணனே இவ்வண்ணம் காதல் வயப்பட்டான்.

கண்ணனின் வனப்புறு கண்கவர் அணிமணி
ஜெயதேவன் கவியினால் சிறப்புறப் புலப்படும்.
அரியினை மனதினால் அனுதினம் வணங்கி
அவனருள் தன்னை முற்றுமாய்ப் பெற்றிடு.
தன்னுடை உணர்வுகள் பெருகித் ததும்பி
அரிகரன் ஆன்மாவில் நிலைப்பது கண்டாள்.
உள்ளூறு மகிழ்ச்சியும் முகத்தில் தெரிந்தது.
கண்ணனே இவ்வண்ணம் காதல் வயப்பட்டான்.

காதளவோடிய அவளது கண்கள்
இயல்பினைக் கடந்து பிரண்டு துடித்து
மாதவன் அடியிணை நோக்கி மலர்ந்தது.
ராதையும் இங்ஙனம் கண்ணனைக் கண்டபின்
கண்கள் ஆனந்தக் கண்ணீர் பெருக்கின.

அவளது தோழியர் புறத்தே நிற்புழி
தலையைச் சொறிவ போல் புன்னகை மறைத்து
அவனது மஞ்சனம் அருகில் நெருங்கினாள்.
காதலின் கூரிய அம்புகள் துளைத்திடும்
காதலன் முகத்தினைக் கண்ணுற்ற பின்னர்
ராதையின் கூச்சமும் நாணி மறைந்தது.

பன்னிரண்டாம் பாகம்

களிப்புறும் கண்ணன்

அவளது தோழியர் சேய்மையில் போயதும்
ராதையின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.
ஆழ்ந்திடு காதலின் அன்புறு மயக்கொடு
நாணமும் அவளிடைப் போட்டியிட்டன.
ராதையின் இதயப் பாங்கினை அறிந்ததும்
அவளுடன் அரிகரன் அன்பொடு பேசினான்.
மலரொடு பசுந்தளிர் மல்கிய அமளியை
அவளது கண்களும் குறிப்பொடு நோக்கின.

உளங்கவர் ராதை! உன்னிரு பாதமலர்
பசுந்தழைப் படுக்கையில் பதித்துச் சென்றிடு!
இதயம் தன்னொடு இருப்பிடம் தன்னையும்
சூறையாடியே நீ சொந்தமாய்ச் செய்திடு.
நாரணன் தன்னை நம்பியே விரும்பிடு.

இத்துணை போந்திட்ட ஏந்திழை உந்தன்
பாதம் வருடுவேன் பனிமலர்க் கரங்களால்!
பகலவன் போன்றே பளிச்சிடும் உனது
பொற்றொடிச் சிலம்பணி போற்றுவேன் இருக்கையில்!
நாரணன் தன்னை நம்பியே விரும்பிடு!

அமுதே சொட்டும் அழகுடை முகத்தினாய்
என்னுடை அன்பினை இசைந்தே ஏற்றிடு!
மார்பகம் தன்னை மறைத்திடு பட்டுடை
விலக்கியே நம்மிடைப் பிரிவு தவிர்ப்பேன்!
நாரணன் தன்னை நம்பியே விரும்பிடு.

அன்புறு தழுவலுக்கு ஏங்கிடும் கொங்கைகள்
உணர்ச்சியால் விம்மிடும் உண்மையைப் புரிந்துகொள்!
பரந்தஎன் மார்பில் பதித்திடு அவற்றை-
கொழுந்து விட்டெரியும் காதலைத் தணித்திடு.
நாரணன் தன்னை நம்பியே விரும்பிடு.

ராதையே, காதலால் நைந்திடும் அடியனுக்கு
வாய்நீர் அமிழ்தூட்டி வாழ்க்கையை ஈந்திடு,
அமைதியில் நெஞ்சையும் அலைவுறும் உடலையும்
காதலும் ஏக்கமும் கனன்று எரிக்கின்றவே!
நாரணன் தன்னை நம்பியே விரும்பிடு!

உன்குரல் ஓசையின் எதிரொலியாக
இடையணி மணிகள் இயம்பிடச் செய்குவாய்!
இனியகுயி லோசை என்செவி புகுந்து
தாபக் கொடுமை எனைத் தாக்காது காத்திடுக!
நாரணன் தன்னை நம்பியே விரும்பிடு!

சினமெனை அவத்தை செய்வது காண
உந்தன் கண்கள் கூசிடும் இன்று!
கனிவுடன் என்னைக் கண்டுமே நீயும்
ஏக்கம் தவிர்த்து இன்பம் அளித்திடு!
நாரணன் தன்னை நம்பியே விரும்பிடு!

மதுவின் எதிரி மகிழ்ந்திடும் நிலையினை
ஜயதேவன் கவிதை சிறப்புறக் காட்டும்!

உணர்வுடை மனிதரின் உள்ளார்ந்த சிந்தனை
காதற்பெருக்கில் களிமயக் கெய்திடும்.
நாரணன் தன்னை நம்பியே விரும்பிடு!

பொங்கி வருகாதலின் பூரிப்பு மயக்கத்தில்
உள்ளுறும் பாசத்தை உணர்த்தும் செயலென
அவளையும் மீறிய ஆற்றலைக் காட்டியே
கலவிப் போரில் வெற்றியை ஈட்டினாள்.
கைகள் தளர்ந்தினும், இடைகள் தளர்ந்தில.
நேத்திரம் மூடினும், நெஞ்சகம் குலுங்கியது.
காதலில் அரம்பையர் காட்டிடும் ஆளுமை
வெற்றியும் விளைவும் யாஞ்ஞனம் வந்தது?

ஆழ்ந்திடு காதலில் அயர்ந்தவன் இருந்துழி
முற்றிலும் அவனைவிட மீதூர்ந்த நிலையில்
தயக்கமிலாத் தன்மையில் ராதா
தன்னை அணி செய்திட விழைந்திடுவாள் தானே!

யாதவா எந்தன் மார்பினிற் பூசிய
சால்புறு சந்தனக் குழம்பினும் மேலாய்
தண்ணளி கொடுக்குமுன் தளிர்க்கரம் குளிருது!
மதன்கணை தாங்கொணா மார்பகம் மீது
மான் மதத்தால் இரு பச்சிலைக் குறியிடு
அவளது நெஞ்சம் அளவிலா மகிழ்வுற
யதுகுல வீரனுக் கிவ்வுரை கூறினான்.

காதல! எந்தன் கண்கள் இரண்டிலும்
கருவண்டு மொய்ப்ப போல் காட்டுதல் வேண்டி
அஞ்சனம் தன்னை அழகுறத் தீட்டுக!
மதன்கணை எய்திடு வுருவக் கருமையை
உந்தன் உதடுகள் சொந்தமாய்க் கொண்டன.

அவளது நெஞ்சம் அளவிலா மகிழ்வுற
யதுகுல வீரனுக் கிவ்வுரை கூறினாள்.

மானென மருண்டு மைவிழி காலுமொளியை
இறைவா! என்னுடைச் செவிகள் பரப்பிடும்.
ஒளிவட்டம் தன்னிலிரு குண்டலம் அணிவித்து
காதல் மயக்கேற்படுத்தக் கண்ணிவலை உண்டுபண்ணு!
அவளது நெஞ்சம் அளவிலா மகிழ்வுற
யதுகுரல வீரனுக் கிவ்வுரை கூறினாள்.

என்னுடை அழகிய தாமரை முகத்தினில்
அலைத்திடும் கருமயிர் அப்புறம் ஒதுக்குக!
சிள்ளொலி செய்திடு கருவண்டின் கூட்டத்தை
சிந்தையில் நினைவூட்டி முகத்தினில் வீழ்ந்திடும்!
அவளது நெஞ்சம் அளவிலா மகிழ்வுற
யதுகுல வீரனுக் கிவ்வுரை கூறினாள்.

மதியென ஒளிருமென் மை படிந்த புருவத்தில்
மான்மதக் குழம்பினால் குறியினைத் தீட்டுக!
வியர்வை என் மேனியில் வெளிப்பட்டுக் காய்கிறது.
நிலவினை நிழலாக்கி என்னைப் புரந்திடுவாய்.
அவளது நெஞ்சம் அளி அளவிலா மகிழ்வுற
யதுகுல வீரனுக் கிவ்வுரை கூறினாள்.

களியாட்டில் கலைந்திட்ட மென்மயிர்க் கற்றையில்
கண்ணா உன் கரத்தினால் நறுமலர் சூட்டுக!
பன்னிற மயில் தோகை பகட்டினில் நாணுமாறு
காதலின் தோரணம் சாமரத்தால் நாட்டுக!
அவளது நெஞ்சம் அளவிலா மகிழ்வுற
யதுகுல வீரனுக் கிவ்வுரை கூறினாள்.

காதலின் அழுத்தத்தைக் கனிவோடு தாங்குமென்
அழகான இடைப்பகுதி ஆழ்குழிவாய் அமைந்துளது!
பொன் அணி மென்பட்டுப் பூந்துகில் இவற்றாலே
கனிவோடு கண்ணாநீ இனிமையொடு அணிவிப்பாய்!
அவளது நெஞ்சம் அளவிலா மகிழ்வுற
யதுகுல வீரனுக் கிவ்வுரை கூறினாள்.

ஜெயதேவன் அழகுறு செஞ்சொல்லைக் கேட்டற்கு
அன்புடைச் சிந்தையொடு அகமகிழ்ந்து விழைந்திடுக!
இற்றை இருட்கால இன்னலினைப் போக்குதற்கு
அரிகரன் அரியினை ஆரமுதாய்ப் பயன் விளைக்கும்.
அவளது நெஞ்சம் அளவிலா மகிழ்வுற
யதுகுல வீரனுக் கிவ்வுரை கூறினான்.

எழுதுக தொய்யில் எந்தன் மார்பினில்!
பூசுக வண்ணமென் கன்னக் கதுப்பினில்
பூட்டுக இமையணி என்மேல் அழகுற!
பின்னுக கருமலர் கார்நிறக் கூந்தலில்!
வண்ண வளையலென் கைகளில் வரிசையாய்
சிலம்பணி பாதமொடு சேர்த்துப்போடுக!
மஞ்சளுடை தரித்த மாதவக் கண்ணன்
ராதை கூறிய அனைத்தையும் செய்தான்.

அவனது இசைத்திறம், மாலவன் பற்று
காம உணர்விலும் கலையாத சிந்தனை
இப்பாடல் கூறிய இசைவுறு செயல்கள்
அனைத்துமே வெளியிடும் அழகோ யாதெனில்
கவியரசு தேவனின் கற்பனையும் சிந்தனையும்
கண்ணனது ஆன்மாவில் கலந்தூடி நிற்பதுவாம்.
அவன் அருள்பரப்பும் அரிய இக்கீதநூல்
ஆன்றோர் தினம்பாடி அவனிபுகழ்த் தழைக்கட்டும்.

போஜன் பரம்பரை ரமாதேவி புதல்வன்
ஜயதேவன் புகன்ற இக்கீதகோவிந்தம்
கவிதையின் வலிமையைக் கவினுறக் காட்டுவது!
பராசர முனிவரொத்துப் பக்குவத்தைப் பெற்றிட்ட
பக்தரின் குரலில் பரிணமித்து ஓங்கட்டும்.

துணை நின்ற நூல்கள்

1. *Bhagavata Purana* - Gita Press Edition, Korakpur, 1970.

2. *Cilappathikaram* - V.R. Ramachandra Dikshithar, English trans. - S.S.W.P. Society, Chenni, 1931.

3. *Jayadeva's Gita Govinda - Love Song of the Dark Lord*, Ed. & Trans. Barbara Stoler Miller OUP - Indian Reprint, New Delhi - 2.

4. *Jayadeva - Makers of Indian Lit.*, Sahitya Akademi, New Delhi, 1973.

5. *Love Songs of Vidyapathi*, Ed. W.G. Archer, Motilal Banarsidas, Delhi, 1987.

6. *The Book of Krishna* - Pavan, K. Varma Viking, Penguin, New Delhi, 2001.

7. *The wonder that was India*, A.L. Basham, New Delhi, 1971.

8. *அபிதான சிந்தாமணி* - சிங்காரவேலு முதலியார், Asia Educational Service New Delhi, 1981.

9. *கீதகோவிந்தம் - தமிழாக்கச்சாரம்*, டி.எஸ். ராஜகோபாலன், திருவல்லிக்கேணி, சென்னை, *1984*.